Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 12/00
දිනමුරසු වාරමලර් ஜன.16-22, 2000


# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 340

## குடா நாட்டின் கழுத்தில் இறுகும் சுருக்கு

ஒளிகாட்ட வருக!

புத்தாயிரமாண்டு பிறந்துவிட்ட பொழுதினிலே
புதுப்பொங்கல் நாளின்று
பொலிந்து வருகிறது
எத்தனையோ ஆண்டுகளாய் எதிர்பார்த்து
ஏங்கி நின்ற சமாதானம்
இத்தரையில் மீண்டும்
எழுகதிராய்த் தோன்றி எங்கள்
இருளகற்றி
ஒளிகாட்ட
எழுந்தோடி
வருகவே!







## கவர்ச்சி நடிகைக்காக கட்டிப் புரண்ட காதலர்கள்

# முரசம்

## உறுதி மொழி?

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

தற்கொலைக்
குண்டுத்தாக்குதலின்
காயத்துக்குச்
சிகிச்சை பெற்றபின்
நாடு திரும்பிய ஜனாதிபதி
புதிய நூற்றாண்டின்
தன் முதலாவது உரையாடலை
தொலைக் காட்சியில் தோன்றி
நிகழ்த்தியிருந்தார்.

அந்த மூன்று மணித்தியால
மிக நீண்ட உரையாடலில்
இனப்பிரச்சனையைத்
தீர்த்துவிட்டு
தான் அரசியலிலிருந்து
ஓய்வு பெறுவாரென
உறுதி தெரிவித்துள்ளார்.
இது வரவேற்கப் படவேண்டியது.

அத்தோடு,
தீர்வை ஏற்படுத்துவதற்கான
அரசியலமைப்புச் சட்ட
நிர்ணய சபையாக
பாராளுமன்றத்தை
மாற்றுவதற்கு
தேர்தலின்போது
அவர் கேட்டிருந்த
மக்கள் ஆணையையும்
இங்கே வலியுறுத்தியிருந்தார்.

பதவியேற்பு வைபவத்தில்
ஆற்றிய உரையில்
மக்களாணை பற்றிக்
குறிப்பிடத் தவறிய அவர்
தற்போதாவது அதை
ஞாபகப் படுத்திக்கொண்டது
மகிழ்ச்சிக்குரியது.

கடந்த ஆட்சிக் காலத்திலும்
இனப் பிரச்சனையைத்
தீர்ப்பேனென்ற
வாக்குறுதியை இவர்
மக்களுக்கு வழங்கியிருந்தார்.

ஆனால் அதை
நிறைவேற்றத் தவறியிருந்தார்.
அவ்வாறு தான் அதை
நிறைவேற்றத் தவறியதை
இந்த உரையாடலில்
ஒப்புக் கொண்டு,
இம்முறை அதனை
நிறைவேற்றப் போவதாக
உறுதி கூறுகிறார்.

வாக்குறுதியை நிறைவேற்றத்
தவறியதை உணர்ந்த அவர்
தமிழ் மக்கள் தன்னை
எதிர்த்ததன் காரணத்தை மட்டும்
தவறாகப் புரிந்து கொண்டுள்ளார்.

புலிகள்—ஐ.தே.க.வுடன்
கூட்டுச் சதிசெய்து
தன்னை எதிர்த்ததாலேயே
தமிழ் மக்கள் தனக்கு
வாக்களிக்க வில்லையென
இவர் தெரிவித்துள்ளார்.

அது தவறு.
இனப் பிரச்சனை தீரவில்லை;
யுத்த அநர்த்தங்கள்
பெருகிச் செல்கின்றன;
கைதுகளும் கெடுபிடிகளும்
தொடருகின்றன;
புதை குழிகளிலிருந்து
என்புகள் வெளிவருகின்றன.

விடுவிக்கப்படாத
பகுதிகளின் மக்கள்மீது
மாற்றான் தாய்
மனோபாவம் காட்டி
பொருளாதார நெருக்கடிகள்
சுமத்தப்படுகின்றன.
பேச்சுவார்த்தைக்கான கதவுகள்
மூடப்பட்டுள்ளன.

இனப் பிரச்சனைக்கான
தீர்வுக் கெனவே
உருவாக்கப்பட்ட
மாகாண சபைகூட
மற்றைய பகுதிகளில்
இயங்கிக் கொண்டிருக்க,
வட-கிழக்கில் மட்டும்
இத்தனை காலமாகத்
தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இத்தனை இருந்தும்
எதிர்ப்பு இருக்காவிட்டால்
மக்கள் என்பவர்கள்
மாக்களாக அல்லவோ
இருந்திருக்க வேண்டும்.?
புலிகளின் சதியால்தான்
வாக்குகள் விழவில்லையென்பது
யதார்த்தத்தை மறுக்கின்ற
கருத்து.
மக்களின் எதிர்ப்பைத்தான்
புலிகள் செயற்படுத்தியதே
உண்மை நிலை.

மக்களுக்கு இவர்மீது
தனிப்பட்ட கோபம்
எதுவும் இல்லை.

முன்னைய தேர்தலில்
அமோகமாய் ஆதரித்தோர்
இந்தத் தேர்தலில்
எதிர்ப்பை வெளிப்படுத்தியது
ஏனென்ற காரணத்தை
நிதானமாய்ப் புரிந்துகொண்டு,
அதனை நிவர்த்திப்பதே
பொறுப்புள்ள செயல்.

எனவே ஜனாதிபதி
தான் கூறும் உறுதிமொழியைக்
காற்றில் பறக்கவிட்டவர்
என்ற ஒரு அவநம்பிக்கையின்
மத்தியில்தான்
மீண்டும் இந்த
உறுதிமொழிகளை வழங்கியுள்ளார்.

எனினும் அவர்
மரணத்திலிருந்து
பிழைத்து வந்த நிலையில்
கூறும் வார்த்தைகள்
என்ற காரணத்தால்
உளபூர்வமானதாக
இருக்கலாம் என்ற
சிறிய எதிர்பார்ப்பும்
இல்லாமல் இல்லை.

அதனை நிரூபிப்பதே
அவரது கடமை.
அதனை வெறும்
வாக்குறுதி மட்டும்
சாத்தியப் படுத்தாது.

வழி வகையும் அணுகுமுறையும்
அத்தியாவசியமானவை.

*மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை*

**என்றென்றும் அன்புடன்,**
**ஆசிரியர்.**

# ஆன்மீகம்



## இறைவனுக்காக வாழ்தல்

ஒருவன் ஆலயத்தை வலம் வந்து சர்வ திக்கிலும் திரும்பி நமஸ்காரம் செய்கிறான். தான் ஏன் அப்படிச் செய்யவேண்டுமென்று அவனுக்குத் தெரியாது. எல்லாரும் செய்வதைப் பார்த்துக் குருட்டுப் போக்காக அவனும் அப்பழக்கத்தில் ஈடுபடுகின்றான்.

கடவுள் எங்கும் நிறைந்தவர் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுதற்கே அத்தகைய வழிபாடு ஏற்பட்டுள்ளது என்பது அவனுக்குத் தெரியாது. விவேகமில்லாத அந்த அப்பியாசத்தைக் காட்டிலும் கடவுள் எங்கும் நிறைபொருள் என்ற வாசாஞானம் சிறந்தது.

அந்த வாசாஞானத்தோடு நின்று விடுவதை விட சாதகன் காண்கிற அனைத்தும் பரமன் மயம் என்று தியானிப்பது மேலானது. அனைத்தும் கடவுள் மயமாகத் தியானித்து, அவைகளைத் தன் காரியத்திற்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று எண்ணலாகாது.

தான் வாழ்ந்திருப்பது கடவுளுக்காக வென்று கருதித் தனது கர்மத்தின் பயன் முழுவதையும் அவனுக்கு அர்ப்பணம் பண்ண வேண்டும். தான் செய்கின்ற கர்மம் தனக்காகவல்ல, கடவுளுக்காகவே செய்யப்படுகின்றது என்ற நினைவு தோன்றுகின்ற அதே வேளையில் சாந்தியும் வருகிறது.

தனக்கென்று தொழில் புரிபவன் அசாந்தியடைகிறான். இறைவனுக்கென்று தொழில் புரிபவன் இன்பமடைகிறான்.

தொகுப்பு:-பசறையூர் எம்.தில்லைராஜா.

## இறைதூதரின் எச்சரிக்கை

மனித உறுப்பிக்களில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது உள்ளமாகும். இவ்வுள்ளத்தில் பொறாமை, துவேஷம், துர்எண்ணங்கள் போன்ற பல தீய குணங்கள் உண்டாகின்றன.

இவைகளில் பொறாமை என்னும் குணம் மிகமிகக் கொடியது. இவை ஒருவருடைய உள்ளத்தில் ஏற்பட்டு விட்டால் அது குழப்பத்தையும், கெடுதியையும் உண்டாக்கி விடும்.

நிச்சயமாக நெருப்பு விறகைச் சாப்பிடுவது போன்று பொறாமை ஈமானையும் இறை விசுவாசத்தையும் உள்ளத்தில் இல்லாமல் செய்து விடுமென்பது இறை தூதரின் எச்சரிக்கை.

*ஆதாரம் : புகாரி*

இப் பொறாமையை உள்ளத்திலிருந்து எவ்வாறு களைந்தெறியலாம்-குர் ஆன் ஓதுதல், திக்று செய்தல், பசித்திருத்தல், இரவில் நின்று வணங்கல், பாவமன்னிப்புத் தேடல் போன்ற விடயங்களில் ஈடுபடுவதன் மூலம் அகற்றலாம். மேலும் இம்மை, மறுமையின் உயர்வையும் இவைகளினால் அதிகரிக்கச் செய்யலாம்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## பரிசுக்குரிய கவிதை

### எதைக் கண்டு?

வன்னியில் வெடித்த
இப்புன்னகை மொட்டுக்கள்-
தீர்வுப் பொதி கண்டல்ல...
உணவுப் பொதி கண்டு!

அ.சந்தியாகோ -
தென்னகும்புர, கண்டி.

## கவிதைப் போட்டி இல.337

புன்னகை சிந்தும் சின்னக் கிளியே
என்னகம் குளிருது அன்னக் கிளியே
கானகப் பிரச்சனை தணிய வேண்டும் - இப்
புன்சிரிப்பு வானகம் அழியும் வரை தொடர...!

தேவசகாயம்அருள்தாஸ் -
ஆரையம்பதி

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**



### களிப்பு?!

அன்னையின்
அரவணைப்புடன்
சமாதானமும்!
அருகிலிருப்பதாலோ?
இந்த
சந்தோசக்களிப்பு?!

விஜயா - நாவலப்பிட்டி.

### தப்பு!

சிரித்து வாழ்வது
தப்பல்ல;
பிறர் சிரிக்க
வாழ்வதுதான்
தப்பு!

அ.யாழினி -
மட்டக்களப்பு.

### (ச)சி(லி)ரிப்பு

வாய் விட்டுச் சிரித்தால்
போர் விட்டுப் போகுமென்றால்,
நாமிருவரும் மண்ணில் மறையும்வரை
சிரித்திடுவோம்!

யோ.நீரூத்பவான்- மட்டக்களப்பு.

### புன்னகை

புன்னகை மட்டும்
இந்த பூமியில்
நிரந்தரமானால்.....!

தெ.லோஜனா -கொழும்பு- 15

### ஒ(க)ளி

தாயும் சேயும் களிப்புடன்
காலங்கழிக்கும் நாள்
கலங்கரை விளக்காய்
கண்களில் தெரிகின்றது.

திருமதி.ம.ஞானராஜா -
வாழைச்சேனை.

### புன்னகை

முகத்திலோ புதுப்பொலிவு
உதட்டிலோ புன்னகை
யார் வரவைக் கண்டு?

ப. சங்கீதா- கொழும்பு-13.

### எதிர்பார்ப்பு

நாளை பூ மலருமென
இன்று இந்தப் புன்னகையோ?
இப் பூ மலர-இடும்
உரத்தின் விலையறிந்தால்
புன்னகை தான் வருமோ?

ம.திருவரசுராசா - வவுனியா

### ஞாபகம்

இத் துன்ப வேளையில்
ஏனிந்தச் சிரிப்பு?
வள்ளுவர் கூற்று
வந்ததோ ஞாபகம்?

திருமதி வி. கந்தசாமி-'தீபா'-
வவுனியா.

### முகத்தினில்....

மழலையின் முகத்தினிலோ
சிரிப்பு
அன்னையின் முகத்தினிலோ
பூரிப்பு
அதனாலோ
இத்தனை
செழிப்பு...?

எஸ்.எல்.எம்.இரிஷாத் - அலவதுகொட

### சிரிப்பின் பின்னால்...

பெண்ணின் சிரிப்பின் பின்னால்...
ஓர் ஆண் இருப்பான்!
குழந்தையின் சிரிப்பின் பின்னால்...
ஓர் குறும்பு இருக்கும்-ஆனால்
உங்கள் சிரிப்பின் பின்னால்...
என்ன இருக்கோ...?

த.விதுரன்-மட்டக்களப்பு.

### பொ(பு)ன்னாயுதம்

புத்தாயிரமாம் ஆண்டுதனில்...;
புகுந்திட்ட எமக்கு...;
புதுயுகம் படைக்க-கிடைத்த,
புன்னகையே!


கல்லாறு டினேஸ்-
மஸ்கெலியா.

### தேர்தல் நோட்டீஸ்.

எதிரேயுள்ள தேர்தல் நோட்டீஸ்ஸில்
எறிந்துள்ள சாணத்தைப்
பார்த்தா இந்தச் சிரிப்பு?

சாந்தி - பெரியநீலாவணை.

## கவிதைப் போட்டி இல.340



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 22.01.2000

கவிதைப் போட்டி இல.340
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல-1772, கொழும்பு.

### விடிவெள்ளி

விலைவாசி உயர்ந்தின்று
கொலை கொள்ளை மலிந்த நாட்டில்,
மிலேனியம் ஆண்டிலேனும்
விடி வெள்ளி தோன்றுமா?

ஆரையூர் 'வினு' - ஆரையம்பதி-1

### எப்போது?

நிம்மதி இழந்து தவிக்கும்
தமிழனே! உனக்கு
எப்போது இவ் வழகிய
சிரிப்பு- சொல்லடா...!


ஏ.எல்.எம்.றிசாத் - புதிய காத்தான்குடி-04

# வாசக(ர்)சாலை

அன்பின் முரேச!
புதிய சகஸ்திரத்தில் உன்பணி மேலும் உயர வேண்டும். என்னதான் சோதனைகள் வந்தாலும் உன் தமிழ்ப் பணியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.
புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.
க.ரவி, இலுப்படிச்சேனை, செங்கலடி.

என் இனிய முரசே!
உனக்காக காத்திருக்கும் நாட்களில்தான் உன்மேல் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறேன் என்று உணருகிறேன். என் மனதில் ஆழப் பதிந்த முரசே! எம்மை எவராலும் மாற்ற முடியாது. ஆழப் பதிந்த முரசை மறக்கவும் முடியாது, எவராலும் அழித்து விடவும் இயலாது. தடைகளைத் தகர்த்து எங்கள் கையில் தவழும் முரசே, உமக்கு எப்படி நன்றி சொல்வது?
ரெ. புஸ்பரோஜினி, கந்தான.

முத்தான முரசே! உன் அபிமானிகளுக்கு நீ வழங்கியவை ஏராளம்! ஏராளம்! உன் பணி சொல்லிலடங்காது. வாழ்த்த வார்த்தைகளுமில்லை. மலரும் புத்தாயிரமாம் ஆண்டில் ஆயிரமாயிரம் அதிசய, ஆச்சரிய ஆக்கங்கள் அளிப்பாயாக! புத்தாயிரமாம் ஆண்டு வசந்த வாழ்த்துக்கள் உங்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும்!
எஸ்.பத்மா, உமாஜினி, கொழும்பு-10.



என் இனிய முரசே..
நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் அற்புதம். மற்றும் 'நில் கவனி முன்னேறு', 'லேடீஸ் ஸ்பெஷல்', 'பாப்பா முரசு', 'இலக்கிய நயம்', சிறுகதைகள் என்பவை சுவையாகவும் சுவாரசியமாகவும் உள்ளன. இன்றும் என்றும் என்றென்றும் உனது பணி தொடர எனது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.
ப.சங்கீதா, ஏறாவூர்-04.

இனிய முரசே!
வாரத்தில் ஒரு நாள் பொதிகளை சுமந்து வரும் கப்பல் போல், எமது வாசகர் திறன் அறிந்து அறிவு பூர்வமான விடயங்களை அடக்கி வரும் முரசே, உமது ஆக்கங்கள் யாவும் சிறப்பானவையே. அத்துடன் எமது அற்புதன் அண்ணனுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள். உனது பணி மேலும் வளர எமது வாழ்த்துக்கள்.
திருமதி.சுமலினி பரமசாமி, கைதடி (சுவிஸ்)

அன்று தொட்டு இன்றுவரை சாபக்கேடாக தொடரும் இயக்க, கட்சி பிளவுகள் பற்றி சத்தியனின் கட்டுரை தொகுப்பு பிரமாதம். முரசின் தேர்தல் வியூகங்கள் அத்தனையும் அசத்தல். மலரப் போகும் மிலேனியத்தில் முரசு மேலும் மெருகுடன் வெளிவர எமது வாழ்த்துக்கள்.
ரெங்கநாதன் அசோக்குமார், டிக்கோயா.

எனதருமை முரசே!
திக்கெட்டும் பரவும் செய்திகளைத் திரட்டித் தந்து வாசக நெஞ்சங்களைத் தித்திக்க வைக்கும் தினமுரசே! நீ. வாராவாரம் தாங்கி வரும் ஆக்கங்களைத் தேன் சொட்ட வாசித்துப் பயனடையும் ஆயிரமாயிரம் வாசக நெஞ்சங்களில் நானும் ஒருவன். 'நரனின் எக்ஸ்ரே ரிப்போர்ட்' 'இராஜதந்திரியாரின் அலசல்' என்பன மூலம் அரசியல் சதுரங்கத்திலும் நீ தனியிடம் பிடித்திருப்பது உனக்குப் பெருமை சேர்க்கின்றது. 'பாப்பா முரசோ' பாடசாலை மாணவர்களுக்கு வரப் பிரசாதமாய் அமைந்துள்ளது. நீ தேர்ந்து தரும் கவிதைகள், சிறுகதைகள் என்பனவும் மீண்டும் மீண்டும் வாசிக்கத் தூண்டும் தூண்டு கோல்களாய் அமைந்துள்ளன. உன்பணி என்றென்றும் சோடை போகாது தளிர்விட்டுப் பிரகாசிக்க எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.
சோ.சங்கரலிங்கம், திருப்பழுகாமம்-02.

அன்பின் தினமுரசே!
'உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு' என்று வாழ்ந்த அமரர் கௌரவ தினமுரசு ஆசிரியர் அற்புதன் அவர்களின் மறைவு எண்ணற்ற தமிழ் மக்களின் இதயத்தில் நீங்காத வடுவை ஏற்படுத்தி இருப்பது மறைக்க முடியாத உண்மை. தினமுரசே! நீ மறுபடியும் வீரநடை போட வேண்டும் என்பதே எண்ணற்ற மக்களின் பேரவா. முரசே உனக்கு மரணமில்லை. திரு 'அற்புதன்' அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறேன்.
தி.தமயந்தி, கொழும்பு-06.

அன்பின்
என் உயிர் முத்தான முரசே. நீ கொண்டு வந்த மாணிக்க மழையில் மிதக்கிறேன்.
'ஸ்பெஷல் ரிப்போர்ட்', 'அலசுவது இராஜதந்திரி', 'தகவல் பெட்டி', 'மினிசினி', 'தேன் கிண்ணம்', 'அதிசயம் ஆனால் உண்மை', 'இடி அமீன்', 'சிவப்பு வணக்கம்'. அனைத்தும் தனி வழிதான். உன் வழி தனி வழியாக பணிகள் தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.
த.தியாகமூர்த்தி, தினிகத்தேனை.

முரசுத்தாயே!
அற்பர்களினால் அழிக்க முடிந்தது அமரர் அற்புதரின் உடலை மட்டுந்தான்; புகழையல்ல; அவர் புகழ், விண்ணை விட்டகலா விண்மீன்போல், இம் மண்ணை விட்டகலா! இது உறுதியான உண்மை. அவரை மறைப்பதன்மூலம் மாணிக்கம் போன்ற உனது ஒளியை மங்க வைக்க நினைத்த மதிகெட்டவரின் கனவு, மீண்டும் உன் பிரகாசிக்கும் வருகைக்கண்டு, கலைந்து காடேறி மாண்டுவிட்டது.
மா.பிரசன்னா, கிரான்.

அன்பின் முரசே!
உனது இனிய சேவையினை வாழ்த்த நாவில் வார்த்தையில்லை. அப்பப்பா! என்ன புதுமை! அதிசயம்! ஆனால் உண்மை, சிற்பங்கட்டும் சிறுகதைகள் மிகவும் அருமை.
பலே! பலே!
ச.பாரதிதாசன், பதுளை.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

# தலைநகரில் தொடரும் படுகொலைகள்?

# சூத்திரதாரிகள் யார்?

# இனங்காணாவிட்டால் தொடரும் அபாயம்!

தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் அவர்கள் கடந்த 5ம் திகதி பகல் 11.00 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு இதுவரை எவரும் உரிமை கோரியதாகத் தெரியவில்லை. 'தினமுரசு' ஆசிரியர் திரு.நடராஜா அற்புதராஜா அவர்களின் படுகொலை தொடர்பாகவும் இதுவரை எதுவித ஆக்க பூர்வமான தகவல்களும் வெளியானதாகத் தெரியவில்லை. இத்தகைய கொலைகள் நடைபெறும் முறையை அவதானிக்கும் போது இந்நாட்டின் தமிழ் மக்களுக்காகத் துணிந்து குரல் கொடுக்க முன் வருபவர்களின் குரல்வளையை முறித்துவிடுவது என்ற துணிவோடு சிலர் செயற்பட்டு வருகின்றனரோ என்று கருதத் தோன்றுகிறது.

(எமது விஷேட நிருபர்)

இவ்வாறு இலங்கை வாழ் தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள சில பிரமுகர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி இரு கொலைகளும் தமிழ் மக்கள் செறிந்து வாழும் வெள்ளவத்தையில் பட்டப்பகலில் நடந்துள்ளன. இருப்பினும் இக் கொலைகளுக்கான சூத்திரதாரிகள் யாரென்பதை இன்னும் கண்டுபிடிக்க முடியாதிருக்கிறது.

திரு.குமார் பொன்னம்பலம் அவர்கள் உள்நாட்டிலும் பிறநாடுகளிலும் துணிகரமாக விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்து வந்தவர். மேற்கத்தைய நாடுகளில் புலிகளால் நடத்தப்பட்ட பல சர்வதேச மாநாடுகளில் பங்குபற்றி புலிகளுக்கு பகிரங்கமாக ஆதரவு அளித்தவர்.

தினமுரசு ஆசிரியர் திரு.அற்புதராஜா அவர்களுடைய அண்மைக்காலக் கருத்துகளும் புலிகளுக்கு ஆதரவு வழங்குவதாகவே இருந்து வந்துள்ளன. இந்நிலையில் இவ்விருவரது கொலைகளிலும் விடுதலைப்புலிகள் சம்பந்தப்பட்டிருக்க முடியாது என்றே அவதானிகள் கருதுகின்றனர். இருப்பினும் இக் கொலைகளையும் புலிகளே செய்திருக்கின்றனர் என்று வாதாடும் தரப்பினரும் உள்ளனர்.

இக் கொலைகளைப் புலிகள் புரிந்திருக்காவிட்டால் வேறு யார்தான் இவற்றுக்குக் காரணம்?

திரு.குமார் பொன்னம்பலத்தின் கொலையைத் தொடர்ந்து 'புலிகளுக்கு எதிரான தேசிய முன்னணி என்றோர் இயக்கம் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது. இக்கொலையை நேரடியாக பொறுப்பேற்காவிட்டாலும் அவ்வறிக்கையிலுள்ள வாசகங்கள் அந்த இயக்கம் மீது சந்தேகங் கொள்ள இடமளிக்கிறது. இவ்வறிக்கையை வெளியிட்டவர் தன்னை மேற்படி முன்னணியின் கட்டளையிடும் அதிகாரி விஜயரணபாகு என்று இனங்காட்டியுள்ளார். ஆனால் அவருடைய பெயரோ அவ்வியக்கத்தின் பெயரோ இதுவரை எவராலும் அறியப்பட்டதாகத் தெரியவில்லை.

இது இவ்வாறிருக்க, பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய இயக்கம், மேற்படி விடுதலைப் புலிகளுக்கு எதிரான தேசிய முன்னணியைக் கண்டித்து ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது. இதில் தங்களுடைய இயக்கத்துக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் நோக்குடனேயே இவ்வறிக்கை வெளியிடப் பட்டுள்ளதாக அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது,

எது எவ்வாறிருப்பினும் இவ்விரு படுகொலைகளும் ஏதோவொரு பேரினவாத சக்தியின் செயலாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை என்றே அவதானிகள் நம்புகின்றனர்.

## இடருதவிக் கொடுப்பனவில் குழறுபடி?

## தமிழர் ஆசிரியர் சங்கம் ஆட்சேபம்

(காரைதீவு நிருபர்)

"வரலாற்றில் இல்லாத இடருதவிக் கொடுப்பனவு இந்த ஆண்டில் வழங்கப்படுவதை நாம் ஆட்சேபிக்கிறோம்!" என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கும், பொதுநிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சருக்கும் அவசர மகஜரை அனுப்பி வைத்துள்ளது.

முழு வருடத்திற்கும் பூரணமாக வழங்குமாறு கேட்டுக் கொள்ளும் இம் மகஜரில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"1999 ஆம் ஆண்டு ஜூலை முதல் டிசம்பர் வரையிலான காலப் பகுதிக்கே இடருதவிக் கொடுப்பனவை வழங்குமாறு சுற்றுநிருபம் கூறுகிறது. அப்படியானால் ஜனவரி-ஜூன் மாதம் வரை நாட்டில்-குறிப்பாக வட-கிழக்கில் இடர்கள் எதுவும் இடம் பெறவில்லையா?

இவ்விடருதவிக் கொடுப்பனவும்10% ஆக குறைக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் 50% என்றும் பின்னர் அது 25 வீதமாகி கடைசியில் 12 1/2 வீதமாகியது. இன்று அது 10% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. நாட்டில் விலைவாசி உட்பட அனைத்தும் விலை கூடும்போது, இக்கொடுப்பனவு மட்டும் குறைவதன் மர்மம் என்ன?

அடுத்தது கடமைலீவு, விடுமுறை என்பனவற்றையும் கழித்து மிகுதி நாட்களுக்கு மட்டும் வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது. இதன்படி ஆகஸ்ட், டிசம்பர் விடுமுறைகளில் இரு மாதங்கள் இல்லாமல் போகின்றன. இந்நிலை நீக்கப்படவேண்டும்.

சிவில் நிருவாகம் இல்லை என்பதால் இரு வருடங்கள் கொடுப்பனவு பெற்றிருப்பின் அதனைப் பெறத் தகுதியில்லை எனக் கூறப்பட்டுள்ளது. இதனையும் ஏற்றுக் கொள்ளமுடியாது" என்று சங்க பொதுச் செயலர் த.மகாசிவம், இச்சுற்று நிரூபத்தை வாபஸ்பெற்று ஊழியர் நன்மைபெறும் விதத்தில் வழங்குமாறு கேட்டுள்ளார்.

## முன்னாள் பிரதேச சபை தவிசாளரின் வீடு முற்றுகை!

(காரைதீவு நிருபர்)

நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அல்ஹாஜ்.எம்.ஐ.அகமட்டின்வீடு கடந்த வாரம் இரவு வேளையில் பொலிஸாரின் முற்றுகைக்கு உள்ளானது.

சம்மாந்துறைப் பொலிஸார் இம்முற்றுகையை மேற்கொண்டனர்.

சந்தேகத்துக்குரிய ஆட்கள் ஒளித்துவைக்கப்பட்டிருக்கலாம் என்ற தகவலின் அடிப்படையில் இத் தேடுதலை நடத்துவதாக பொலிஸார் கூறினர்.

முன்னாள் தவிசாளர் அகமட் "வீட்டை தாராளமாக சோதனையிடலாம்" என்று கூறி வீட்டைத் திறந்துவிட்டாராம். சுமார் 1/2 மணி நேரம் வீடு தேடுதலுக்குள்ளானது. இறுதியில் எதுவும் இல்லாததால் 'நன்றி' கூறிவிட்டுச் சென்றனராம்.

## மலையகத்தில் புலிகள் ஊடுருவல்?

## சந்தேக நபர்களெனத் தொடரும் கைது!

(கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்தைச் சேர்ந்த கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் புலிகளின் ஊடுருவல் இருப்பதாகக் கருதி தமிழ் இளைஞர்கள் பலத்த சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார்கள்.

கடந்த 7ஆம் திகதி கண்டி நகரில் திடீரென இடம்பெற்ற தேடுதலில் 84 தமிழ் இளைஞர்கள் கண்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். சந்தேகத்துக்கு இடமான சிலர் 14 நாட்கள் தடுப்புக்காவலில் வைக்கப் பட்டிருக்கின்றனர்.

மலையகத்தில் புலிகளின் ஊடுருவல் இருந்து வருவதாகவும் சுமார் ஏழு மின்மாற்றிகள் கடந்த காலப்பகுதியில் குண்டு வைத்து தகர்க்கப்பட்டிருப்பதாகவும் கருதும் பொலிஸார் பலரை சந்தேகத்தின் பேரில் கைது செய்யும் நடவடிக்கை துரிதமாக்கப்பட்டுள்ளன.

மத்திய பிரதேச பிரதி பொலிஸ் மா அதிபர் திரு சிறிசேன ஹேரத்தின் பணிப்பின் பேரில் விசேட புலனாய்வுப் பிரிவினர் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## வாகரையில் குடியேறிய சிங்கள மீனவர்கள் நீர்கொழும்பு திரும்பினர்

மட்டக்களப்பு-வாகரைப் பகுதி கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் படையினரால் கைப்பற்றப்பட்டது தெரிந்ததே. படையினர் அங்கு நிலை கொண்டவுடன் நீர்கொழும்பிலிருந்து சிங்கள மீனவர்களான 36 குடும்பங்கள் வாகரையில் குடியமர்ந்தனர்.

படையினரின் உதவியுடன் அங்கு குடியமர்ந்த சிங்கள மீனவர்கள் வாகரைக் கடற்பரப்பில் மீன்பிடிப் படகுகள் மூலம் மீன்பிடியில் ஈடுபட்டு வந்தனர்.

இந்தப் படகுகள் கடற்கரை ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சமயம் 4 படகு இயந்திரங்களை புலிகள் கழற்றி எடுத்துச் சென்று விட்டனர்.

அந்தச் சம்பவத்தினாலும் சமீப சில நாட்களுக்கு முன்னர் வாகரைப் பகுதி முகாம்கள் மீது தாக்குதல்கள் இடம் பெற்றதாலும் வாகரையில் குடியேறியிருந்த சிங்கள மீனவர்கள் திரும்பிச் சென்று விட்டனர்.

வாகரைக் கடற்பரப்பில் மீன்பிடித்த சிங்கள மீனவர்களுக்கு வேண்டிய வசதிகள் அங்கு அளிக்கப்பட்டிருந்தன. எனினும் அப்பகுதியைச் சேர்ந்த தமிழ் மீனவர்களுக்கு அத்தகைய வசதிகள் எதுவும் கிடைக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது

## அமைச்சர்களின் நடமாட்டங்கள் மட்டுப் படுத்தப்பட்டுள்ளன

தலைநகர் கொழும்பில் விடுதலைப் புலிகளின் தற்கொலைப்படையினர் தொடர்ச்சியாக நடத்திவரும் குண்டுத்தாக்குதல்களைத் தொடர்ந்து, அமைச்சர்கள் பொது வைபவங்களில் கலந்து கொள்வதையும் பகிரங்கமாக நடமாடுவதையும் தவிர்த்து வருகின்றனர். பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமலிருக்கும்படி பாதுகாப்புத்துறையினர் அமைச்சர்களுக்குக் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிகிறது.

கொழும்பு நகரின் பிரதான போக்குவரத்துப் பாதைகளிலெல்லாம் பரிசோதனைத் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பொலிசும் இராணுவமும் ரோந்து சென்று வருகின்றனர், சந்தேகத்துக்கிடமான பகுதிகளைச் சுற்றி வளைத்து அவ்வப்போது தேடுதல் நடவடிக்கைகளும் நடத்தப்படுகின்றன. சந்தேகிக்கப்படும் எந்த நபரையும் கைது செய்து விசாரணைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இருப்பினும் உண்மையான ஊடுருவல்காரர்களைக் கண்டு பிடிப்பது கடினமான காரியமாகவே இருந்து வருகின்றது.

கொழும்பு மாநகரசபை, தெஹிவளை-கல்கிசை மாநகரசபை ஆகியவற்றை உள்ளடக்கிய பிரதேசங்களில் திடீர் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பொலிசும் இராணுவமும் தேடுதல் நடத்தினர். ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டு, பின்னர் கணிசமான தொகையினர் விடுவிக்கப்பட்டனர். இருப்பினும் பலர் தொடர்ந்தும் விசாரிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

இத்திடீர் தேடுதலின் பயனாக விடுதலைப் புலிகள் எனத்திட்டவட்டமாகக் கூறக் கூடிய எவரும் கைது செய்யப்படவில்லை என்றே தெரிகிறது. எதிர்பார்க்கப்பட்ட அளவு ஆயுதங்களோ வெடிமருந்துகளோ கூட அகப்பட்டதாகத் தெரியவில்லை.

கொழும்பு ஃபிளவர் வீதியில், பிரதம மந்திரி காரியாலயத்தின் முன்புறமாக இடம் பெற்ற குண்டு வெடிப்பில் பலர் கொல்லப்பட்டனர். பிரதமர் அலுவலகத்துக்கு அன்று வருகைதரவிருந்த அமைச்சர்களில் ஒருவரையோ இருவரையோ குறிவைத்துத்தான் தற்கொலைக்குண்டுதாரி காத்திருந்ததாகவும் அவருடைய நடமாட்டத்தில் சந்தேகம் கொண்ட காவல்துறையினர் அப்பெண்ணை அழைத்து விசாரித்துக் கொண்டிருக்கும் போதே, தனது குட்டு வெளியாகு முன்னர் அக்குண்டுதாரி குண்டை வெடிக்க வைத்து விட்டார் என்றும் கூறப்படுகிறது.

## மஸ்கெலியாவில் குண்டுகள் கண்டுபிடிப்பு?

மஸ்கெலியா நகரில் சக்தி வாய்ந்த குண்டுகள் கைப்பற்றப்பட்டிருப்பதாக தெரிவிக்கும் பொலிஸார், மட்டக்களப்பு, அம்பாறை போன்ற கிழக்கு மாகாணத்தில் இருந்து பதுளை, மகியங்கனை ஊடாக கண்டிக்கும் வேறு இடங்களுக்கும் வரும் தமிழ் இளைஞர்கள் யுவதிகள் பற்றிய கவனயீர்ப்பு பெரும் அளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை கடந்த வருடம் மாத்திரம் மலையத்தில் 20தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருப்பதாக பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவிக்கிறார். இவர்கள் மட்டக்களப்பு, வாகரை போன்ற இடங்களில் இருந்து மத்திய மலை நாட்டுக்கு வந்த தமிழ் இளைஞர்களாவர். இவர்கள் புலிகளுடன் சம்பந்தப்பட்டவர்களாகவே இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க பொலிஸாரின் பணிகளுக்கு உதவும் பொருட்டு மோப்பம் பிடிக்கும் நாய்களும் சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன.

## பஸ் தரிப்பு நிலையம்

அம்பாறை மாவட்ட வீரமுனையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரின் அன்பளிப்பில் உருவான 'மிலேனியம் பஸ்தரிப்பு நிலையம்' ஆண்டிசந்தியில் புத்தாயிரமாண்டு முதலாம் திகதி வீரமுனை கிராம அபிவிருத்திச் சங்க ஏற்பாட்டில் திறந்து வைக்கப் பட்டது.

## களுத்துறைச் சிறை மோதல்கள்

## தொடரும் அபாயம்!

களுத்துறைச் சிறைச்சாலையில் முறுகல் நிலை இன்னும் தீர்ந்தபாடில்லை. இம்மாதம் 6ம் 7ம் திகதிகளில் களுத்துறைச் சிறைச்சாலையில், தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்கும் சிறைக்காவலர்களுக்குமிடையில் ஏற்பட்ட மோதலில், இரு தமிழ்க் கைதிகள் இறந்துள்ளனர். சிறைக் காவலர்கள் உட்பட காயம்பட்ட பல கைதிகள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள கைதிகளை மருத்துவமனையில் பணிபுரியும் பெரும்பான்மையின சிப்பந்திகள் தாக்கியதாகவும் தகவல்கள் வெளியாயின. ஆனால் இதில் உண்மையில்லை.

படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகளுக்கு மருத்துவமனைப் பணியாளர்கள் மருத்துவ உதவி எதையும் வழங்காதிருந்துள்ளனர். இதேவேளை சிறு சிறு காயங்களுடன் அங்கு அனுமதிக்கப்பட்ட சிறைக் காவலர்களுக்கு உடனடியாகவே மருத்துவ உதவிகளை வழங்கியுள்ளனர்.

இது தவிர அங்கு அனுமதிக்கப்பட்ட கைதிகளின் கைகளிலும் கால்களிலும் விலங்குகள் மாட்டப்பட்டிருந்தன. இரு கைதிகளுக்கு ஒரே கட்டில் என்ற அடிப்படையில் படுக்க வைக்கப்பட்டிருந்தனர். இத்தகைய கொடுமைகளை தமிழ்க் கைதிகள் மருத்துவமனையிலும் அனுபவிக்க வேண்டிய நிலையிலுள்ளனர்.

களுத்துறைச் சிறையில் மொத்தம் 740 சந்தேக நபர்கள்- புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் புலிகள் இயக்கத்துடன் எத்தகைய சம்பந்தமும் இல்லாதவர்களாகவும் இருக்கக்கூடும். உரிய காலத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, குற்றவாளிகள் எனக் காணப்படுவோர்மீது வழக்குத் தொடரலாம். ஏனையோர் நிரபராதிகள் எனக் காணப்பட்டால், அவர்களை விடுதலை செய்து விடலாம்.

குற்றமற்றவர்களையும் குற்றவாளிகளையும் ஒரே மாதிரியாக நோக்கி, சிறையிலடைக்கும்போது அதுவும்- நாட்கணக்கில்லாமல்- வருடக் கணக்கில்- அவர்களும் விரக்தி நிலையை அடைந்து மென்மேலும் குற்றம் புரியும் மனோபலத்தையே அடைய நேரிடும்.

வருடக் கணக்கில் அடைபட்டுக் கிடப்பவர்கள், தங்கள் விசாரணைகளைத் துரிதப் படுத்தும்படி பல தடவைகள் உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தியுள்ளனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல தடவைகள், தங்கள் நிலையை வெளிப்படுத்தி மகஜர்கள் அனுப்பியும் எதுவித பலனும் கிடைக்கவில்லை. இதனால்தான் அவர்கள் "சாகும் வரை உண்ணாவிரதம்!" என்ற சாத்வீகப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

கடந்த ஜனவரி முதல் வாரத்திலும் களுத்துறைச் சிறைச்சாலைக் கைதிகள் உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ளனர். அவர்கள் எழுப்பிய கோஷம் அங்கிருந்த சிறைக் காவலர்களுக்கு ஆத்திரத்தை ஊட்டியுள்ளது. இதனால் கைதிகளை காவலர்கள் தாக்கிய போதே அவர்களும் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கைதிகள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டமையினால்தான் இரு தமிழ்க் கைதிகள் உயிரிழந்துள்ளனர். இவர்கள் உயிரிழக்கக் காரணமாக இருந்தவர்கள் இனங்காணப்பட்டவோ அல்லது அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவோ இதுவரை போதுமான அக்கறை செலுத்தப்படவோ இல்லை என்று தெரிய வருகிறது.

### அனுமதி மறுப்பு

இதற்கிடையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கைதிகளைப் பார்வையிட தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களான திரு.மாவை சேனாதிராஜா, திரு.பொன் செல்வராஜா, யாழ் மாநகர சபை உபதலைவர் திரு.ரவிராஜ் ஆகியோர் சென்றுள்ளனர். இவர்கள் தங்களுடைய அடையாளங்களைத் தெரியப்படுத்தியும் மருத்துவமனைக்குள் செல்ல அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து நீதி அமைச்சுடன் தொடர்பு கொண்டதன் பின்னரே அனுமதி வழங்கப்பட்டது. இக் குழுவினர் மருத்துவமனை சென்ற போதும், கைதிகள் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டு 48 மணித்தியாலங்களின் பின்னரும் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படவில்லையாம்.

சந்தேக நபர்களென்று சிறையிலடைக்கப்படும் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் மனிதாபிமானத்துக்கு முற்றிலும் மாறுபட்டதாகவுள்ளது. இது நீடிக்குமானால் இவர்கள் மிருகங்களாகவே மாறிவிடுவார்கள் என்ற மனிதநேயத்துடன் தொடர்புடையவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

## மலையக தமிழ் மாணவர்கள் சிறப்புச் சித்தி

(கண்டி நிருபர்)

மலையகத்தைச் சேர்ந்த கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை, இரத்தின புரி ஆகிய மாவட்டங்களில் இருந்து ஜீ.ஸி.ஈ. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய இந்திய வம்சாவளி மாணவர்கள் உட்பட, ஏனைய தமிழ் மாணவர்களும் அண்மையில் வெளியாகியுள்ள பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் சிறந்த முறையில் தேறியிருப்பதாக கல்விமான்கள், கல்வி அதிகாரிகள் ஆகியோர் தெரிவிக்கின்றனர்.

ஏராளமானோர் பல்கலைக் கழகம் புகுவதற்கு ஏற்றவகையில் பரீட்சைப் பெறுபேறுகள் இடம் பெற்றிருப்பது, மாணவர்களின் ஆர்வத்தையும் அவர்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள், நிருவாகத்திற்குப் பொறுப்பான அதிபர்கள் ஆகியோரின் கடமை உணர்ச்சியைப் பிரதிபலிப்பதாக மலையகப் பிரதேச வலய தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## சாரதாம்பாள் படுகொலை!

## பெண்கள் நிறுவனங்கள் கண்டனம்

யாழ்ப்பாணம்-புங்குடுதீவில் அம்மன் ஆலயக் குருக்கள் மகள் சாரதாம்பாள் (20) மிகக் கொடூரமான முறையில் பாலியல் வதைக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டது தெரிந்ததே.

இச்சம்பவம் குறித்து 'கிழக்குப் பிராந்திய பெண்கள் நிறுவனங்களின் கூட்டமைப்பு' அதன் வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளதுடன், குற்றவாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டுமெனவும் கேட்டு ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பியுள்ளது.


"யாழ்ப்பாணத்தில் சாரதாம்பாள் மாத்திரமல்ல, மாணவி கிருஷாந்தி, கோண்டாவிலைச் சேர்ந்த ரஜனி, வட்டுக் கோட்டையில் ஓர் இளம் பெண், சாவகச்சேரியில் ஒரு இளம் பெண், நெல்லியடியில் இன்னுமோர் பெண், புங்குடுதீவில் ஊமைப் பெண்ணொருவர் போன்றோரை இராணுவத்தினர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திப் படுகொலையும் செய்துள்ளனர்.

தொடர்பு சாதனங்களில் பகிரங்கப்படுத்தப்படாத இவை போன்ற இன்னும் பல சம்பவங்கள் வடக்கிலும், கிழக்கிலும் தொடர்ந்து நடைபெறுகின்றன.

பெண்களின் இயல்பான நிலையைப் பாதிக்கும் இது போன்ற சம்பவங்கள் நாட்டின் எப்பாகத்திலும் மேலும் இடம் பெறாமல் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்" என்று அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளன.



## மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச் சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது ஃபெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி**
**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
**Fax-00941342464.**
**Tel-00941431137.**
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
**342463-344831**

---

## L ட்றைவிங் பயிற்சி

பிரபல போதனாசிரியர்

**K. Senthil Moahan**
Registered Driving Instructor
(All Class of Vehicle)

* முழுமையானதும் தெளிவானதுமான விளக்கம்
* ஆண் /பெண் இருபாலாருக்கும் விரைவான பயிற்சி
* பயிற்சியின் முடிவில் லைசென்ஸ் பெற்றுத்தரப்படும்
* இன்டர்நாஷனல் லைசென்ஸிற்கும் ஒழுங்கு செய்யப்படும்
* உங்களுக்கு ஏற்றவாறு நேர ஒழுங்கு செய்துதரப்படும்
* சனி ஞாயிறு உட்பட வாரத்தில் முழு நாட்களிலும் பயிற்சி

No. 385 1/1, Galle Road, Wellawatta,
Telephone : 075-516532, 075-522171

---

## தெய்வீக மருத்துவம்

**சர்வதேச சமூக தெய்வீக சேவை**
**NTSF-CHARITY REG. NO.HA04BT219**

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல், கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன்-மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

ஆயுர்வேத மருத்துவர் "பாலுசோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது ஃபக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS INLIFE AND LET LIGHT SHINE"

---

## மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர் **Dr. P.** ஆறுமுகம் அவர்களை

**கொழும்பில் ஜனவரி 20,27 வரை சந்திக்கலாம்**

**Dr. P.Arumugam S.A.M.P. REG.9492**
**SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.**
T.P:- 338163-336165, 338166, Fax:- 338161, செல்டெல் No. 072-609388

**கல்முனையில் பெப்ரவரி 05, 06ம் திகதிகளில் சந்திக்கலாம்**

T.M.M. பார்மசி - கல்முனை. T.P. 067-29329

**வவுனியாவில் பெப்ரவரி 12,13ம் திகதிகளில் சந்திக்கலாம்**

(தயவு செய்து பதிவுசெய்து கொள்ளவும்)
(Vanni Inn, 2ம் குறுக்குத் தெரு, ஞானவைரவர் கோயில் ஒழுங்கை, T.P.024-22074, 21405,21406

கடிதத்தொடர்பு:- **Resident T.P. 065-24019**
**Dr. P.Arumugam S.A.M.P.**
**No. 51/5, Koolavady Road, Batticaloa . SRI LANKA.**

---

## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு. மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**
50, THEATRE ROAD, NINTHAVUR-21, SRI LANKA. ☎ 067-50349

---

## சிங்கப்பூரில் இலங்கையர்களுக்கான திருமண சேவை

வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை சிறந்த முறையில் சமய முறைப்படி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். மற்றும் பதிவுத் திருமணம், தங்குமிட வசதி, தங்கும் இடங்களில் சமைத்துச் சாப்பிடும் வசதி, போக்குவரத்து வசதிகள், அனைத்தும் சிறந்த முறையில் குறைந்த செலவில் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.

தொடர்பு. N .THANGA,
T.PRINCI.
5. STARLIGHT ROAD. SINGAPORE 217758
OPPOSITE RANGOON ROAD T.P.2974924,
HP 97546610. HP 97651074

---

## புத்தாயிரமாம் ஆண்டில்

## Bright Book Centre (Pvt) Ltd

கல்விப் பணிகளில் இணைந்து
உங்கள் தகைமைகளையும்
வேலையையும்பெற்றுக்கொள்ள
வாழ்த்துகிறது

---

## Bright - இன்

தபால் மூலக் கல்வித்திட்டம்

* 90 Days Spoken English
* Spoken Sinhala
* Spoken Tamil
* Business English
* Method of Computerised Book Keeping & Accountancy (MCBA)
* Nursery Teacher Training Coures (NTTC)

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க.

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD**
**S-27, First Floor, C.C.S.M. Complex**
**Colombo - 11. T.P. 434770**

---

## சைப்பிரசில் கல்வி கற்றல்

கனடா, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், நியூ சீலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு இடமாற்றம் பெற வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**விஸா உறுதிப்படுத்தப்படும்**

ஜனவரி/பெப்ரவரி தவணைக்கு இப்பொழுதே பதிவு செய்து கொள்க.

**மில்லெனியம்**

இல. 1/10, கொழும்பு பிளாசா,
இல. 50, காலி வீதி, வெள்ளவத்தை.
(வெள்ளவத்தை ஜும்மா பள்ளி வாசலுக்கு அடுத்ததாக.
அலுவலக நேரம் : காலை 9.30 முதல் மாலை 4.30 வரை)

**Tel: 074 - 515339, 505744**

---


## சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

**SHAKTHY SARAVANA,**
**48/12, SRI WIMALASARA ROAD, KALUBOWILA, DEHIWALA.**
**T.P.: 723646.** நேரில்-காலை 8மணி முதல் மாலை 2 மணிவரை

வியாழன் விடுமுறை

---



## அஸ்மா நோய்க்கு வைத்தியம்

* தொய்வு * இழுப்பு * இளைப்பு * மாய்ச்சல்
* மூச்சுத்தட்டல் * மண்டைச்சளி * நெஞ்சுச்சளி * தடிமன்
* இருமல் * கண்கடி * மூக்கடைப்பு * பீனிசம்
* தலைவலி * தும்மல் * நாசிஅரிப்பு * மூக்கால்நீர்வடிதல்

போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய உடலுக்கு பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துகளைக் கொண்டு கிரந்தியான, குளிரான, சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல், குளித்தல் போன்ற பல விளக்க முறைகளுடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்

*02.05.98 வீரகேசரி பேப்பரில் வெளிவந்தது*

அஸ்மா நோயைக் குணப்படுத்திய *டாக்டருக்கு நன்றி*

பலவருடங்களாக அஸ்மா நோயினால் மிகவும் கஷ்டப்பட்டு மூன்று நேரமும் மருந்துகள் பாவித்தும் நேர காலமின்றி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்து நடக்கவும் முடியாத நிலையில் சென்ற என்னை 25, சில்வெஸ்ரர் வீதி, மவுண்ட்லேவினியா(கல்கிசை)இல் வைத்தியம் செய்யும் அஸ்மா சிகிச்சை நிபுணர் Dr. சுறாஜ் சோமசுந்தரம் அவர்கள் சிகிச்சை அளித்து முழுக்குணமடைய வைத்துள்ளார். பல மாதங்களாக மருந்தே பாவிக்காமல் ஒரு காலத்தில் இப்படியான நோயாளியாக இருந்தேனா என்ற நினைப்புக் கூட இல்லாமல் சந்தோஷமாக இருக்கிறேன் என்பதை இந்நோயால் கஷ்டப்படும் பிற நோயாளர்களுக்கு அறிவிப்பதன் மூலம் என் கண்கண்ட தெய்வமான டொக்டருக்கு நன்றியைத் தெரிவிக்கிறேன். சு. மகேஸ்வரி 221/6, நாயக்கந்த வீதி, ஹெந்தலை, வத்தளை.

மூச்சு வந்து ஆறுதலாக இருக்கிறேன், மற்றும் கலியாணம் முடித்து சந்தோஷமாக இருக்கிறேன் என்கிறார் அக்கரைப்பற்று நியூ மூர் வீதியைச் சேர்ந்த முகமட் தம்பி என்பவர்.

மாடிப்படிகள் ஏறுவதற்குக் கஷ்டப்பட்ட நான் இப்பொழுது இருபது தேங்காய்கள் கொண்ட சாக்கு மூடையைத் தூக்கிக் கொண்டு மாடிப்படிகள் ஏறும் அளவிற்கு சுகம் பெற்று விட்டேன் என்கிறார் கொட்டாஞ்சேனை, இராமநாதன் மாவத்தையைச் சேர்ந்த தியாகராஜக் குருக்கள் என்பவர்.

டாக்டர் சுறாஜ் சோமசுந்தரம் Ph.Dr(Ind) ; M.B.B.Sch (Cey)
அஸ்மா சிகிச்சை நிபுணர் Govt. Reg. No : A 1553 (1970)

பார்வை இடப்படும் இடங்கள்

| | |
|---|---|
| 25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசை மவுண்ட்லேவினியா-(கொழும்பு) (பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஒடியன் தியேட்டர் காலி வீதி) | 44A, பாடசாலை அவெனியு, புகையிரத நிலைய(ஸ்ரேஷன்) வீதியூடாக, தெகிவளை.(கொழும்பு) (பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் தெகிவளைச் சந்தி) |
| இவ்விடத்தில் பழைய நோயாளர்களும் மற்றும் பதிவு செய்த புதிய நோயாளர்களும் செவ்வாய்-வியாழன்-சனிக்கிழமைகளில் காலை 9.00 மணி முதல் 12.00மணி வரையும், தினமும் மாலையில் 4.00 மணி முதல் 7.00மணி வரையும் பார்வையிடப்படுவர். | இவ்விடத்தில் தொலைபேசி மூலம் பதிவு செய்யப்பட்டு நேரம் பெறப்பட்ட புதிய நோயாளர்கள் மட்டுமே திங்கள்-புதன்-வெள்ளிக் கிழமைகளில் காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரையும் இதே நாட்களில் இரவில் 9.00 மணி முதல் 10.30 மணி வரையும் பார்வையிடப்படுவர். |
| தொலைபேசி இல : 074-201582 | தொலைபேசி இல : 728767 |

காலநிலை காரணத்தால் தற்சமயம் தினமும் நோயாளர்கள் அதிகம் இருப்பதினால் மேலதிக நாட்களிலும் மேலும் ஒரு புதிய இடத்திலும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. தூர மாவட்டத்திலுள்ள புதிய நோயாளர்கள் நான்கு நாட்களுக்கு முன்பு தொலைபேசி மூலம் பார்வையிடப்படும் நாளையும் நேரத்தையும் பதிவு செய்து பிரயாணத்தை ஆரம்பிக்கவும்.

அவசர தொலைபேசி இலக்கம்: 078-650516
E-mail - drsuraj @eureka.lk

---

சகல விதமான வாத்தியக் கருவிகளையும் உதிரிப் பாகங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும் அவற்றை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்.



## SAI SANGEETHA

L.G. 123, Peoples Park, (நிலத்தளம்)
Gaswork Street, Colombo -11. Tel : 445102

---

உலகப் புகழ்பெற்ற

## எக்ஸ் ஒயில்

★வாதத்தால் வரும் வலிகள்
★உணர்ச்சியற்ற பாகங்கள்
★பிரயாணக்களைப்பு
★தலைப்பாரம்
★தலைச்சுற்று
★ஜலதோஷம்
★வயிற்றுவலி
★தலைவலி
★காய்ச்சல்
★பல்வலி
★காதுவலி
★மூக்கடைப்பு
★பூச்சிக்கடிகள்
★தசை வலிகள்
★சுளுக்கு ★இருமல்
★மதுவால் ஏற்படும் பிரச்சினை




**ஆகியவற்றிக்கு உடனடி நிவாரணி**

ஏக விநியோகஸ்தர்

**SINGHA HOLDINGS (PVT) LTD.**
14, Ground Floor-Welikada Plaza-Rajagiriya.
Tel: 888214 Fax: 682984

---

## திலகவதியார் மகளிர் இல்லம்

## THILAKAVADIYAR GIRLS HOME

THIRUPPALUGAMAM. BATTICALOA, SRI LANKA.
Regd. No.NEP/PCC/CE/30



அன்பான எம் இனிய தமிழ் உறவுகளே!

### எமது வாழ்வு வளம்பெற நிதி உதவி கோரல்

நாங்கள் எதுவும் அறியாத சின்னஞ் சிறுவர்கள். அம்மாவுடனும், அப்பாவுடனும், இன்பமாக இருக்க வேண்டிய காலத்தில், வன்செயல் காரணமாக பிறருக்கு எந்த தீமையும் செய்யாத அப்பாவிகளான எங்கள் அன்புக்குரிய தாயையும், தந்தையையும் சிறுவயதிலே இழந்து சொல்லமுடியாத மிகவும் துயரமான நிலையில் வாழ்ந்தோம். இன்நிலையில் திருப்பழுகாமம், திலகவதியார் மகளிர் இல்ல நிருவாகிகள் எம்மை பொறுப்பேற்று பாடசாலைக்கு அனுப்பி எமக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் வழங்கி, தங்களது உடன் பிறப்புக்களாக எம்மை நேசித்து அன்புடன் வழிநடத்துகின்றனர்.

உலகெங்கிலும் வாழ்கின்ற எம் தமிழ் உறவுகள் பலர் இறந்த ஆத்மாக்களின் நினைவாகவும், பிறந்த தின நினைவாகவும், வேறு சில நினைவாகவும் எமது வங்கிக் கணக்கிற்கு பணம் அனுப்பி உணவு வழங்குகின்றனர். பலர் எமது தேவைகளை நிறைவு செய்வதற்காகவும் நிதி உதவி செய்கின்றார்கள். அவர்களது உதவிகளாலும், ஒத்துழைப்புக்களாலுமே எமது சீரற்ற வாழ்வு வளம்பெறுகின்றது.

எமது இல்லத்தில் நாட்டின் பல இடங்களையும் சேர்ந்த 42 சிறுமியர்கள் தற்போது தங்கியுள்ளோம். எமது இல்லம் மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற மிகவும் பின் தங்கிய பகுதியில் அமைந்துள்ளதால் பொது மக்களினதும், நிறுவனங்களினதும் உதவிகள் மிகவும் அரிதாகவே உள்ளது.

எனவே எமது வாழ்வு வளம்பெறுவதற்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வசிக்கின்ற எம் தமிழ் உறவுகளாகிய உங்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் தங்களால் இயன்ற நிதி உதவியினை சிறுவர்களாகிய நாம் எதிர்பார்க்கின்றோம்.

ஒரு நாள் உணவுச் செலவிற்காக ரூபா 3,000 செலவாகின்றது.

நன்றி,

**"தர்மம் தலைகாக்கும். தக்க சமயத்தில் உயிர்காக்கும்"**

இவ்வண்ணம்,
நிருவாகிகள் சார்பாக,
இல்லச் சிறுமிகள்
Telephone No. 065 - 50189

A/C No. 20135
Peoples Bank.
Kaluwanchikudy (E.P)

# குடாநாட்டின் கழுத்தில் இறுகும் சுருக்கு

**-நரன்-**

**யாழ்** குடாநாட்டுக்குச் சோதனையான காலம் இப்போது ஆரம்பித்திருக்கிறது. பாதுகாப்பு நிலவரங்களில் அரச தரப்பில் கவலைக்கிடமானதாக மாறி வருகின்றது. குடாநாட்டிலுள்ள மக்களைத் தான் வென்றெடுத்து விட்டதாக அரச உலகுக்குப் பறைசாற்றி வந்தது. ஆனால் அந்த மக்களிடையேயும் நிலைமை மாறிவிடக் கூடும் என்ற அச்சம் எழுந்துள்ளது.

இவையாவும் புலிகளின் அண்மைய வன்னித் தாக்குதல் வெற்றியின்பின் எழுந்துள்ள புதிய நிலவரங்கள். சென்ற ஆண்டு இறுதிப்பகுதியில் புலிகளின் மாவீரர் தினத்தையண்டி நிகழ்த்தப்பட்ட வன்னித் தாக்குதல், யாழ்ப்பாணத்துக்குத் தரைப் பாதை அமைக்கவென இலங்கை இராணுவத்தினர் மூன்று ஆண்டுகளுக்கு மேலாகக் கைப்பற்றிச் சென்ற பிரதேசங்களெல்லாவற்றிலிருந்தும் அவர்களை மூன்று நாட்களுக்குள் அடியோடு விரட்டியனுப்பியதை யாவரும் அறிவோம்.

தாக்குதலில் புலிகள் வெளிப்படுத்திய யுத்த ஆற்றலும், உபயோகித்த புதிய நீண்ட தூரம் சென்று தாக்கவல்ல ஆயுதங்களும் யுத்தத்தின் சமபல நிலைமை பாரிய அளவில் மாறிவிட்டதை எடுத்துக்காட்டியிருந்தது.

இத் தாக்குதலின் தொடர்ச்சியாக மன்னாரின் தள்ளாடி முகாம்மீது புலிகள் தாக்க ஆரம்பித்தனர்.

புலிகளின் வசமுள்ள ஆட்லரி சுடுகலன்களும், மோட்டார்களும் தொலைவிலிருந்து, வசதியான நிலையெடுத்து தொடர்ந்து தாக்கிக் கொண்டிருக்கக் கூடிய தன்மையை புலிகள் தரப்புக்கு அனுகூலமாக்கிக் கொடுத்திருந்தன.

மன்னார் தாக்குதல் முகாமினை சேதப்படுத்தவும் தொல்லை கொடுக்கவும் கூடியதாக அமைந்திருந்ததேயன்றி, அதைத் தகர்த்துக் கைப்பற்றக் கூடியதாக இருக்கவில்லை. உண்மையில் அது அவர்களின் பிரதானமான நோக்கமாகவும் இருக்கவில்லை.

பிரதான நோக்கம்-யாழ்க் குடாநாட்டை நோக்கியிருந்தது. ஆனையிறவு முகாமைத் தாக்கி, தடையை உடைத்துக்கொண்டு குடாநாட்டுக்குள் புகுவதையே மையமாகக் கொண்டிருந்தது.

அப்படியான ஒரு நகர்வை உணர்ந்து விடாதிருக்க இராணுவத்தினருக்குப் போக்குக் காட்டும் வகையிலேயே மன்னார் தாக்குதல் அமைந்திருந்தது.

குடாநாட்டுத் தாக்குதலுக்கு வசதியாக தேர்தல் காலம் அமைந்திருந்தது. தேர்தலின் போது பாதுகாப்புக் கவனம் மொந்த நாட்டுக்குமாக விஸ்தரிக்கப்பட்டிருந்தது. அதேவேளை தேர்தலையொட்டிய எதிர்க் கட்சியின் செயற்பாடும்அங்கே முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இதேவேளை படையினர் மத்தியில் ஆட்சி மாற்றம் பற்றிய கிலேசமும் புரையோடத் தொடங்கியிருந்தது. படையினரில் எதிர்க் கட்சிக்கு ஆதரவான பகுதியினரும் கணிசமான அளவு இருந்தனர். கடந்த 17வருட கால யு.என்.பி. ஆட்சியில் உள்வாங்கப்பட்ட கணிசமான தொகையினர் படைகளின் வெவ்வேறு மட்டங்களில் இருந்து வந்தனர்.

ஆட்சி மாறப்போகிறது என்ற ஒரு அபிப்பிராயம் இவர்களுக்கு யுத்த முனைப்பைத் தளர்த்தியிருந்தது. ஆட்சி மாறினால் தாம் திரும்பிச் சென்றுவிடலாம் என்ற ஒரு நப்பாசையும் அவர்களிடம் முளைவிட்டிருந்தது. அதைச் சிலர் பொதுமக்களிடம் "யு.என்.பி.க்கு வாக்குப் போடுங்க. நாங்களும் திரும்பிப் போகலாம்; உங்களுக்கும் நிம்மதி" என்று பல இடங்களில் கூறியும் உள்ளார்கள்.

இதேவேளை தேர்தல் நிகழும் தருணத்தில் அரசாங்கத்தின் புறத்தில் இக்கட்டான நிலைமை காணப்படும். இராணுவச் செயற்பாடுகளில் பாரிய முடிவுகளை எடுக்க முடியாத நிலை. எதிரியின் செயற்பாட்டுக்கேற்ப அதன் தாக்குதலை உக்கிரப்படுத்த முடியாத நிலை. அவ்வாறான ஏதாவதொரு உக்கிரமான செயற்பாடு மக்களைப் பாரிய பாதிப்புக்குள்ளாக்கிவிட்டால் தேர்தல் நிலவரமே மாறிவிடக்கூடும்.

ஆனால் மறுபுறமோ, எதிரியிடம் பாரிய வீழ்ச்சிகளைக் கண்டாலும் அது தேர்தல் உணர்வலைகளை உயரக் கிளப்பி ஆட்சிப் படகை ஆட்டங்காண வைத்து விடும். இதேவேளை எதிரியினால் ஆத்திரமுட்டப்பட்டோ, அல்லது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த எண்ணியோ படைவீரர்கள் மேற்கொள்ளக்கூடிய அடாவடித் தனங்கள், அத்துமீறல்கள், ஒழுக்கயீனங்களுக்கு கடும் நடவடிக்கை எடுக்க முடியாத நிலை. அவ்வாறான நடவடிக்கைகள் படைத் தரப்பின் மனோநிலையைப் பாதித்துவிடும் என்ற அச்சம் இருக்கும்.

இத்தகைய ஒரு சூழலைச் சாதகமாகப் பயன்படுத்தி குடாநாட்டை நோக்கிய இராணுவ நகர்வினை மேற்கொண்டனர் புலிகள்.

வன்னித் தாக்குதல்களின் உக்கித்தை குடாநாட்டுப் படைகளும் அறிந்திருந்தார்கள். அதனால் அதுவும் அவர்களின் மன நிலையைப் பாதித்திருந்தது.

புலிகளைப் பொறுத்தவரையில் இத் தேர்தல் காலத்தில் குடாநாட்டின் மீதான யுத்தத்தை ஆரம்பிப்பதில் இரண்டு நோக்கங்கள் இருந்தன. ஒன்று, ஏற்கெனவே கூறிய தேர்தல்ப் பலஹீனங்களை முடிந்தவரை தமக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்வது. மற்றையது ஒரு நாசூக்கான அரசியல் திட்டத்தை அடியொற்றியிருந்தது.

அதாவது, ஆட்சிமாற்றமொன்று ஏற்பட்டால், பதவிக்கு வரும் ஐ.தே.க. புலிகளுடன் பேச்சுவார்த்தையை நிகழ்த்த விளைவர். அப் பேச்சுவார்த்தையிலும் தாம் அதிகரித்த பிரதேசங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு பேசச் செல்வதே தமக்கான பேரம் பேசும் பலத்தை அதிகரிக்கும். அதனால் முடிந்தவரை முன்னேறுவது ஒரு நோக்கம். அதேவேளை, அப்போது தாக்குதலை ஆரம்பிக்காவிட்டால் ஆட்சி மாற்றத்தின் பின் தாக்குதலைத் தொடுப்பது என்பது அரசியல் ரீதியில் புலிகளே சமாதானத்துக்கு ஊறுவிளைவிக்கிறார்கள் என்ற கருத்தை ஏற்படுத்திவிடும். அப்போதே தாக்குதலை ஆரம்பித்துவிட்டால் அதை முன்னைய தாக்குதல் என்ற கருத்தில் கணக்கெடுக்காது விடச் செய்யலாம்.

இதேவேளை தாக்குதல் நிகழ்ந்து கொண்டிருக்கும் போது ஆட்சி மாற்றம் ஏற்படின் புதிய ஆட்சி பேச்சுவார்த்தைக்குக் குந்தகமான சூழலைத் தவிர்க்கும் பொருட்டு புலிகளுடன் ஒரு மெத்தனப் போக்கையே கடைப்பிடிக்கும்படி இராணுவத் தரப்பினருக்கு வலியுறுத்துவர். அத்தகைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு யாழ். குடாநாட்டுக்குள் முடிந்தளவு ஊடுருவி நிலை கொண்டுவிடலாம்.

அத்துடன் ஆட்சி மாற்றமொன்றால் இராணுவத் தலைமைகளில் ஏற்படும் மாற்றத்துக்கும், முகாம்களின் நிர்வாக மாற்றங்களுக்கும் மத்தியில், அரசாங்கத்தின் எண்ணத்தையும் பிரதிபலிக்கும் வகையில் இராணுவத் தரப்பில் புலிகளின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்த விளையாத தன்மையே ஆரம்பத்தில் காணப்படும்.

எனவே இராணுவத்துடன் மோதலைத் தொடராமலே அவர்களுக்குக் கைகாட்டிக் கொண்டே யாழ்.குடாநாட்டுக்குள் சென்றுவிடவும் முடியுமாய் இருக்கும்.

அதுமட்டுமன்றி, அப்போது குடாநாட்டின்மீது தொடுத்த யுத்தத்தை ஆட்சி மாற்றத்துக்கான தேர்தல் நெருக்கடியை ஏற்படுத்த குடாநாட்டுள் மேற்கொண்ட முயற்சியாகவும் பொருள் கொள்ளச் செய்யலாம்.

தேர்தலின்போது, ஏனைய தமிழ்ப் பகுதிகள் போலன்றி, யாழ்க் குடாநாட்டுள் ஈ.பி.டி.பி. மற்றும் வரதராஜப் பெருமாளுக்கு சார்பான ஈ.பி.ஆர்.எல்.எஃப். பிரிவினர் ஆகியோரின் பக்கபலத்தோடு பொ.ஜ.மு.யின் கை ஓங்கியிருந்தது. எனவே இத் தாக்குதல் தேர்தல் நடவடிக்கைகளை மந்தப்படுத்தவும், புலிகள் தொடர்பான அச்சத்தை உணர்த்தி பொ.ஜ.மு.க்கு ஆதரவாக செயற்படுவோரைப் பின்வாங்கச் செய்யவும் வகை செய்யும் முயற்சியாகவும் அமையும்.

எனவே ஐ.தே.க, இத் தாக்குதலைக் கூட தனக்குச் சாதகமான ஒரு நகர்வாகவே கருதும். ஆட்சியேறினால் உடனடிப் பதில் நடவடிக்கைகளில் இறங்காது சமரச முயற்சிக்கே முனையும். எனவேதான் இத் தாக்குதலுக்குச் சரியான நேரமாக இத் தேர்தல் சூழலைக் கருதி புலிகள் தாக்குதலைத் தொடுத்தார்கள்.

இத் தாக்குதல் வெற்றியை எதிர்பார்த்து நடத்தப்பட்ட ஒரு தாக்குதலாக இருக்கவில்லை. வெற்றி, இதில் ஒரு முயற்சி மட்டும்தான். உண்மையில் இது ஒர் அரசியல் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்காகச் செய்யப்பட்ட இராணுவ நகர்வே.

புலிகள் எதிர்பார்த்திருந்த அரசியல் சூழ்நிலை மாற்றம் நிகழவில்லை. அதாவது சந்திரிக்காவின் ஆட்சி விழவில்லை. அவ்வாறு விழுத்தக்கூடிய தென்னிலங்கை அரசியல் புலிகளின் கைகளிலும் இல்லை. அதில் தாக்கம் செலுத்தக்கூடிய ஓரளவிலான செயற்பாடே புலிகளைச் சார்ந்திருந்தது. தென்னிலங்கை அரசியலில் சரிக்குச் சரியான அளவு மாற்றம் ஏற்படும் பட்சத்தில் அதை மறுபுறம் திருப்பிவிடக்கூடிய பாத்திரமே அவர்களுடையதாக இருந்தது. அந்த மாற்றம் ஐ.தே.க. வினால் கைகூடவில்லை. அதனால் புலிகள் காத்திருந்த ஒரு சந்தர்ப்பம் நழுவிச் சென்றுவிட்டது.

எனினும் இத் தாக்குதல் புலிகளுக்குத் தோல்வியாக அமையவில்லை. புலிகள் சூழ்நிலையைச் சாதகமாக்கிக்கொள்ள முயன்றாலும் அச் சூழ்நிலை ஏற்படாத பட்சத்திலும் தமது நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் வகையிலேயே இதனைத் திட்டமிட்டிருந்தார்கள். அவர்கள் எதிர்பார்த்த ஆரம்ப வெற்றிகளை இத்தாக்குதலில் சுலபமாகவே ஈட்டிக் கொண்டார்கள்.

வன்னித் தாக்குதலின் உக்கிரத்தை உணர்ந்த ஆனையிறவுப் படைமுகாமினர் தற்காப்பு வியூகத்துக்கு மாறியதே இதனை அவர்களுக்குச் சுலபமாக்கியது.

ஆனையிறவை அண்டியமைந்த தனங்கிளப்பு, வெற்றிலைக்கேணி படைமுகாம்களை புலிகள் தாக்குதலைத் தொடுத்த கையோடு பின்வாங்கிக் கொண்டனர்.

இதனால் புலிகள் ஆனையிறவைச் சுற்றி ஒரு முற்றுகை வியூகமமைக்க மிக வசதியான தனங்களைப் பெற்றுக் கொண்டனர். படையினரை முகாமுக்குள் முடக்கிக் கொண்டு குடாநாட்டின் உள்ளே ஊடுருவல் நடத்தினர்.

ஆனால் ஆனையிறவு முகாமை ஒரேயடியாகத் தாக்கியழிக்கும் ஒரு பாரிய நடவடிக்கையில் அவர்கள் இறங்கவில்லை. அதற்கான காரணங்கள் உள்ளன.

ஆனையிறவு முகாம் பாரிய முகாம்களில் ஒன்று. அதேவேளை தாக்குதலை எதிர்நோக்கித் தயார் நிலையில் இருந்த முகாம். அப்படியான பாரிய தாக்குதல் ஒன்றை கடந்த ஆட்சிக்காலத்தில் சந்தித்து அதைப் பெரும் பிரயத்தனத்துடன் முறியடித்து புலிகள் தரப்பில் பெருமளவு எண்ணிக்கையான போராளிகள் இழப்பை ஏற்படுத்திய முகாம்.

அதேவேளை ஒரு பெரும் தாக்குதலுக்கு உள்ளாகுமிடத்து குடாநாட்டின் உட்பகுதிகளிலிருந்தும் பலாலிப் பெருந்தளத்திலிருந்தும்அம் முகாமுக்குப் பின்னணிப் படைப்பலம் வந்து சேரலாமெனவும் புலிகள் எதிர்பார்த்தார்கள்.

எனவே இத்தாக்குதலில் அவர்கள் உடனடி வெற்றியை எதிர்பார்க்கவுமில்லை.

ஆனால் இத் தாக்குதலைத் தொடர்ந்து நகர்த்திச் சென்று ஆனையிறவின் கழுத்துப் புறத்தைச் சுற்றி ஊடுருவி நிலையெடுத்து நின்று ஒரு பலத்த முற்றுகைக்கான முஸ்தீபுகளைச் செய்வதே அவர்களின் முதற்கட்ட நோக்கமாக இருந்தது.

அதில் அவர்கள் கணிசமான முன்னேற்றங் கண்டு விட்டார்கள். அதேவேளை சுற்றிவளைத்த பிரதேசங்களிலிருந்து கொண்டு தொடர்ச்சியான ஷெல் வீச்சுக்களை மேற்கொண்டு முகாமை எந்நேரமும் பதற்றத்துக்குள்ளாக்கிவரும் உளவியல் போரை ஆரம்பித்துள்ளார்கள்.

முகாமுக்குள் முடங்கியிருக்கும் படையினர் நாளாந்தம் அழிவுகளைச் சந்திப்பதாலும், பலத்த ஷெல் வெடியோசைகளுக்கு மத்தியில் நீண்ட நாட்கள் காலங் கழிப்பதாலும், எந்நேரமும் முகாம் தாக்கியழிக்கப்படலாம் என்ற அச்சத்துக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாலும் படிப்படியாக உளரீதியில் தளர்வெய்திச் செல்வார்கள். புலிகள் நீண்ட தூர ஆயுதங்களைப் பயன்படுத்துவதால் இத் தாக்குதலில் அதிக சேதாரங்கள் எதனையும் அடைந்துவிடப் போவதில்லை.

இத் தாக்குதலை நிகழ்த்திய வண்ணமே ஆனையிறவின் மறுபுறம் ஊடுருவி, யாழ்ப்பாணத்துக்கும் ஆனையிறவுக்குமான தரைவழித் தொடர்பை இடையறுக்குமுகமாக நிலையூன்றிக் கொண்டால், ஆனையிறவைத் தனிமைப்படுத்திவிடலாம். இதுவே அவர்களின் அடுத்த நகர்வு. இவ்வாறு ஒரு பாரிய தாக்குதலுக்கு தம்மை ஒழுங்கமைத்துக் கொண்டபின்னர்தான் அத் தாக்குதலை மேற்கொள்வதற்கான பாரிய படை நகர்வை அவர்கள் வன்னியிலிருந்து மேற்கொள்வார்கள். இத் தாக்குதல் சூழ்நிலை உறுதிப்படுத்தப்படும்வரை அவர்கள் அந்தப் பிரதான நகர்வைச் செய்ய மாட்டார்கள்.

ஆனால் இச் சூழலை ஏற்படுத்துவதற்கான முற்கட்ட நகர்வைத்தான் பலரும் புலிகளின் முழுமையான நடவடிக்கையாகக் கருதி, தங்கள் இராணுவ ஆய்வுக் கட்டுரைகளில் புலிகளின் முயற்சி பலிக்கவில்லையென்பதாக எழுதி வருகிறார்கள். இதற்கான பதிலை அவர்கள் சிறிது காலத்தின் பின்தான் உணரக்கூடியதாக இருக்கும்.

எனினும்இச் சூழ்நிலையின் அபாயத்தை ஓரளவு முன்னுணர்ந்துகொண்ட படையினரும் தம்மால் இயன்றளவு ஆனையிறவு முகாமைச் சுற்றிய பகுதிகளிலிருந்து புலிகளை விரட்டியடிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முனைகின்றனர்.

ஆனையிறவு முகாம் தாக்குதல் வெற்றியளிக்குமானால் அது மிகப் பெரும் சமநிலை மாற்றத்தை ஏற்படுத்திவிடும். இராணுவ ரீதியில் மட்டுமன்றி அரசியல் ரீதியிலும் அது ஒரு பாரிய குணாம்ச ரீதியான மாற்றத்துக்கு வழிவகுத்துவிடும்.

வன்னித் தாக்குதல்களில் ஈட்டிய வெற்றிகளையும் இராணுவச் சமபல உயர் ஸ்தானத்தையும்விட இவ் வெற்றியின் பெறுமதி மகத்தானதாக அவர்களுக்கு அமையும். அது ஏறத்தாழ தனி நாடொன்றை நிறுவுவதற்கான அதிகார பலத்தைக் கைப்பற்றுவதாய் அமையும்.

ஏனெனில் ஆனையிறவு வீழ்ந்தால் உள்ளே புகும் புலிகளின் படையணி தரித்து நிற்கும் இடம் பலாலியாகத்தான் இருக்கும். இப்போது புலிகளின் ஆட்டிலெறிகள் குடாநாட்டுக்கு நகரும். பலாலிப் பெருந்தளம் முற்றுகைக்குள்ளாகும். அதற்கான விமானப் போக்குவரத்து, கடும் மோட்டார் ஷெல்களாலும் ஆட்டிலெறித் தாக்குதலாலும் ஸ்தம்பிக்கும்.

கப்பல் போக்குவரத்தும் சிரமத்துக்குள்ளாகிவிடும். இந்நிலையில் முகாமைப் பாதுகாப்பதா, படை நகர்வுகளை மேற்கொள்ளுவதா என்ற திண்டாட்டத்தில் படைகள் சிக்கும். நாட்கள் செல்லச் செல்ல முற்றுகையின் இறுக்கம் வலுத்துச் செல்லும். படைகளுக்கான வினியோக மார்க்கம் வெட்டப்பட்டு இம் முற்றுகை நீடிக்குமானால் அதிலிருந்து மீள அவர்களுக்கு எந்த மார்க்கமும் இருக்கப் போவதில்லை.

வெளியேயிருந்து படை உதவி கிடைப்பதென்பது நினைத்துப்பார்க்க முடியாத காரியமாகிவிடும்.

அத்தகைய சூழலில் குடாநாடு முழுவதும் மீண்டும் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். படைகள் முடக்கப்பட்டு சிறைக் கைதிகள் போன்ற நிலைக்கு உள்ளாக்கப் பட்டுவிடுவர்.

இப்படியொரு நிலை தோன்றினால்... படைகள் சரணடைவதைத் தவிர வேறு மார்க்கமில்லாது போய்விடும்.

அப்படியானால்...

முன்னர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய வெற்றிச் செய்தியை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த விழாக் கோலத்துடன் செய்திச் சுருளாக ஏந்திச் சென்று ஜனாதிபதியிடம் கையளித்த அந்த நிகழ்ச்சி வெறும் நாடகக் காட்சிபோல் கேலிக்கிடமானதாகிவிடும்.

அது கேலிக்குரியதாகிப் போனாலும் நாட்டின் நிலமை மிகுந்த நெருக்கடிக்குள்ளாகிவிடும். இத்தகைய ஒரு நிமைமைக்குப் பதில் சொல்ல முடியாத நிலைக்கு அரசாங்கம் தள்ளப்படும். மக்களிடையேயும் படையினரிடையேயும் அதிருப்தி பொங்கும். எதிர்க்கட்சிகளும் தனியார் தொடர்பூடகங்களும் அரசாங்கத்தை மிகக் கேவலமாகச் சாடும்.

ஜனாதிபதி ராஜினாமாச் செய்யும்படியான நெருக்குதலுக்கு உள்ளாவார்.



இதேவேளை, புலிகள் தாம் விடுவித்த பிரதேசங்களில் ஒரு இடைநிலை அரசைஸ்தாபிக்கும் முஸ்தீவுகளை மேற்கொள்வர். இந்நிலையில் பேச்சுவார்த்தைக்கான பாரிய நெருக்குதல் உள்நாட்டுக்குள்ளிருந்தும் வெளிநாட்டுகளாலும் அரசாங்கத்திற்குமேல் செலுத்தப்படும்.

இதற்கு அடிபணிய வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கும் அரசாங்கம் இப்போது முட்டுக்காலில் பேச்சுவார்த்தைக்குச் செல்ல வேண்டியதாய் இருக்கும்.

இத்தகைய பேச்சுவார்த்தையில் புலிகள் வலியுறுத்தும் தீர்வு, இரு நாடுகளின் கூட்டமைப்பு என்பதற்குக் குறைவானதாக இருக்கப்போவதில்லை. இவ்வாறான ஒரு விடயத்துக்கு அரசாங்கம் இணைங்க முடியாத நிலையிலிருக்கும். ஏனெனில் அப்படியான ஒன்றைச் அரசியல் சாசனமாக்கக் கூடிய ஜனநாயக வழிமுறை அதன்வசம் இல்லை. அதற்கு மற்றைய சிங்களக் கட்சிகள் ஒத்துழைக்கப் போவதுமில்லை.

எனவே தீர்வை ஏற்படுத்தும் வரையில் தமது சுதந்திரமான செயற்பாட்டை அனுமதிக்கும் வழிவகைக்கு இணங்குபம்படி நிர்ப்பந்திப்பர். அதற்கு இணங்குவதும் அரசுக்கு ஆபத்து. இணங்காவிட்டாலும் ஆபத்து.

இணங்கினால்.....

பிரகடனப் படுத்தப்படாத ஒரு இடைநிலை அரசாங்கத்தை புலிகள் மேற்கொள்வர். அரசாங்கம் விரும்பாமலே அதற்குரிய ஒத்துழைப்பைச் செலுத்திக்கொண்டு இருக்கவேண்டியவர்களாக்கப்படுவர்.

இணங்காவிட்டால்...

ஏனைய பகுதிகளுக்கும் யுத்தம் விஸ்த்தரிப்பது மட்டும் இதன் அச்சுறுத்தலல்ல; புலிகளின் அதிகாரத்துக்கு ஏதாவது ஒரு சர்வதேச அங்கீகாரமும் கிடைத்துவிடக்கூடுமென்பதே இலங்கை முகம் கொடுக்க வேண்டிய பாரிய அரசியல் சவால்.

இந் நிலைமைகள் அடுத்த ஒருசில மாதங்களில் ஏற்பட்டுவிடுமென்று எதிர்பார்க்க முடியாவிட்டாலும், இது வெறும் கற்பனைக் கதையல்ல என்பதுதான் கவனிக்கப் படவேண்டிய விடயம்.

இதே நிலையில் அரசாங்கத்தின் செயற்பாடும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் நீடித்தால் புலிகள் அவற்றை மேவி இந் நிலையை எய்துவதற்குச் சாத்தியமுண்டு.

அதற்கெல்லாம் ஆரம்பக்கட்டமான ஒர் இராணுவ முன்னெடுப்பே ஆனையிறவு முகாம்மீதான முற்றுகைத் தாக்குதலுக்கான முஸ்தீவுக்கள். எனவே இது சாதாரணமாக எடுத்துக் கொள்ளப்படக்கூடிய ஒன்றல்ல. குடாநாட்டின் கழுத்திற்கு மாட்டப்பட்ட சுருக்குக் கயிறாகவே கருதப்பட வேண்டிய ஒன்று.

அரசாங்கம் வெறும் எதிர்த் தாக்குதல் நடவடிக்கைகளால் மட்டும் இப் பேரபாயத்திலிருந்து விடுபட முடியாது. அது புலிகளின் யுத்தமுறையின் இப்பாரிய முன்னேற்றத்தை ஈடுகட்டும் மாற்று யுத்த முறையொன்றை வகுப்பதாலேயே இதை எதிர்கொள்ள முடியும். யுத்த முறை மட்டுமல்ல அம் முறையில் செயற்படுத்தத் தேவையான யுத்த உபகரணங்களையும் அது போதுமான அளவு மாற்றீடு செய்து கொள்ள வேண்டியதாயிருக்கும். அதற்கு இந்நாட்டின் பொருளாதாரம் எவ்வளவு தூரம் ஈடுகொடுக்கும் என்பது அடுத்த கேள்வி.

இவ்வாறான கேள்வியொன்று குடாநாட்டைச் சுற்றியிருக்க, குடாநாட்டுக்குள்ளே இன்னொரு கேள்வி முளைவிடத் தொடங்கியுள்ளது. அரச படைகள் எவ்வளவு தூரம் விசுவாசமானவர்களாக இருக்கப் போகின்றன என்பதே அது.

தேர்தலின்போது ஐ.தே.க.வுக்கான ஆதரவுச் செயற்பாடுகள் பல்வேறு இராணுவ மட்டங்களில் இருந்துள்ளன. இராணுவ முகாம்களில் ரணிலும் மனைவியும் உள்ள போஸ்ட்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. தீவுப் பகுதிகளில் கடற்படையினர் ரணிலை ஆதரித்தால்தான் சமாதான சூழல் தோன்றி மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியுமென அவர்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் வாக்களிப்பிலும் தீவுப் பகுதி வாக்குகள் விழுந்த விதைத்தைப் பார்த்தால் கடற்படையினரின் தலையீடுபற்றிய சந்தேகங்கள் காணப்படுகின்றன. ஏனெனில், யாழ். மக்கள் பெயர்கூட அறிந்திராத வேறு பல இனவாதக் கட்சிகளுக்கும் வாக்குகள் விழுந்துள்ளன.

இதேவேளை வன்னிப் பின்னடைவுகளுக்கும் இராணுவத்தின் ஒரு குழாமினர் காரணமென ஜனாதிபதி குற்றஞ்சாட்டியும் உள்ளார்.

இந்நிலையில் குடாநாட்டுள் மெதுவாக இராணுவ அத்துமீறல்கள் மீண்டும் தலை தூக்க ஆரம்பித்துள்ளன. புங்குடுதீவில் சாரதாம்பாள் என்ற பிராமணப் பெண் கடற்படையினரெனப் பொதுமக்களால் சந்தேகிக்கப்படும் நால்வரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். இக் கொலையையடுத்து அடையாளம் காணாது செய்யும் மறைப்பு நடவடிக்கை போல் கடற் படையில் திடீர் இடமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இக் கொலை, வல்லுறவுச் சம்பவத்தைக் கூட சரியான விசாரணையின்றி அங்கேயே அமுக்கிவிடும் முயற்சிகள் பாதுகாப்புத் தரப்பினால் மேற்கொள்ளப்பட்டபோதும் ஈ.பி.டி.பி.யினரின் முயற்சியால் இறந்தவரின் உடல் கொழும்புக்கு எடுத்துவரப்பட்டு மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதால் இதன் மீதான நீதி விசாரணையில் இது ஒரு பாலியல் வல்லுறவினால் நிகழ்ந்த கொலையென்ற உண்மை நிரூபிக்கப்பட்டுள்ளது. அதேவேளை சாட்சியம் வழங்கிய, இறந்தவரின் சகோதரர் உயிர் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி ஈ.பி.டி.பி.யின் பாதுகாப்பில் இருந்து வருகிறார்.

இவ் வழக்கில் உண்மைக் குற்றவாளிகள் இனங்காணப்பட்டு தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்களா என்பது ஒரு புறமிருக்க, இவ்வாறான அத்துமீறல்கள் திரும்பவும் ஆரம்பிக்குமானால் நிலமை என்ன என்பது அடுத்த விடயம். அதைவிட இத்தகைய குளறுபடிகளுக்குக் காரணமாக படையினர் மத்தியில் அதிருப்தி ஏதும் தோன்றிருக்கிறதா என்பது மற்றொரு கேள்வி.

மிக இக்கட்டான காலப்பகுதியாக அமையப்போகும் எதிர்வரும் மாதங்களில் அவ் விக்கட்டை முகம் கொடுக்கக்கூடிய தயார் நிலையுடனும், உற்சாகத்துடனும், மன வலிமையுடனும் படையினர் உள்ளார்களா என்ற சந்தேகத்தையும் இது கிளப்புகிறது.

குடாநாட்டின்மீது தொங்கும் இச் சுருக்குக் கயிற்றில் அது மாட்டுப்படுவதும், தப்புவதும் அரசாங்கம் இந் நிலைமையைக் கையாளப்போகும் சாதுரியத்தில்தான் தங்கியுள்ளது. அதற்கு மேற்கொள்ள விளையும் அரசியல் முன்னெடுப்புகளுடன் இராணுவத்தக அமைவும் அத்தியாவசியமான தென்பதை அது உணரப் பிந்தினால்...

அரசியல் முன்னெடுப்புகள்...
இராணுவ நகர்வுகளிடம்
தோல்வி காணும்!

# புலிகள் இயக்கத்தின் வெற்றியின் இரகசியங்கள்

அனைத்து இயக்கங்களையும் விட விடுதலைப்புலிகள் இத்தனை பாரிய அமைப்பாக பரிணமித்தது எப்படியெனத் தெரிந்து கொள்வதற்கு, அதன் வளர்ச்சிப்படிகளை நாம் பின்னோக்கி பார்க்க வேண்டும்.

முக்கியமான திருப்பங்களை அவதானிக்க வேண்டும் முக்கியமான தீர்மானங்களைப் பரிசீலித்துப் படித்துப் பார்க்க வேண்டும்.

அவர்கள் அடிப்படைகளாகக் கொண்டிருந்த கொள்கைகளை, கடைப்பிடித்த விதிகளை எடுத்து நோக்க வேண்டும். அதே வேளை கடைப்பிடித்தவை மட்டுமன்றி கடைப்பிடிக்காதவையும் அவர்களின் வளர்ச்சியைத் தீர்மானித்திருக்கின்றன.

ஒவ்வோர் சூழ்நிலையையும் அவர்கள் எதிர்கொண்ட விதத்தை மட்டுமன்றி, அவர்களுக் கேற்ப அவர்கள் சூழ்நிலைகளை உருவாக்கிக் கொண்ட விதத்தையும் அவதானிக்க வேண்டும்.

ஆரம்பத்தில் அனைத்து இயக்கங்களும் ஏறத்தாழ ஒரே நிலையில்தான் இருந்தன. புலிகள் ஓரிரு வருடங்கள் முன்னர் ஆரம்பித்திருக்கலாம். அதில்கூட தாம்தான் மூத்த இயக்கம் என டெலோ போட்டிக்கு உரிமை கோரிக் கொண்டிருக்கிறது.

எவ்வாறாயினும் இந்தத் தடைதாண்டி ஓட்டப்போட்டியில் புலிகள் இத்தனை பாரிய வித்தியாசத்தில் முன்னேறியிருப்பதைச் சாதாரணமான ஒரு நிகழ்வாக மதிப்பிட முடியாது.

கருத்து வேற்றுமைகளுக்கும் முரண்பாடுகளுக்கும் இங்கு இடமில்லை.

செயற்பாடு ஒன்றே பிரதானமானது. இவ்வாறு அமைந்திருந்த இயக்க ஒழுங்கு விதி உடனுக்குடன் தீர்மானமெடுப்பதற்கும் துரிதமாகச் செயற்படுத்துவதற்கும் மிக வசதியானதாக இருந்தது.

குறுகிய எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பட்ட மிக ஆற்றலும் அர்ப்பணமும் கொண்ட உறுப்பினர்கள், கடுமையான இயக்க விதிகள், கட்டுக்கோப்பான செயற்பாடு என்பன அந்நெருக்கடி வாய்ந்த ஆரம்பகாலத்திலும் புலிகளை செயற்திறன்மிக்க அமைப்பாக உருவாக்கின.

இப்படியான ஒரு ஸ்தாபன அமைப்பை ஜனநாயகமற்றதெனவும் சர்வாதிகாரத் தன்மை கொண்டதெனவும் கூறி மாற்று வடிவங்களை உருவாக்க முனைந்த வேறு இயங்கங்களால் புலிகளின் ஆரம்ப வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியவில்லை.

ஒரு பயிற்றப்பட்ட உதைபந்தாட்ட அணிக்கும், வெறும் ஆர்வத்தில் சிலர் சேர்ந்து விளையாட அமைத்துக் கொண்ட அணிக்கும் உள்ள வித்தியாசம் இங்கே புலிகளுக்கும் மற்றையோருக்கும் தெரிந்தது.

அதனால் புலிகள் தங்கள் செயற்பாடுகளை விறுவிறுப்பாக மேற்கொள்ளத் தொடங்கினர்.

டெலி ஜெகன் போன்றோரையும் முளையிலேயே கொன்றொழித்தனர். போராட்டத்தில் கட்டுமீறிய செயற்பாடுகள் பெருகி தமக்கு இடைஞ்சலாக அமைவதை அவர்கள் விரும்பவில்லை.

ஓரளவு பரந்த அளவில் அமைப்பு ரீதியாகச் செயற்பட முடியுமாயிருந்த இயக்கங்களே நிலைத்து நின்றன.

இங்கே புலிகளோடு ஒப்பிடுகையில் இந்த இயக்கங்கள் கொண்டிருந்த ஆரம்ப வேறுபாடுகளையும் நாம் எடுத்துப்பார்க்க வேண்டும்.

புலிகள் செயற்பாட்டை மையமாக வைத்தே ஸ்தாபனத்தைக் கட்டினர். அவர்களது கொள்கைகள் கூட செயற்பாட்டோடு இசைந்திருந்தன.

ஆனால் வேறு பல இயக்கங்கள், ஸ்தாபனத்தைக் கட்டுவதிலும் கொள்கைகளை வகுப்பதிலுமே பெரும் சிரமத்தை எடுத்துக் கொண்டனர். செயற்பாடு குறைவாக இருந்தது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் தங்கள் செயற்பாடுகளுக்கு தாம் வகுத்திருந்த கொள்கைகளே தடையாக இருந்ததை அவர்கள் உணர்ந்துமிருக்கிறார்கள். அதனால் இறுதியில் அவற்றை மீற வேண்டிய நிலையும் அவர்களுக்கு ஏற்பட்டதுண்டு.

வங்கிக் கொள்ளைகளை மக்கள்

நாடுகளின் புரட்சிகள் இவ்வாறே நடந்திருக்கின்றன. வெற்றிகண்டிருக்கின்றன.

ஆனால் இங்கு வித்தியாசம் என்னவென்றால், புலிகள் தங்கள் கொள்கையை நடைமுறைப்படுத்தினர்.

இவர்கள் தங்கள் கொள்கையை நடைமுறைப்படுத்தவில்லை.

**மக்கள் அமைப்பாகவன்றி** மக்களால் ரசிக்கப்படுகின்ற ஒரு இளைஞர் அமைப்பாகவே தங்களை உருவாக்கிக் கொள்ள முயன்றனர்.

அதனால்தான் இவ் இயக்கங்கள் புலிகளால் தடை செய்யப்பட்டு தாக்கியழிக்கப்பட்ட போது மக்களிடமிருந்து பாரிய எதிர்ப்போ பாதுகாப்போ கிளம்பவில்லை.

செயற்பாட்டையொட்டியே புலிகளின் ஸ்தாபன வேலைத்திட்டங்கள் இருந்ததால் அவர்கள் தமது தேவைக்கு ஏற்ற அளவே உறுப்பினர்களை உள்வாங்கினர்.

தமது நிதிநிலைமை, ஆயுதபலம் என்பவற்றுக்கு ஏற்ற அளவே புதியவர்களைச் சேர்த்தனர்.

"நாம் கதிரைகளுக்கு தக்க அளவே மாணவர்களைச் சேர்த்தோம்" என புலிகளின் முன்னைய பிரதித்தலைவர் மாத்தையா முன்னர் இதைக் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் ஏனைய இயக்கங்கள் தமது நிதிவளம், ஆயுத வளம் ஆகியவற்றைப் பாராமல் முடிந்தளவு பெருவாரியான உறுப்பினர்களை உள்வாங்குவதில் முண்டியடித்துச் செயற்பட்டன.

'83 ஜூலைக் கலவரத்தின் தாக்கத்தினால் உணர்ச்சிவசப்பட்ட பெருவாரியான இளைஞர்களை இவ் இயக்கங்கள் போட்டிபோட்டுக் கொண்டு திரட்டின.

தெரிந்திருந்தது.

ஆனாலும் இவ் இயக்கங்கள் அந்த மேலாதிக்கத்திலிருந்து விடுபட முயற்சியெடுக்கவில்லை. மாறாக, இந்தியாவைத் தாம் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற கற்பனையைத்தான் கொண்டிருந்தன.

இந்திய **அரசில் நம்பிக்கை** வைக்காத **போதும் புலிகள் தென்னிந்தியாவில் முதல்வர் எம். ஜி. ஆரைத் தம்வசம் ஈர்த்துக் கொண்டார்கள்.**

அதனால் அவர்மூலம் தென்னிந்தியாவில் செயற்படக்கூடிய வசதி வாய்ப்புகளையும் பெருமளவு நிதியுதவியையும் பெற்றார்கள்.

அத்துடன் மத்திய அரசுக்கு அவர் மூலம் தம் சார்பான அழுயத்தங்களை மேற்கொண்டார்கள்.

இதில் இவர்கள் எடுத்துக்கொண்ட நிலைப்பாடு தென்னிந்தியாவில் ஏனைய இயக்கங்களுக்கில்லாத அதிக செல்வாக்கை இவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தது.

ஒருமுறை இந்திய அரசு புலிகளின் ஆயுதங்களைக் களைந்தபோது எம். ஜி. ஆர். தனது சொந்தப் பிஸ்டலை பிரபாகரனிடம் எடுத்துக் கொடுக்குமளவு அன்னியோன்யத்தை அவரிடம் அவர்கள் பெற்றிருந்தார்கள்.

கருணாநிதி சேகரித்து இயக்கங்கள் யாவற்றுக்கும் பகிர்ந்து வழங்கிய நிதியைப் பெற்றுக் கொள்ள மறுத்தமைக்குப் பிரதியுபகாரமாக புலிகளுக்கு எம். ஜி. ஆர். 3 கோடி இந்திய ரூபாய்களை வழங்கியமை மற்றோர் சம்பவம்.

இவ்வாறு புலிகள் இந்தியாவை நம்பியிருக்காமலும், அதில் தங்கியிருக்காமலும், அது செய்யும் உதவிகளையும் பெற்றுக் கொண்டு, அதன் வெவ்வேறு தலைவர்க

ஆரம்பத்தில் புலிகள் சிறிதொரு குழுவாகவே செயற்பட்டார்கள்.

அது மிகக் குறுகிய எண்ணிக்கையான நபர்களைக் கொண்டிருந்தது. அவர்கள் தமது அடுத்த ஒரு உறுப்பினரைச் சேர்ப்பதானால்கூட மிகவும் அவதானமாகத் தெரிவு செய்தே சேர்த்தார்கள். அதனால் அவர்களது ஆணிவேர் பலமாக இருந்தது. அக்காலத்தில் அவர்கள் தலைமறைவு வாழ்க்கையை மிகக் கடுமையாகக் கடைப்பிடித்தனர். உறுப்பினர்களுக்கான திட்டவட்டமான கடும் ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தனர்.

ஒரு போராளியென்பவன் இலட்சியத்துக்காக உயிர் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணிப்பவன் என்ற கருத்தைக் கொண்டிருந்தனர்.

தனிப்பட்ட நலன்களோ ஆசாபாசமோ அற்றவன் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தனர்.

இலட்சியத்தனமான உயர் ஒழுக்கத்தை இயக்க விதிகளில் வலியுறுத்தினர்.

அதனால் அப்போது திருமணம், காதல் என்பவற்றுக்குக்கூட இயக்கத்துள் தடை விதித்திருந்தனர்.

உமாமகேஸ்வரன் இவ் விதியை மீறியது பின்னர் இயக்கப் பிளவுக்கே வழிவகுத்தது.

இத்தனை பெரும் கட்டுப்பாட்டுடன் செயற்படுவதற்கு அன்றிருந்த சூழ்நிலையும் அவர்களுக்கு ஒரு முக்கிய காரணியாக விளங்கியது.

அப்போது தமிழ்ப் பிரதேசங்கள் யாவும் இராணுவமும் பொலிஸும் சாதாரணமாக நடமாடிய காலம். ஆயுதப் போராட்ட மார்க்கமொன்றை மக்கள் அறிந்திராத காலம்.

அதனால் இத்தகைய போராளிகளை பயங்கரச் செயல்களைப் புரிபவர்களாகக் கண்டு, அவர்களுடன் தொடர்புவைத்தால் பொலிஸ், இராணுவத்தின் சித்திரவதைக்குள்ளாக நேருமென சாதாரண மக்கள் எண்ணி விலகியிருந்த காலம். மிகச் சொற்பமான ஆதரவாளர்களையே இயக்கங்கள் கொண்டிருந்த காலம்.

இயக்க நடவடிக்கைகளும், இயக்க உறுப்பினர்களும் காட்டிக்கொடுக்கப்படவோ, தேடிப் பிடிக்கப்படவோ கூடிய அச்சுறுத்தல் மிகப் பாரிய அளவில் நிலவிய காலம்.

புலிகள் என்ற பெயர் பிரபல்யமாகியிருந்தாலும் அதில் உள்ளவர்கள் யார், அதன் தலைவர் யார் என்று வெளியில் தெரியாதிருந்த காலம்.

பிரபாகரன் என்றால் இன்று சின்னக் குழந்தையும் அறியும். ஆனால் அன்று இவர்தான் இவ்வியக்கத்தின் தலைவரென்பது இரண்டாம் நபருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்பட்ட இயக்க ரகசியம்.

மிகச் சிரமத்துடன் ஆயுதங்களைச் சேகரித்து சொற்ப அளவான, சிறியரக ஆயுதங்களே கைவசம் இருந்த காலம்.

இப்படி இயக்கம் முளைவிடும் போது நிலவிய இக்கடுமையான காலத்தைத் தாக்குப் பிடித்து தழைப்பதற்கு அன்று புலிகள் எடுத்துக்கொண்ட கடும் போக்கு அவர்களுக்கு அதிக வல்லமையைத் தந்தது. தொடர்ந்து மிக வேகமாக வளர்வதற்கான ஆரம்ப சக்தியை அது அவர்களுக்குப் பெற்றுக் கொடுத்தது.

இக்காலத்தில் அவர்கள் அதிக கவனத்தில் எடுத்துக் கொண்ட முதலாவது விடயம் தங்கள் இயக்கத்தின் ஒழுங்கு விதி

ஒரு தலைமை

தலைமைக்கு விசுவாசமான உறுப்பினர்கள் தலைமையை மீறுவதும், இயக்க விதிகளை மீறுவதும் தண்டனைக்குரிய குற்றங்கள்.

அவர்களின் அடுத்த அதிகூடிய அக்கறை இயக்கத்துக்கான நிதி, ஆயுதம் ஆகியவற்றைத் திரட்டிக் கொள்வதில் இருந்தது.

எனவே அவர்கள் கொள்கைகள் வகுப்பதிலோ, கொள்கை பரப்புவதிலோ, பெருமளவான உறுப்பினர்களைச் சேர்ப்பதிலோ, கிளைகள் அமைப்பதிலோ அவ் ஆரம்பகட்டத்தில் அதிகம் நேரம் செலவிடவில்லை.

ஒரு தலைமறைவு ஆயுத இயக்கத்துக்கு நிதி மிக அத்தியாவசியமான ஒரு சாதனமென்பதை அவர்கள் நன்குணர்ந்திருந்தார்கள்.

அதனால் அவர்கள் வங்கிகளின் பாதுகாப்பு பலஹீனமாக இருந்த ஆரம்ப காலத்திலேயே பரபரப்பான பல நிதிக் கொள்ளைகளை நடத்தி பெருந்தொகையான நிதியைச் சேகரித்துக் கொண்டார்கள்.

81 லட்ச ரூபாய் நீர்வேலி வங்கிக் கொள்ளை, 10 லட்ச ரூபாய் குரும்பசிட்டி தனியார் கொள்ளை போன்றவற்றில் தங்கதுரை, குட்டிமணி தலைமையிலான அன்றைய டெலோ இயக்கத்துடன் புலிகள் இணைந்து ஈடுபட்டிருந்தாலும் குட்டிமணி, தங்கதுரை, ஜெகன் ஆகியோர் கைது செய்யப்பட்ட பின்னர் இவ்வுறவு நீடிக்கவில்லை.

டெலோ சிறீசபாரட்ணத்தின் தலைமையில் தொடர புலிகள் பிரபாகரன் தலைமையில் தனிவழியில் செயற்படலாயினர்.

அவர்கள் அரச படையினர் மீதான உதிரியான தாக்குதல்கள் மூலம் ஆயுதங்கள் சேகரிப்பதில் அடுத்த கவனத்தைச் செலுத்தினர். இதேவேளை தமிழ் அரசியற் போக்குக்கு எதிரான நிலைப்பாடுகளை எடுத்து அரசாங்கத்தை ஆதரித்த தமிழ்த் தலைவர்களை 'துரோகிகள்' என்ற குற்றச்சாட்டில் அழித்தொழிக்கும் 'சுத்திகரிப்பு' வேலைத்திட்டத்தை முன்னெடுத்தனர்.

அத்துடன் பொலிஸ், மற்றும் அரச உளவுத் துறையில் அல்லது அவற்றுக்கு ஆதரவாகச் செயற்பட்டு, போராளிகளுக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களையும் தீர்த்துக் கட்டுவதில் முனைந்திருந்தனர்.

இவ்வாறன நடவடிக்கைகளைத் தனிநபர் பயங்கரவாதமென்றே மாற்று இயக்கங்கள் விமர்சித்து வந்தன.

ஆனால் அவையே மறுபுறத்தில் அவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாய் இருந்தபோது அச் சௌகரியத்தைப் பயன்படுத்தியே தாமும் இயங்கினர்.

அதேவேளை புலிகள் தம்மிலிருந்து விலகிச் செல்வோர் அரசியலில் ஈடுபடுவதை அனுமதிப்பதில்லை.

இதில் புலிகளிலிருந்து உமாமகேஸ்வரன் தலைமையில் பிரிந்து சென்றவர்களே விதிவிலக்காக வேறோர் இயக்கமாக இயங்க முடிந்தது. எனினும் ஆரம்பத்தில் இரு தரப்பினருக்குமிடையே கடுமையான மோதல்கள் நிகழ்ந்தன. இருந்த போதிலும் அவர்கள் புளொட் என்ற அமைப்பாகப் பின்னர் செயற்படத் தொடங்கினர்.

அத்தோடு, விடுதலைப் போராட்டத்தில் பல இயக்கங்கள் தோன்றுவதையும் புலிகள் விரும்பவில்லை. அதனால் தத்தமக்கென இயக்கங்கள் கட்ட ஆரம்பித்த ஒப்ரோய் தேவன்,



அவர்களைப் பராமரிக்கக்கூடிய நிதிவளம் அவர்களிடம் இருக்கவில்லை. அவர்களைப் பயிற்றுவிக்க இந்திய அரசையே இவர்கள் நம்பியிருந்தனர்.

இந்திய அரசு பயிற்சியை வழங்கினாலும் ஆயுதங்களை உடனடியாக வழங்கவில்லை.

இதனால் பயிற்சி பெற்றவர்கள் நீண்ட நாட்களுக்கு ஆயுதமின்றிக் காத்திருக்க நேரிட்டது.

ஆயுதம் வழங்கப்பட்டபோதும் அவை குறைந்த அளவுகளில் படிப்படியாகவே வழங்கப்பட்டன. இதில் இந்தியா இவ் இயக்கங்களைச் சுயமாக செயற்பட முடியாதவாறும், தன்னில் தங்கியிருக்கக் கூடியவாறுமே பேணியது. இயக்கங்கள் சொந்த வழியில் ஆயுதங்களைப் பெறுவதையும் அது விரும்பியிருக்கவில்லை. புளொட் அமைப்புக்கு வந்த பெருந்தொகையான ஆயுதங்களை அப்போது இந்தியா கைப்பற்றி பறிமுதல்

விரோதச் செயல் என்று கூறிக்கொண்ட இயக்கங்கள் இறுதியில் நிதித் தேவைக்காக கூட்டுறவுச் சங்கங்கள், தபால் நிலையங்கள் போன்றவற்றைக் கொள்ளையிட்டு, ஈற்றில் தனியாரைக் கொள்ளையிடவும் இறங்க வேண்டி ஏற்பட்டது.

தாக்கிவிட்டு ஓடும் கெரில்லாப் போர்முறை உத்தியை ஆரம்பத்தில் புலிகள் கையாண்டார்கள். அப்போது அவற்றை மக்களைப் பாதிப்புக்குள்ளாக்கும் தவறான யுத்தமுறையென புளொட், ஈ.பி. ஆர்.எல்.எப். போன்ற அமைப்புகள் விமர்சித்தன. ஆனால் அவையே இந்திய அரசின் பயிற்சியில் இவற்றை மறைந்திருந்து தாக்கும் விளைத்திறன் மிக்க தாக்குதல் நடவடிக்கையாகக் கற்றுக் கொள்ள நேரிட்டது.

அதன்பின் அவர்களும் அவற்றில் ஈடுபட முற்பட்டனர்.

புலிகளுக்கு முன்னரே பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் ஆயுதப்பயிற்சி பெற முடிந்திருந்த ஈரோஸ், ஈ.பி. ஆர்.எல்.எப். போன்ற இயக்கங்கள் அவற்றை ஆயுத நடவடிக்கைகளில் செயற்படுத்தவும் இல்லை. புலிகள் ஆயுதப் போராட்டத்தினூடாக மக்களை அணிதிரட்டுவது என்ற செயற்பாட்டை முன்னெடுக்க,

புளொட், ஈ.பி. ஆர்.எல்.எப். போன்றவை மக்களை அணிதிரட்டி ஆயுதப் போராட்டத்தை நடத்துவது என்ற கொள்கையை முன்னெடுத்தனர். இது தவறான கொள்கையென்பது இங்கு அர்த்தமல்ல. பல்வேறு

செய்து கொண்டது. இவ்வாறான அதன் நோக்கத்தைத் தெளிவாகக் காட்டுவதாய் அமைந்திருந்தது.

இவ்வாறு இவ் இயக்கங்கள் இந்தியாவின் முழுத தயவிலும் தங்கியிருக்கவேண்டியவர்களாக மாறவேண்டி ஏற்பட்டது.

ஆனால் புலிகளைப் பொறுத்தவரை, அவர்களிடம் ஏற்கெனவே போதுமான நிதியிருந்தது.

ஓரளவு ஆயுதங்கள் சேகரித்திருந்தனர். புதியவர்களை உள்வாங்கி நிதானமாகப் பயிற்சியளிக்கக்கூடியவர்களாயிருந்தார்கள்.

இந்தியாவின் உதவி மேலதிக வசதியாக இருந்ததேயன்றி அடிப்படையானதாகவும் அவர்களிலேயே பூரணமாகத் தங்கியிருக்க வேண்டியதாகவும் இருக்கவில்லை.

அத்தோடு இந்தியாவை நம்பியிருக்காமல் அவர்கள் தமக்குத் தேவையான ஆயுதங்களைத் தாமே பெற்றுக் கொண்டனர்.

ஆரம்பத்திலேயே புலிகள் இந்தியாவை அதிகம் நம்பவில்லை.

இந்தியா ஒவ்வொரு சிறு விடயத்திலும் தனது மேலாதிக்கத்தைச் செலுத்த முற்படுவதை புலிகளால் மிக ஆரம்பத்திலேயே உணர முடிந்துவிட்டது.

ஈ.பி. ஆர்.எல்.எப். அமெரிக்கர்களான அலன் தம்பதிகளைக் கடத்திய விடயத்தில் இந்தியா அங்கிருந்த ஈ.பி.. ஆர்.எல்.எப். தலைவர்களை நிர்ப்பந்தப்படுத்தி அவர்களை விடுவித்தமை அத்தகைய மேலாதிக்கத்துக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக அப்போதே

## சென்றவாரத் தொடர்ச்சி

ளோடு வெவ்வேறு உறவுகளை வளர்த்துக் கொண்டு, மிகக் கவனமான வகையில் இச்சூழலுக்கு முகம் கொடுத்தார்கள். தமது உறுப்பினர்களுக்கு அதிகப்படியான இந்திய மாயையை அவர்கள் ஏற்படுத்தவில்லை.

இவ்வாறான நிலையில் இயக்கங்களிடையே ஒரு ஐக்கிய முன்னணி உருவானது.

அதில் முதலில் ஈரோஸ், ஈ.பி. ஆர். எல்.எப்., டெலோ ஆகிய இயக்கங்களும் பின்னர் புலிகளும் இணைந்து கொண்டனர். இதற்கு ஈ.என்.எல்.எப். என்று பெயரிடவும் பட்டது.

ஆயினும் இயக்கங்களிடையே அதிகார பலத்துக்கான ஒரு போட்டி நிலவி வந்தது.

இலங்கையில் பல்வேறு விடயங்களில் இவ் ஐக்கிய முன்னணிக்குள் பிணக்குகள் தோன்றின. அதில் முதலில் டெலோவுக்கும் புலிகளுக்குமான தகராறுகள் வலுப்பெற்றன.

டெலோவை இந்தியா அதிகளவு பலப்படுத்துகிறது என்ற சந்தேகம் புலிகளுக்கு எழத் தொடங்கியது.

புலிகள் விழிப்படைந்தார்கள்.

புலிகளில் எதற்கும் முன்கை எடுக்கும் தன்மை இருந்தது. இருந்து வருகிறது.

அதாவது எதிரிக்கு முன்னர்தான் தாக்குதலை ஆரம்பித்து விடுவது.

அத்தோடு சந்தேகங்களை விட்டு வைக்காத இன்னொரு சுபாவமும் இருந்தது.

சத்தியன்

அதாவது வளர்த்த நாய்க்குக்கூட விசர் பிடித்து விட்டதெனச் சந்தேகித்தால், ஒருவேளை அதற்கு விசர் இல்லாதும் இருக்கக்கூடுமென அவர்கள் ஒருபோதும் ஆபத்தை விட்டு வைப்பதில்லை.

இதனால் உசாரடைந்த புலிகள் ஒரு தீர்க்கமான முடிவெடுக்க வேண்டிய நிலைக்கு வந்திருந்தார்கள். ஏனைய இயக்கங்களின் செயற்பாடுகளைச் சகித்துக்கொண்டு போராட்டத்தை அதன் போக்கில் விடுவதா? அல்லது தானே போராட்டத்தைக் கையிலெடுத்துக் கொள்வதா?

இதில் போராட்டத்தைத் தானே கையிலெடுத்தால்தான் தான் நினைக்கும் திசை வழியில் போராட்டத்தை இட்டுச் செல்லாம் என அதை உணர்ந்தனர்.

ஏற்கெனவே, ஒரு போராட்டத்துக்கு பல்வேறு இயக்கங்கள் தேவையில்லையென்ற கருத்துடன் இருந்த புலிகள்,

இப்படியான இயக்க நெருக்கடிகள் தோன்றியதும் அக்கருத்து அவர்களிடம் மேலும் வலுப்பெற்றது.

அப்போது அதற்கிருந்த இராணுவ உயர் நிலையில் இப்போது அதனைக் கைப்பற்றிக் கொள்வதுதான் உசிதம் என அது தீர்மானித்தது.

இந்தத் தீர்மானத்தின் பின்தான் ஆயுதப் போராட்டத்தின் இரண்டாவது காலகட்டமொன்று உருவானது. (இன்னும் நகரும்)

## அலசுவது - இராஜதந்திரி

# தனி மனித சுதந்திரத்துக்கு மிரட்டலாகும் குமாரின் படுகொலை!

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் மறைவு இலங்கைத் தமிழ் மக்களை பேரதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாகவே தமிழ் அரசியல் முக்கியஸ்தர்கள் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர். கடந்த ஆண்டு ஜூலை மாதம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினரான கலாநிதி நீலன் திருச்செல்வம் தற்கொலைக் குண்டுதாரி ஒருவரால் படுகொலை செய்யப்பட்டார்.

இதனையடுத்து இருமாதங்களுக்கு முன்னர் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் முக்கியஸ்தரும், யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினரும், 'தினமுரசு' ஆசிரியருமான நடராஜா அற்புதராஜா இனந்தெரியாத கும்பலொன்றினால் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

கலாநிதி நீலன் திருச்செல்வம், நடராஜா அற்புதராஜா ஆகியோரது திடீர் மரணங்களையடுத்து தற்போது அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மறைந்த அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவர் குமார் பொன்னம்பலம் கடந்த இரு தசாப்தகாலமாகவே தமக்கென தனித்துவமான அரசியல் பாதையொன்றை வகுத்துக் கொண்டிருந்தார்.

1977ம் ஆண்டு முதல் தடவையாக பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட குமார் பொன்னம்பலம், 1982ம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவிக்காக நடத்தப்பட்ட அத் தேர்தலில் போட்டியிட்ட முதலாவது தமிழ் வேட்பாளரும் குமாரே என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்பின்னர் 1995ம் ஆண்டில் கொழும்பு மாவட்டத்தில் இறுதியாக பாராளுமன்றத் தேர்தலில் திரு.பொன்னம்பலம் போட்டியிட்டிருந்தார்.

மேற்குறிப்பிட்ட தேர்தல்கள் அனைத்திலும் குமார் பொன்னம்பலம் போட்டியிட்ட போதிலும், தோல்விகளையே அவரால் தழுவ முடிந்தது.

இந்நிலையில் என்றுமே இனவாதக் கணைகளையே தொடுக்கும் பேரினவாதிகளைப் பொறுத்தவரை குமார் பொன்னம்பலம் ஒரு துரோகி என்றே கணிக்கப்பட்டிருந்தார்.

இதன் காரணமாகவே குமாரின் கொலையை உரிமை கோரி 'புலிகளுக்கெதிரான தேசிய முன்னணி' என்ற அமைப்பு வெளியிட்ட அறிக்கையில்கூட குமார் 'சிங்கள மக்களின் துரோகி' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அரசியல் ரீதியான தொடர்புகள் ஏற்படுத்தப்படவேண்டுமென்பதில் குமார் பொன்னம்பலம் நீண்ட நாட்களாகவே ஆர்வங்காட்டி வந்திருந்தார்.

மிகவும் குறைந்தளவு உறுப்பினர்களையே கொண்டிருந்த குமாரின் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி, புலிகள் மீதான தனது ஆதரவை வெளிப்படுத்தியதன் மூலமாகவே அண்மைக்காலங்களில் பிரபலத்தை எட்டியிருந்தது.

கடந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில்கூட தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்திக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அன்று அங்கம் வகித்த அனுரா பண்டாரநாயக்காவையும் அழைத்துக் கொண்டு குமார் வன்னிக்காட்டுக்குச் சென்றிருந்தார்.

புலிகள் தொடர்பான தமது நிலைப்பாட்டை ஒளிவு-மறைவின்றி துணிச்சலோடு குமார் வெளியிடலானார். முக்கிய தென்னிலங்கை ஆட்சியாளர்கள் குமாரின் இத்தகைய போக்கை கவனத்தில் கொள்வதாக வெளிப்படையாகக்காட்டிக் கொள்ளவில்லை. ஆயினும் மறைமுகமாக குமாரின் அரசியல் கருத்துக்களை தென்னிலங்கை அரசியலாளர்கள் கவனத்திலெடுத்தே வந்ததுடன் அவரைப் 'புலிகளின் பேச்சாளர்' என்றே வரையறை செய்துமிருந்தனர்.

இன்றைய இலங்கையின் அரசியல் நிலபரத்தைப் பொறுத்தவரை தமிழீழ

குமார் பொன்னம்பலத்தின் அரசியல் நிலைப்பாடு ஆணித்தரமாக தமிழர் பிரச்சனைக்குரிய தீர்வொன்றை வலியுறுத்துவதாக இருந்தபோதிலும், குமாரின் தனிப்பட்ட வாழ்க்கை என்பது பெரிதும் சிங்கள மக்களுடன் ஒன்று கலந்ததாகவே இருந்தது.

கொழும்பிலே பிறந்து, கொழும்பிலேயே கல்விபயின்று, தமது வாழ்க்கையின் பெரும் பகுதியை கொழும்பிலேயே குமார் கழித்திருந்தார்.

எழுபதுகளின் நடுப்பகுதியில் குமார் பொன்னம்பலம் அவரது தந்தையார் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் இறுதிச் சடங்கிற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த போதே அங்கு ஏராளமான தமிழ் மக்கள் முதல் தடவையாக குமார் பொன்னம்பலத்தை நேரடியாகக் காணும் வாய்ப்பைப் பெற்றிருந்தனர்.

இதன் பின்னர் 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியினால் சேர்த்துக் கொள்ளப்படாத நிலையில் குமார் யாழ் மாவட்டத்தில் போட்டியிட்டார்.

அப்போது தமிழீழம், தனிநாடு என்று தீவிர பிரசாரத்தை மேற்கொண்டிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர்

இந்த ஆயுதக் கலாசாரமே வடக்கு-கிழக்கில் ஓர் இடைவிடாத உள்நாட்டு யுத்தமாகவும் தென்னிலங்கையில் வன்முறைகளாகவும் வெடித்து முழுநாட்டினது அமைதியையும் தற்போது குலைத்து விட்டுள்ளது.

குமார் பொன்னம்பலம் தமிழர்கள் செறிந்து வாழுகின்ற வெள்ளவத்தைப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட அதேதினம், ஓரிரு மணிநேர இடைவெளியில் கொழும்பு பிளவர் வீதியில் தற்கொலைக் குண்டுதாரி ஒருவரது குண்டுவெடித்து பதினொரு பேர்வரை கொல்லப்பட்டிருந்தனர்.

எனவே ஒரே தினத்தில் கொழும்பில் இவ்வாறு இருவேறு வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

இவ்விரு சம்பவங்கள் மூலம் அரசியல் புள்ளிகள் மட்டுமல்ல, வீதிகளில் நடமாடும் அப்பாவிப் பொது ஜனங்களும்கூட வன்முறைக் கலாசாரத்திற்கு இரையாகியுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

எவரையும் எவருமே பாதுகாக்க முடியாது என்ற பீதி நிறைந்த சூழ்நிலையே உருவாகியுள்ளது.

குமாரின் படுகொலை, தனிநபர் பாதுகாப்புக்கு மட்டுமல்ல, பேச்சுரிமை, கருத்துச் சுதந்திரம் என்பவற்றுக்குக்கூட விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவே இருக்கின்றது.

நியாயமான கருத்துக்களை துணிச்சலோடு எடுத்துக் கூறினால் இதுவே கதி என எச்சரிப்பதாகவும் பட்டப்பகலில் நடந்த அப்படுகொலை விளங்குகின்றது.

இன்றைய சந்ததித் தமிழ் மக்களின் தலைவர்களாக இருக்கக் கூடியவர்கள் என்று கருதப்பட்ட அரசியலாளர்களில் பலருமே மலரமுன்னர் உதிர்ந்த மொட்டுக்களாகியுள்ளனர்.

இதனால் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம்கூட சூன்யமாகிவிட்டுள்ளது.

தீவிரவாதப் போக்கையே முறுக்கேற்றியவர்களாக தமிழீழ விடுதலைப் புலிகள் இருக்கின்றனர்.

ஒரு புறம் தென்னிலங்கைப் பேரினவாதிகளின் நெருக்குதல்களும், மற்றொரு புறம் தீவிரவாதப் போக்கின்



தமிழ் அரசியலைப் பொறுத்தவரை தீவிரவாதத் தலைவர்கள் மட்டுமல்ல, மிதவாத அரசியல்வாதிகளும் படுகொலை செய்யப்பட்டு வருவதையே அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில் கடந்த அரை நூற்றாண்டுகாலமாக தமது அரசியல் உரிமைகளுக்காகப் போராட்டம் நடத்தி வருகின்ற இலங்கைத் தமிழர்கள், அரசியல் தலைமைத்துவத்தைப் பொறுத்தவரை அநாதரவாகி வரும் நிலையே காணப்படுகின்றது.

தமிழ் மக்களது நியாயமான அரசியல் உரிமைகளை வழங்குவதற்கு மறுத்து வரும் தென்னிலங்கையின் பேரினவாத ஆட்சியாளர்கள், கடந்த இரு தசாப்த காலத்தில் வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களை சின்னாபின்னப்படுத்தியுள்ளனர்.

அரசியல் உரிமைகளுக்காகப் போராட்டத்தை ஆரம்பித்த தமிழ் மக்கள் தற்சமயம் தமது உயிர் வாழும் உரிமையைக்கூடப் பறிகொடுக்கும் பயங்கரத்துக்கே உள்ளாகியுள்ளனர்.

தென்னிலங்கையின் ஆட்சியாளர்கள் நன்கு திட்டமிட்ட முறையில் வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களை அடக்கி, ஒடுக்கி வரும் அதேசமயம், தமிழ் அரசியல் தரப்புக்கூட ஒற்றுமையீனம், மற்றும் குத்து வெட்டுக்களால் ஒரு பலவீனமான நிலைக்கே தள்ளப்பட்டுள்ளது.

இத்தகைய நிலை, பேரினவாதிகளுக்குத் தமது இனவாத திட்டங்களை நிறைவேற்றப் பெரும் வாய்ப்பையே கொடுத்துள்ளது.

பேரினவாதிகளின் நயவஞ்சகத் திட்டங்களினால் மட்டுமல்ல, தம்மிடையேயான குரோதங்கள் காரணமாகவும் தமிழ் அரசியல் அதள பாதாளத்தை நோக்கி செல்லும் சூழ்நிலையே உருவாகியுள்ளது.

சுமார் 25 வருடங்களுக்குமுன்னர் தமிழ் அரசியல் கட்சிகளென தமிழரசுக் கட்சியும், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியுமே இயங்கி வந்தன.

ஆனால் தமிழரசுக்கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி என்று பெயர் மாற்றம் பெற்ற நிலையில் தற்போது ஐந்துக்கும் மேற்பட்ட தமிழ் கட்சிகள் இருந்து வருகின்றன.

இருந்தபோதிலும் இத் தமிழ்க் கட்சிகளால் தம்மிடையே ஒற்றுமையைக் கட்டிக்காக்க முடியாதிருக்கும் அதேசமயம், தமிழ் மக்களது அரசியல் போராட்டம் தொடர்பாக ஆக்க பூர்வமான பங்களிப்பையும் வழங்க முடியாதுள்ளது.

எனவே தமிழ் மக்களது அரசியல் உரிமைகளுக்கான போராட்டமென்பது எங்கே? எத்திசையில்? எத்தகைய இலக்கை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றதென்பதே விடைகாணப்படமுடியாத கேள்விகளாக இருக்கின்றன.

ஆயினும் குமார் தமது அரசியல் நிலைப்பாட்டை எவ்விதத்திலும் அடைமானம் வைத்துவிடாது தனித்துநின்று தமிழர் பிரச்சனை தொடர்பாக குரல் கொடுத்து வந்தார்.

குமார் பொன்னம்பலம் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் என்று தமது பழம்பெரும் கட்சி சார்பாக கருத்துக்களை- நோட்டங்களை வெளியிடுவதைவிட, ஏறத்தாழ தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் 'பேச்சாளர்' என்ற பாணியிலேயே குமார் தமது அரசியலை நடத்தி வந்தார்.

இதன்மூலம் புலிகளது இராணுவ ரீதியான நடவடிக்கைகளை கொழும்பிலிருந்தவாறு, அரசியல் ரீதியாக குமார் நியாயப்படுத்தி வந்தார்.

கொழும்பில் மட்டுமல்ல, சர்வதேச ரீதியாகக்கூட தாம் பங்குகொண்ட மகாநாடுகள், கருத்தரங்குகள் என்பவற்றிலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாடுகளை ஆதரித்து வந்ததுடன், அவர்களுடன் நடத்தப்படுகின்ற அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலமாகவே இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தீர்வொன்றைக் காணமுடியுமெனவும் திரு.பொன்னம்பலம் வலியுறுத்தி வந்தார்.

# "இறைவன்தான் இனித் தமிழ் மக்களை காப்பாற்ற வேண்டும்!"

## தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம்

இத்தகைய நிலைப்பாடு காரணமாக தென்னிலங்கையின் பேரினவாத அரசியல்வாதிகள் குமார் பொன்னம்பலத்தை ஒரு தீவிர புலிகள் இயக்க ஆதரவாளன் என்றே கருதி வந்தனர்.

பேரினவாதிகள் கொண்டிருந்த குமார் பொன்னனம்பலம் குறித்து இக்கணிப்பே, அவரது திடீர் மரணத்துக்குரிய காரணங்களில் ஒன்றாக இருக்குமென்று பேசப்படுவதையும் அறிய முடிகின்றது.

திரு.பொன்னம்பலம் தமிழீழ விடுதலைப்புலிகளை ஆதரித்த அதேவேளை, வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களது அடிப்படை மனித உரிமைப் பிரச்சனைகள் குறித்தும் குரல் கொடுத்து வந்தார்.

தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தச் சூழல் காரணமாக நிறையவே அடிப்படை மனித உரிமை மீறல்களுக்குள்ளாகியுள்ள வடக்கு-கிழக்கு, மலையகத் தமிழ் மக்களின் சட்டப்பிரச்சினைகள் தொடர்பாக குமார் தமது பங்களிப்பை வழங்கிவந்தார்.

எனவே அரசியல் ரீதியாக மட்டுமல்ல, சட்ட ரீதியாகவும் குமார் தமிழ் மக்கள் மீது பரிவு காட்டியிருந்தார்.

விடுதலைப் புலிகளுடன் பேசியே இனப்பிரச்சனைக்குத் தீர்வொன்றைக் காணமுடியுமென்பதையே அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிக்காகூட இக்கருத்தை அடிக்கடி கூறிவருபவராகவே இருக்கின்றார்.

எனவே பாராளுமன்றிலோ அல்லது வேறு நிறுவனங்களிலோ தமிழ் மக்களின் பிரதிநிதி என்ற அந்தஸ்த்தில் குமார் பொன்னம்பலம் இல்லாதிருந்திருக்கலாம்.

ஆனால் ஒரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினரையோ அல்லது அமைச்சரையோவிட மிகவும் ஆணித்தரமாகவும், ஆக்ரோஷமாகவுமே குமார் பொன்னம்பலம் தமிழர் பிரச்சனை குறித்து இடித்துரைத்து வந்தார்.

பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்பவை தனது பிறப்புரிமைகளாகும் என்ற வகையிலேயே குமார் பொன்னம்பலம் தனது கருத்துக்களை முன்வைத்து வந்தார்.

அடி வருடித்தனமாகவோ அல்லது தென்னிலங்கை அரசியல் வாதிகளின் தயவிலோ அரசியல் நடத்தாது தமக்கென ஓர் அரசியல் போக்கை வகுத்து, முழுமையான ஒரு தமிழ் அரசியல் வாதியாகவே திரு.குமார் பொன்னம்பலம் தம்மை இனங்காட்டி வந்தார்.

குமார் பொன்னம்பலத்தை தமது விரோதி என்றே கூறிவந்தனர்.

1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைத்த தனிநாட்டுக் கோரிக்கை மிகவும் பிரபலமடைந்திருந்தமையால், அன்றைய தேர்தலில் வடக்கு-கிழக்கில் ஒரு பேரலையாகவே கூட்டணிக்கு வெற்றி கிட்டியிருந்தது.

ஆனால் 1977ம் ஆண்டு தமிழ் அரசியல் அரங்கிலும், தென்னிலங்கை அரசியல் கோதாவிலும் தோன்றிய மாற்றங்கள் இருதரப்பு அரசியல் நடவடிக்கைகளிலும் பல்வேறு திருப்பங்களுக்கு வழியமைத்தன.

தமிழ் அரசியலில் மிதவாதப்போக்கு வீழ்ச்சி நிலையை எட்டியதுடன் தீவிர வாத அரசியல் மேலோங்கலாயிற்று.

தென்னிலங்கையில் இருந்து வந்த பிரிட்டனின் 'வெஸ்ட் மின்ஸ்டர்' பாராளுமன்ற ஆட்சிமுறையைத் தழுவிய அரசியல் நடவடிக்கை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை என்ற புதிய வடிவத்தைப் பெறலாயிற்று.

காலப்போக்கில் வடக்கு-கிழக்கின் தீவிரவாத நடவடிக்கைகளும், தென்னிலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையும் முழு நாட்டையும் ஓர் ஆயுதக் கலாசாரத்தை நோக்கியே வழிநடத்தலாயின.

அச்சுறுத்தல் காரணமாக உறுதியான அரசியல் நிலைப்பாட்டை எடுக்க முடியாதவர்களாக கொழும்பிலுள்ள தமிழ் மிதவாத அரசியல் வாதிகள் காணப்படுகின்றனர்.

இது தவிர முன்பு தீவிரவாத அரசியலில் ஈடுபட்டு தற்போது, மிதவாதத்துக்குத் தாவியுள்ள தமிழ் அரசியல் அமைப்புக்கள் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆட்சியாளரையே பெரிதும் சார்ந்திருக்க வேண்டியதாகவும் இருக்கின்றது.

இந்நிலையின் தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிப்பது யார்? என்ற கேள்விக் குறியே புடைத்து நிற்கின்றது.

புத்தாயிரம் ஆண்டின் பிறப்பிலாவது, தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைக்குமா? என்ற எதிர்ப்பார்ப்புத் தோன்றியிருந்த தறுவாயில் புத்தாண்டின் முதல் வாரத்திலேயே முக்கிய தமிழ்த் தலைவரான குமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்டுள்ளார். அத்துடன் கொழும்பு நகரிலும் குண்டுவெடித்து அநர்த்தம் நிகழ்ந்துள்ளது.

"இறைவன் தான் தமிழ் மக்களை இனிக் காப்பாற்ற வேண்டும்!" என்று தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் முன்பொருதடவை கூறியிருந்தார்.

அக்கூற்றே இக்காலத்துக்கும் கூடப் பொருந்துவதாக இருக்கின்றது.

உண்மைத் தொடர்

அதிர் இடி 92


**கடந்தவாரம்**

**கண்காட்சி அறையில் நின்றிருந்த ∴புளோராவை தன் அலுவலகத்துக்கு வரவழைத்து சில கேள்விகளைக் கேட்ட அமீன், அவளுடைய கோப்பில் எதையோ எழுதி, ஜனாதிபதி அலுவலகத் தலைவரிடம் காரில் அனுப்பி வைத்தான். எத்தகைய கோப்பிலும் குறிப்போ கையொப்பமோ இடாத அமீன், ∴புளோராவின் கோப்பில் குறிப்பெழுதியிருந்ததைக் கண்டு திகைத்தார்.**

**கைதிகளை விடுவிக்க விதிக்கப்பட்ட காலக் கெடு நீடிக்கப்பட்டது. அமீன் மொறீஷியஸ் நாட்டில் நடைபெறவிருந்த ஆபிரிக்க நாட்டுத் தலைவர்களின் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளத் திட்டமிட்டான். ஆகவே ஜுலை 4ம்திகதி ஞாயிற்றுக்கிழமை வரை காலக் கெடு நீடிக்கப்பட்டது.**

இனி...

# இடி அமீன்



மொறீஷியஸ் சென்று மாநாட்டில் கலந்து கொண்டு, அந்நாட்டின் பிரதமரிடம் தனது தலைமைப் பதவியைக் கையளிக்காமல்விட்டால் தன்னைப் பயந்தாங்கொள்ளி என்று ஏனைய ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் தீர்மானித்து விடக்கூடும் என்று அமீன் நினைத்தான். அத்துடன் உகண்டாவில் நடந்தேறும் விமானக் கடத்தல் நாடகத்தில் தானும் பிரதானமான பங்கு வகிப்பதாகக் காட்டிக் கொள்ளவும் கிடைத்துள்ள வாய்ப்பினைப் பெற்றிருப்பதை ஆபிரிக்க நாட்டுத் தலைவர்களிடம் புகழ்ந்து பேசவும் வாய்ப்புக் கிட்டியிருப்பதை நழுவ விடவும் அமீனுக்கு விருப்பமில்லை.

வியாழக்கிழமை பிற்பகல் மொறீஷியஸ் நாட்டுக்கு அமீன் விமானமேறினான். ஜூலை 4ம் திகதி ஞாயிறு அதிகாலை 1.00 மணிக்கு பாலஸ்தீனர்களின் காலக்கெடு முடிவடைகிறது. அதற்கிடையில் நாடு திரும்பிவிடலாம் என்று அமீன் திட்டமிட்டான்.

உண்மையில் பணயக் கைதிகளைக் கொன்றொழித்துவிடும் எண்ணமெதுவும் அமீனுக்கு இருக்கவில்லை. அவ்வாறானால் உலகில் அவனுக்கு தற்போதிருக்கும் கெட்ட பெயருக்கு மேலும் கேவலமான பெயர் ஏற்பட்டுவிடும். இதனையும் தனது கருத்தில் கொண்டவனாகவிருந்தான். மொறீஷியசிலிருந்து தான் நாடு திரும்புவதற்கிடையில் எதுவும் நடந்து விடப்போவதில்லை என்ற நம்பிக்கை அமீனுக்கு இருந்தது.



அமீன் நாட்டில் இல்லாதது இஸ்ரேலியர்களுக்கு நல்ல வாய்ப்பாகப் போய் விட்டது. அவர்களுடைய புலனாய்வுத் துறையினரும் அதிரடிப்படையினரும், பணயக் கைதிகளைப் பக்குவமாக விடுவிக்கத் துரிதமான திட்டங்களைத் தயாரித்தனர்.

எண்டபே விமான நிலையப் பழைய பயணிகள் தங்கு மண்டபத்தில் பணயக் கைதிகள் பலருக்கு உபாதைகள் கண்டிருந்தன. பெரும்பாலும் வயிற்றோட்டம், வாந்தி, தலைவலி ஆகியவை அவர்களை வாட்டி வதைத்தன. பலர் மனம் பேதலித்த நிலையில் விரக்தியுடன் இருந்தனர். சில சுகதேகிகளும் நோயாளிகள் போன்று பாசாங்கு செய்தனர்.

இடி அமீன், சுகாதார அமைச்சர் சியம்பாவுடன் தொடர்பு கொண்டு, கைதிகளுக்கு போதுமான வசதிகளைச் செய்து கொடுக்குமாறு ஆணையிட்டிருந்தான். அக்கட்டடத்தில் போதுமான சுகாதார வசதிகளும் தண்ணீர் வசதிகளும் இல்லாமையினால்தான் நிலமை மோசமடைந்திருந்தது.

ஜூலை 2ம் திகதி வெள்ளிக்கிழமை பணயக் கைதிகளில் மூதாட்டி ஒருவர், உணவு உட்கொள்ளும் போது ஓர் இறைச்சித் துண்டு அவருடைய தொண்டையில் சிக்கிக் கொண்டது. மூச்சுத் திணறித் துன்பப்பட்டார். உடனடியாக முலாகோ மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிறு சத்திரசிகிச்சைமூலம் அந்த இறைச்சித் துண்டு அகற்றப்பட்டது.

டாக்டர் சியம்பா அந்தப் பெண்ணை அடுத்த நாட்காலை மருத்துவமனையில் சென்று பார்வையிட்டார். அவர் இங்கிலாந்தைச் சேர்ந்தவர்; இஸ்ரேல் குடியுரிமையையும் பெற்றிருந்தார். டோரா புளொச் என்பது அவருடைய பெயர். ஒரு பொல்லின் துணையுடன் தான் இவரால் நடமாட முடியும்.

அமைச்சர் சியம்பா டோராவைச் சென்று பார்த்து நலம் விசாரித்தார். தான் பூரண குணமடைந்து விட்டதாகவும் விமான நிலையத்திலுள்ள தனது மகனை நினைத்துக் கவலைப்படுவதாகவும் கூறினார்.

டோரா புளொச்சுக்குக் காவலாக மருத்துவமனையில் ஒரு பொலிஸ் காரரை விட்டிருந்தனர். யன்னலினூடாகத் தன்னை அந்தப் பொலிஸ்காரர் பார்த்து முறைப்பதாகவும் அது தனக்கு அச்சமூட்டுவதாகவும் சியம்பாவிடம் அம்மூதாட்டி முறையிட்டார். அமைச்சர் அந்தப் பொலிஸ்காரரிடம் சென்று, அவ்வாறு அம்மூதாட்டியிடம் நடந்து கொள்ளவேண்டிய அவசியமில்லை, என்று கூறி, ஓர் ஓரமாக அமர்ந்து கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். வயதான அம்மாது, ஒரு பொல்லின் உதவியின்றி நடமாட முடியாத நிலையிலுள்ளமையினால் அவர் ஓடித் தப்பிவிட முடியாது; என்றும் பொலிஸ்காரரிடம் அறிவுறுத்தினார். டோரா அமைச்சருக்கு நன்றி தெரிவித்தார்.

அந்த அம்மையாரைப் பார்க்கும்போது அமைச்சர் சியம்பாவுக்குத் தன் தாயின் நினைவே எழுந்தது. இதனால் அவர்மீது ஒரு பற்றும் ஏற்பட்டிருந்தது. மருத்துவமனையின் 6வது மாடியிலுள்ள பிரமுகர்களுக்கான பிரிவில் டோரா வைக்கப்பட்டிருந்தார்.

அன்று மாலை இஸ்ரவேல்-ரெல் அவிவ் வானொலிச் செய்தியில், இடி அமீன் மொறீஷியஸ் நாட்டிலிருந்து புறப்பட்டு, உகண்டா வந்து கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. இச் செய்தியைச் செவிமடுத்த அமைச்சர் சியம்பாவுக்கு அதிர்ச்சியாகவிருந்தது. தங்கள் நாட்டின் தலைவர் தமது நாடு திரும்பும் செய்தி அந்நாட்டுக்கே தெரியாதிருக்கும்போது, இஸ்ரேல் வானொலி அறிவித்துள்ளதே எனறு வியப்படைந்தார். அமீன் பயணம் செய்யும் விமானம் பற்றிய விவரங்களும், அது எண்டபே விமான நிலையத்தில் சரியாக எத்தனை மணிக்குத் தரை இறங்கும் என்பது பற்றியும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இச் செய்தியில் கூறப்பட்ட மணிக்கணக்குப்படி அன்று பிற்பகல் அமீன் விமான நிலையத்தை வந்தடைந்தான். உடனடியாகவே பணயக் கைதிகளைச் சென்று பார்வையிட்டான். அப்போது அங்கு 106 இஸ்ரேல் நாட்டுப் பிரஜைகள் மட்டும் இருந்தனர். ஏனையோர் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

அமைச்சர் சியம்பாவுடன் அமீன் தொடர்பு கொண்டு விசாரித்தபோது டோரா புளொச் பற்றியும் அமைச்சர் குறிப்பிட்டார். அடுத்த நாட்காலைக்கிடையில் அந்த அம்மையாரை விமான நிலையத்தில் கொண்டு போய்ச் சேர்க்க ஏற்பாடு செய்யும்படி அமைச்சரிடம் அமீன் சொன்னான்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தவர்களின் காலக்கெடு முடிவதற்கு அரை மணி நேரம் மட்டுமே இருக்கும்போது, நள்ளிரவு கடந்து 12.30க்கு அமைச்சர் சியம்பாவின் வீட்டு தொலைபேசி அலறியது.

அமீனின் ஆசை நாயகி ஒருத்தியின் ஆவலக் குரல் மறுமுனையில் ஒலித்தது. கம்பலாவிலிருந்துதான் அந்த அம்மையார் பேசினார். அப்போதுதான் அமீன் தனக்கு அழைப்பெடுத்து, விமான நிலையத்தில் மோதல் ஒன்று ஏற்பட்டிருப்பதாகவும், அவளுக்காக ஒரு காரை அனுப்பியுள்ளதாகவும், அதில் ஏறி எங்காவது தப்பி ஓடிவிடுமாறும் அமீன் கேட்டுக் கொண்டதாக அப்பெண் அழுதழுது கூறினார்.

## தருவது அழகன்

தான் எங்கோடிச் சென்று தப்பலாம் என்று சியம்பாவிடம் ஆலோசனை கேட்டாள். இச் செய்தி சியம்பாவுக்கே பெரும் குழப்பத்தினை ஏற்படுத்தியது. ஆனால் அவருக்கு ஒன்று தெளிவாகத் தெரிந்தது. பணயக் கைதிகளை விடுவிக்க இஸ்ரேலியர்கள் தான் ஏதோ ஒரு நடவடிக்கையில் இறங்கியுள்ளனர் என்று அவர் திடமாக நம்பினார்.

தெல்-அவிவ் வானொலிச் செய்தியைக் கேட்டதிலிருந்து சியம்பாவுக்கு இஸ்ரேலியர் எதுவும் செய்வார்கள் என்ற எண்ணம் உதித்திருந்தது. தனது மனைவி தெரேசாவிடம் தனது எண்ணத்தைக் கூறிவிட்டு சியம்பா படுத்துக் கொண்டார்.

உகண்டா இராணுவத்தில் ஒரு பிரிவினர் எப்போதும் அமீனுக்கு விரோதமாகவே செயற்பட்டு வந்தனர். அவர்களில் ஒரு குழுவினரே இராணுவ உள் மோதலில் ஈடுபட்டுள்ளனர், என்று அமீன் கருதினான். இதனால் அமீனே தனது அரச மாளிகை, வாகனச் சாரதி ஒருவனின் வீட்டோடு இருந்த வாகனம் நிறுத்தப்படும் கறாஜுக்குள் புகுந்து கொண்டான்.

கம்பலா நகரம் அல்லோல கல்லோலப் பட்டது. முக்கியமாக எண்டபேயில் என்ன நடக்கிறது என்று தெரியாத நிலையில் எங்கும் பதற்றம் நிலவியது.

(இடி தொடரும்)

# அமைச்சரின் ஆசை



அமெரிக்காவின் வெளியுறவு அமைச்சரான மேடலின் அல்பிரைட் அம்மையார் இன்றைய அமெரிக்க அரசில் ஒரு சக்தி வாய்ந்த பதவியில் இருப்பவர்.

உலகம் எங்கும் வெளிநாட்டு விவகாரங்களில் தனது நாட்டாண்மைத்தனத்தைக் காட்ட விரும்பும் அமெரிக்காவின் சார்பில் அனைத்து வெளிநாட்டு விவகாரங்களையும் கவனிப்பதும் கிளின்டனுக்கு ஆலோசனை கூறுவதும் இவர்தான்.

இவருக்கு இருக்கும் சினிமா மோகம் தான் ஆச்சரியமானது.

ஜேம்ஸ் பொண்டாக நடித்துப் புகழ் பெற்ற சீன் கொனரிக்கு அண்மையில் அமெரிக்க அரசு விருந்து கொடுத்துக் கௌரவித்தது. அதில் மேடலின் அம்மையாரும் கலந்து கொண்டார். அந்த விருந்தின்போது அவருக்கு ஓர் ஆசை வந்தது.

அந்தக் காலத்தில் சீன் கொனரி தனது படக் கதாநாயகிகளுடன் இணைந்து படங்களுக்குப் போஸ் கொடுப்பார் அல்லவா? அதே போன்று தானும் சீன் கொனரியுடன் நின்று ஃபோட்டோ எடுத்துக் கொள்ள ஆசை வந்தது அம்மையாருக்கு.

அதாவது ஒரு நிமிடம் சீன் கொனரியின் கதாநாயகியாக வர ஆசைப்பட்டார். அப்படியே அவருடன் சேர்ந்து ஃபோட்டோ ஒன்றும் எடுத்துக் கொண்டார். அந்த விழாவில். புகைப்படத்தில் கொனரியுடன், மேடலின் நிற்கும் ஸ்டைலைப் பார்த்தால் அந்தக்கால நாயகிகளே அசந்து விடுவார்கள்.

சினிமாவுக்கு இருக்கும் மவுசுக்கு இதுவும் ஒரு அத்தாட்சி.

# மொட்டை நாயகி



'ஃபயர்', 'ஏர்த்' போன்ற சர்ச்சைக்குரிய படங்களை இயக்கியவர் தீபா மேத்தா. இவர் எடுக்கப்போகும் அடுத்த படத்தின் பெயர் 'வோட்டர்'. படம் எடுக்க முன்னரே படத்தைப் பற்றிப் பரபரப்பான செய்திகள் அடிபடுகின்றன.

இந்தப் படத்தில் மனிஷாவை அல்லது தபுவை நடிக்க வைக்கப்போவதாகத் தீர்மானித்துள்ளார் தீபா. ஆனால் நாயகி மொட்டை போட்டுக்கொள்ள வேண்டும் என்பதுதான் தீபாவின் நிபந்தனை.

இருவரில் யார் மொட்டை போட்டுக் கொள்வார்கள் என்று பரவலாக அடிபடும் கேள்வி. உண்மையிலேயே மொட்டை அடித்துக் கொண்டால் யார் அழகாக இருப்பார்கள் என்று கம்பியூட்டர் உதவியுடன் மனிஷா, தபு ஆகியோரது படங்களை மொட்டை அடித்து பிரசுரித்துள்ளது ஓர் ஆங்கில சஞ்சிகை.

படத்தில் மொட்டை அடிக்கப்பட்டிருக்கும் மனிஷா அழகான நாயகியாக இருக்கிறாரா?

# கடவுளின் குழந்தை

'இறைவனின் தூதர்' என்கிறார்கள் அமெரிக்காவின் மார்ஷல் போல் என்ற சிறுவனை.



திருஞானசம்பந்தர் 3 வயதிலேயே தேவாரம் பாடி சிவனையும் பார்வதியையும் அடையாளம் காட்டினார். அதே போல், மார்ஷல் போல் தனது ஆறாவது வயதிலேயே உலகம் புகழும் கவிஞனாகி விட்டான்.

'எனது விருப்பங்கள் விடுதலை பெறத் துடிக்கின்றன. மலை முகடுகளில் கவிந்து கிடக்கும் மேகக் கூட்டமாய் நான் நல்ல கருத்துக்களை நாடிக் கவிந்திருக்கிறேன்.' என்ற அற்புத வரிகளை எப்படி இந்தச் சிறுவனால் செதுக்க முடிந்தது?

ஆச்சரியமான அதிசயம்.

பிறக்கும்போதே மூளையின் செயற்பாடு சரி இல்லை. இன்றுவரை என்ன நோய் என்று மருத்துவ விஞ்ஞானிகளால் இனம் காண முடியவில்லை.

மார்ஷல் குழந்தையாக இருந்தபோது, பலவகைக் குரலெழுப்பும் பொம்மையைக் காட்டி அவனது தந்தை விளையாடிக் கொண்டிருந்தபோது, அதன் பட்டனைத் தலையால் தட்டி பூனையின் சத்தத்தைக் கேட்டு உற்சாகமாகி இருக்கிறான்.

பிறர் துணையின்றி அசையக்கூட முடியாத மார்ஷல் 3 வயதிலேயே கவிஞனாகி விட்டான். 'கடவுளின் முத்தம்' என்ற தத்துவப் பாடல்களைத் தந்திருக்கும் இந்த ஞானக் குழந்தைக்கு இன்னமும் பேச்சுவரவில்லை.

# குழந்தை விற்பனை

மெக்ஸிகன் கடற்கரையோரமுள்ள தபாசுலா நகரத்தில் ஜோஸ் லூயிஸ் கோர்ட்டில் லோ என்பவன் கையில் குழந்தையை வைத்துக் கொண்டு வீடு வீடாக ஏறி இறங்கிக் கொண்டிருந்தான்.

ஒவ்வொரு வீட்டிலும் அவன் விற்க வந்த பொருளைக் கேட்டு அந்த வீட்டுக்காரர்கள் அதிர்ந்தனர். காரணம், அவன் விற்க முனைந்தது கையில் இருந்த குழந்தையை.

"இது என்னுடைய குழந்தைதான். பிறந்து இரண்டரை மாதங்கள் ஆகின்றன. பத்தரை டொலர்கள் கொடுத்து எடுத்துக் கொள்ளுங்கள்!" என்றான்.

"வேண்டாம்" என்று வீட்டுக்காரர்கள் சொன்னபோது, "சரி ஐந்து டொலர்களாவது கொடுங்கள்" என்று இன்னும் கொஞ்சம் இறங்கி வந்தான்.

இவனது செய்கையைப் பார்த்த ஒருவர் பொலிசுக்குப் ஃபோன் செய்ய, உடனடியாக வந்த பொலிஸ் இவனைக் கைது செய்தது.

"குடிப்பதற்குப் பணம் இல்லாததால் குழந்தையை விற்கத் தீர்மானித்தேன்!" என்றான் அவன் பொலிசாரிடம்.

# தானம் கேட்கும் அழகி



ஒரு பெண் அழகானவர் என்பது அவரின் உடல் அமைப்பை மட்டும் பொறுத்த விடயமல்ல. அவரது மன அழகையும் பொறுத்த விடயம்.

அந்த விதத்தில் முன்னாள் உலக அழகியும், நடிகையுமான ஐஸ்வர்யா ராய் ஒரு முழுமையான அழகிதான்.

ஐஸ்வர்யா ராய் கண்தானம் செய்வது பற்றிப் பிரசாரம் செய்து வருகிறார். இந்தியாவின் ஹைதராபாத் கண் வங்கிக்கு வருடத்திற்கு இரண்டாயிரத்து ஐநூறு கண்கள் மட்டுமே கிடைத்தன.

இப்போது ஐஸ்வர்யா ராய் பிரசாரம் செய்ய ஆரம்பித்த மூன்றே மூன்று மாதத்தில் 22 ஆயிரத்து 500 கண்கள் தானமாகக் கிடைத்துள்ளன.

ஐஸ்வர்யா ராயின் அழகிய கண்களே தானமாகக் கேட்கும் போது, நாம் கண்களைக் கொடுத்தால் என்ன என்று மக்கள் முடிவு செய்துவிட்டார்களோ என்னவோ.

## மனிதத் தலை ஆட்டுக்குட்டி

↓ ஒட்டிப்பிறந்த இரட்டையரை சியாமிஸ் இரட்டையர் என அழைப்பார்கள். தமிழ் நாட்டில் உள்ள விழுப்புரத்திற்கு அருகே அரசாலபுரம் என்ற கிராமத்தில் இரட்டை ஆட்டுக்குட்டிகள் ஒட்டிப்பிறந்துள்ளன.

இந்த சியாமிஸ் இரட்டை ஆட்டுக் குட்டிகளில் ஒன்றின் தலை மனித உருவத் துடன் ஒட்டிப்பிறந்துள்ளது. இந்த அதிசயக் குட்டிகள் இரண்டும் பிறந்து சில மணிநேரத்தில் உயிரிழந்துவிட்டன. ■





## கார் சாகசம்

↑ படத்தைப் பார்த்ததும், 'இது என்ன இரண்டு சக்கர கார்ப்பந்தயமா?' என்று நினைக்கத் தோன்றுகிறது அல்லவா?

அண்மையில் சீனாவில் உள்ள உரும்கி என்ற இடத்தில் கார்களின் சாகச நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளில் ஒன்றான கஜகஸ்தான் நாட்டைச் சேர்ந்த கார்கள் சாகசம் புரிந்த காட்சியே இது. ■



## நீளவால் குரங்கார்

↑ இலத்தீன் அமெரிக்காவின் வெப்பமண்டலப் பகுதியில் காணப்படும் அதிசய விலங்குகளில் ஒன்று நீளவால் குரங்கு.

இதன் உடல் மற்ற குரங்குகளில் இருந்து வேறுபட்டதாகும். அதாவது இதன் உடல் முழுவதும் ரோமம் அடர்ந்து இருக்கும். மேலும் இது அளவில் மிகச் சிறியது.

படத்தில் இருக்கும் இந்தக் குரங்காரும் நீள வாலுள்ளவர் தான். இதனை 'இன்டர்நெட்' மூலம் விலைபேசி வாங்கினார் ஒரு பெண். அவர் இந்த குட்டிக் குரங்காரைக் கொண்டு செல்லும்போது வனவிலங்கு பாதுகாப்பு அமைப்பிடம் மாட்டிக்கொண்டார்.

அந்தப் பெண்ணிடம் இருந்து குட்டிக்குரங்காரை மீட்டு மிருகக் காட்சிசாலை ஒன்றில் ஒப்படைத்து விட்டார்கள். ●

## பிரமாண்ட மரம்



↑ தேவாலயங்களிலும், கிறிஸ்தவர்களின் இல்லங்களிலும் கிறிஸ்துமஸ் காலத்தில் 'கிறிஸ்துமஸ் மரம்' காட்சியளிக்கும். தமது வாடிக்கையாளர்களைக் கவர அநேகமான கடைக்காரர்கள் தமது கடைகளிலும் 'கிறிஸ்மஸ் மர'த்தை அலங்கரித்து வைப்பார்கள்.

ஃபிரான்ஸ் நாட்டில் 'காலரி லாபெய்ட்' என்ற அங்காடி நிர்வாகத்தினர் தமது வாடிக்கையாளர்களைக் கவர 'கிறிஸ்துமஸ் மரம்' ஒன்றை அலங்கரித்து வைத்தார்கள். அது பார்ப்போரை அசர வைத்து விட்டது.

இந்த 'கிறிஸ்துமஸ் மர'த்தின் உயரம் 120 மீட்டர். இந்த பிரமாண்ட 'கிறிஸ்துமஸ் மர'த்தைப் பார்வையிடவே பலர் அங்காடிக்குள் கூடி விட்டனர். ■

## கடலில் மூழ்கும் கப்பல்



## ஊனம் தடை அல்ல

↑ தமிழ்நாட்டில் உள்ள கோவை மாவட்டத்தில் இருக்கும் ஊனமுற்றோர் பாடசாலையில் ஆதரவற்ற, ஊனமுற்ற, மனவளர்ச்சி அற்ற குழந்தைகள் இலவசமாகக் கல்வி கற்கிறார்கள்.

இங்கு படிக்கும் ஒன்பது வயதான பி. முத்துக்குமார் என்ற சிறுவன் தொடர்ந்து ஒரு மணி நேரம் நடனமாடி சாதனை புரிந்திருக்கிறான். இவனுக்கு கைகள் போதிய வளர்ச்சி பெறவில்லை.

இன்னொரு மாணவனான வி. சரவணனுக்கு போலியோ தாக்கி நடக்க முடியாமல் போய்விட்டது. இந்தச் சிறுவன் தலைகீழாக கைகளினால் 1500 மீட்டர் ஓடிச்சாதனை புரிந்திருக்கிறான்.

சாதனைகள் படைக்க ஊனம் ஒரு தடை அல்ல என்பதை இந்தப் பிஞ்சுகள் நிரூபித்து விட்டார்கள் அல்லவா?



↑ மால்ட்டா நாட்டைச் சேர்ந்த எண்ணெய்க் கப்பலான 'எரிக்கா' ஏறத்தாழ 30 ஆயிரம் தொன் எண்ணெய்யை ஏற்றிக்கொண்டு செல்லும்போது, கடலில் கொந்தளிப்பு ஏற்பட, அதில் சிக்கிக்கொண்டது.

ஃபிரான்ஸ் நாட்டின் அருகே பிஸ்கே குடாவில் வீசிய புயலில் இக்கப்பல் இரண்டாகப் பிளந்து கடலில் மூழ்கும்போது எடுக்கப்பட்ட படம் இது.

கெட்ட நேரத்திலும் ஒரு நல்ல நேரம், இதில் பயணம் செய்த 26 மாலுமிகளும் எந்த உயிராபத்துமின்றி காப்பாற்றப்பட்டு விட்டனர். ■

தகவல் பெட்டி

## இன்னொரு வரவு

இலண்டனில் பார்த்த உத்தியோகத்தை உதறி விட்டு சினிமாவில் நடிக்கவந்தார் 'ரோஜாவனம்' ஆகாஷ். இதே போல மலேசியாவில் இருந்து வந்திருக்கும் இன்னொருவர் அரவிந்தன்.

மலேசியாவில் இருந்து இந்தியா வந்து நடனம், சண்டை போன்றவற்றைக் கற்றுக் கொண்டு சினிமா வாய்ப்புத் தேடினார். பலன் கிடைத்தது. கணேஷ்ராஜ் இயக்கத்தில் நெப்போலியன் கதாநாயகனாக நடிக்கும் 'பரணி' படத்தில் அரவிந்தனுக்கு இரண்டாவது கதாநாயகன் வேடம்.

அத்துடன் சத்யராஜ் நடிக்கும் படத்தில் நடிக்கவும் ஒப்பந்தமாகியுள்ளார். ஷாருக்கான் போன்று ஹீரோ-ஆண்டி ஹீரோ வேடங்களில் நடிப்பதையே விரும்புகிறார் அரவிந்தன்.

## உயர்த்தினார் ஜோதிகா

ஜோதிகா தனிக்கதாநாயகியாக நடித்த 'பூவெல்லாம் கேட்டுப்பார்' தோல்விப்படம். இருந்தும் 'வாலி'யில் சின்ன வேடத்தில் தோன்றி, அது வெற்றி பெற்றதால் பல படங்களில் ஒப்பந்தமானார்.

விஜய்யுடன் நடிக்கும் 'குஷி'யும் அஜித்துடன் நடிக்கும் 'முகவரி'யும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருப்பதால் தனது சம்பளத்தை ஒரேயடியாக உயர்த்தி விட்டார்.

ஜோதிகா ஒரு படத்திற்கு வாங்கும் சம்பளம் இந்திய மதிப்பில் இருபத்தைந்து இலட்சம் ரூபா.

## விஜயகாந்திற்கு சவால்

சர்வதேச பயங்கரவாதி ஒருவனைப் பிடித்து சிறையில் அடைக்கிறார்கள். அவனிடம் இருந்து உண்மைகளை வரவழைக்க பொலிஸ் அதிகாரி ஒருவர் நியமிக்கப்படுகிறார்.

அந்த அதிகாரி முதல் வேலையாக அந்த வழக்கில் சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரிகளையும் மாற்றிவிட்டு, நேர்மையான அதிகாரிகளை நியமிக்கின்றார்.

அந்த சர்வதேச பயங்கரவாதி, பொலிஸ் அதிகாரியிடம் "நீ என்னை உள்ள வைச்சிருந்தாலும் ஒண்ணுதான், வெளியில விட்டாலும் ஒண்ணுதான். நீங்க என்னைப் பிடிச்சு 25 நாள் ஆயிடுச்சு. உன் அனுமதி இல்லாமல் என்னை யாரும் பார்க்க முடியலை. ஃபோன், செல்லுலர்னு என்கிட்ட எதுவும் கிடையாது.

ஆனால் நான் உள்ளே இருந்துக்கிட்டே ஒரு கலவரத்தை ஏற்படுத்தப்போறேன். இன்னைக்கு விலைவாசி உயர்வைக் கட்டுபடுத்த மக்கள் போராட்டம் ஒண்ணு நடக்க போகிறது. போராட்டத்துல உள்ள என்னோட ஆட்கள் பொலிஸ்காரன் ஒருத்தனை கொன்னுடுவாங்க.

உடனே பொலிஸ்காரங்க மக்கள் மேலே கோபமாகிசுட்டுதள்ள ஆரம்பிக்க மக்கள் மிரண்டு ஓடுவாங்க. பெரிய கலவரமே உருவாகும். முடிஞ்சா இதை நீ நிறுத்திப்பார்" என்று பொலிஸ் அதிகாரிக்கு சவால் விடுகிறான்.

இப்படி ஒரு காட்சி 'வல்லரசு' படத்துக்காகப் படமாக்கப்பட்டது. பொலிஸ் அதிகாரியாக விஜயகாந்தும், சர்வதேச பயங்கரவாதியாக முகேஷ் ரிஷியும் நடித்தனர்.



விஜயகாந்த்
படம்: வல்லரசு

திரையுலக மறுபக்கம் (133)

தமிழ்நாட்டிலிருந்து மயன்

## கவ...
## கட...

இடுப்பு 'மடிப்பை'க்காட்டிக் கிற... மான நடிகை அவர். இவருக்கும் தமிழ... உயரதிகாரி ஒருவரின் மகனுக்குமிடை... இதுபற்றி ஏற்கனவே முரசில் செய்தி...

நடிகை அந்த வாலிபரை தனது ... எல்லோரிடமும் கூறி வந்தார். அடி... வாலிபரும் ஹொட்டல்களில் அறை... பகலாக ஆலோசனை பண்ணுவார்கள்...

வழக்கம்போல நடிகையும் வாலிபரு... கார ஹொட்டலில் அறை எடுத்தார்கள்... தைத் தெரிந்து கொண்டார் நடிகை... நண்பர்.


உடனே அவர் குறிப்பிட்ட ஹொட்... வந்தார். அன்றிரவு தான்தான் நடி... டும் என்றார். நடிகையின் ஆலோசகர்... வாலிபர் மறுத்துவிட்டார்.


### யார் தங்குவது?

இப்போது நடிகையுடன் யார் த... இரண்டு பேருக்கும் போட்டி. வாக்குவா... அவர்கள் இருவரும் கட்டிப் புரண்டு... னர்.

சண்டையை நிறுத்துமாறு நடிகை... டார். ஹொட்டல் ஊழியர்கள் வந்து இ... விட, மறுபடியும் அவர்கள் சண்டை... தார்கள்.

இறுதியில் விஷயம் பொலிசுக்கும்... நடிகை கொஞ்சம் கூட அலட்டி...





நெப்போலியன்-ரவளி
படம்: செக்யூரிட்டி ஆபிஸர்

## காதோடு சொல்லுகிறோம்


'சுந்தரமான நடன இயக்குநருடன் நெருக்கமாக இருக்கும்...ரன்' நடிகை குறித்த நேரத்தில் படப்பிடிப்புக்கு வரமாட்டாராம். இதேவேளை இவரது காதலரை படத்தின் நடன இயக்குநராகப் போட்டுவிட்டால் அம்மணி குறித்த நேரத்தில் படப்பிடிப்பிற்கு ஆஜராகி விடுவாராம்.

மும்பாயில் இருந்து 'காதல் கவிதை' படித்த நாயகி, தமிழில் பெரிய நிலைக்கு வரலாம் என்ற கனவில் சென்னையிலேயே வீடு பிடித்துக் குடியேறினார். நடிகையின் படங்கள் தோல்வியைத் தழுவ, ராசியில்லாத நடிகை என்று பட வாய்ப்புக்கள் வரவில்லை. வீட்டைக் காலி செய்து விட்டு மும்பைக்கே பறந்து விட்டார்.

இளந்தானத்தை மையமாக வைத்து படத்தை இயக்கிய புதுமுக'குமாரன்' இயக்குநர் இப்போது பார்ட்டி வைப்பதில் பேர் போன நட்சத்திர குடும்பத்தில் காணப்படுகின்றார். நட்சத்திர குடும்பத்தின் ஆண் வாரிசை வைத்து படமொன்றை இயக்குவதால் அவர்கள் அவரை நல்ல விதமாகக் 'கவனி'க்கிறார்களாம்.

'காதல்மன்னன்'ஸின் முன்னாள் காதலியான 'சுவா'ச நடிகைக்கு பட வாய்ப்புக்கள் சுத்தமாக இல்லை. வெளிநாடுகளில் கலைநிகழ்ச்சிகளை நடத்தும் ஒருவரை வளைத்துப் போட்டு விட்டாராம். இப்போது நடிகை அவருடன் தனியாகக் குடும்பம் நடத்தி வருகிறாராம்.

அம்மா வேடங்களில் பெரிய திரையிலும் சின்னத்திரையிலும் நடித்து வரும் மூன்றெழுத்து நடிகை இவர். இவருக்கு கல்யாணமாகி பிள்ளைகளும் இருக்கிறார்கள். இவரையும் காதல் விடவில்லை. தொலைக்காட்சி நடிகர் ஒருவருடன் காதல் 'கவி'தைபாடி வருகிறார் இவர்.



## மனோபாலாவின் 'அன்னை'

'நந்தினி' உட்பட பல படங்களை இயக்கிய மனோபாலா இப்போது 'அன்னை' என்ற படத்திற்கு கதை, திரைக்கதை எழுதி இயக்கியுள்ளார்.

மிகக் குறுகிய கால அளவில் இப்படம் தயாராகியுள்ளது. 2 மணி நேரப் படமாக வந்திருக்கும் 'அன்னை', 14 நாட்களில் 5 பாடல்களுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

அநாதைக் குழந்தைகளைப் பற்றிய படம் இது. இப்படத்தின் மூலம் மறுபடி நடிக்க வந்துள்ளார் பானுப்பிரியா. நாசர் கதாநாயகனாக நடித்துள்ளார். இவருடன் ரமேஷ் கண்ணா, மதன்பாப், 'அல்வா' வாசு, மயில்சாமி, சாப்ளின் பாலு, பாலாஜி, வினோதினி ஆகியோர் நடித்துள்ளனர்.

இப்படத்தின் படப்பிடிப்புக்கள் ஊட்டி, கொடைக்கானல் ஆகிய இடங்களில் நடைபெற்றுள்ளன.

இம்மாதம் 26ம் திகதி திரைக்கு வரவுள்ளது.

## அடுத்து பிரசாந்த்

அர்ஜுன்-ரம்பா நடிக்கும் 'சுதந்திரம்' படத்தை இயக்கி வருகிறார் ராஜ்கபூர். இதை அடுத்து இவர் பிரபு-மம்முட்டி நடிக்கும் 'நல்லவங்க' என்ற படத்தை இயக்கவுள்ளார்.

'சுதந்திரம்', 'நல்லவங்க' படத்தை அடுத்து ராஜ்கபூர் இயக்கும் படத்தில் பிரசாந்த் நடிக்கவுள்ளார். இதில் பிரசாந்திற்கு ஜோடியாக சிம்ரான் நடிக்கிறார்.

## சண்முகபாண்டியன்

தெலுங்கில் 'சமரசிம் ஹரெட்டி' என்ற பெயரில் வெளிவந்து வெற்றிகரமாக ஓடிய படம் 'சண்முக பாண்டியன்' என்ற தமிழில் மொழிமாற்றப்பட்டு வருகிறது.

இதில் பாலகிருஷ்ணா-சிம்ரன் இணைந்து நடித்துள்ளனர்.

## முகப்பில்

சரத்குமார்-பூஜா பட்ரா

ஜெயராகினி-மோகினி

# ...வர்ச்சி நடிகைக்காகக் ...டிப்புரண்ட காதலர்கள்

தனது ஆலோசகர் என்று கூறும் வாலிபரின் அம்மாவுக்கு தொலைபேசியில் விஷயத்தைக் கூறினார்.

போலீஸ் உயரதிகாரியான அந்த அம்மா, தொலைபேசியிலேயே அவர்கள் மூவரையும் எச்சரித்து அனுப்பி விட்டாராம்.

***

## தந்தையைக் கண்டித்த தனயன்

மூன்றெழுத்து இளைய நடிகர் இப்போது தெளிவடைந்திருக்கிறார். இவர் நடித்து வெளியான கடைசி மூன்று படங்களும் தோல்வியடைந்தன. இவரது தெளிவிற்கு இதுவும் ஒரு காரணம்.


இப்போது தனது முதல் எதிரியாக இவர் நினைப்பது இயக்குனரான இவரது தந்தையைத்தானாம்.

தந்தையின் மோசமான அணுகுமுறைகளால் தான் தன்மீது நிறையப் பேர் அவதூறுகளையும், வதந்திகளையும் பரப்பு விட்டார்கள் என்று எரிச்சலடைந்துள்ளார்.

இனிமேல் தனது விஷயங்களில் தலையிட வேண்டாம் எனவும், அவரால்தான் தனக்கு பிரச்சனையே ஏற்படுகிறது என்று நேரடியாகவே கூறி விட்டாராம்.

இதனால் வருத்தப்பட்ட நடிகரின் தந்தை கொஞ்ச நாட்களுக்கு மகனிடம் இருந்து பிரிந்திருக்க வேண்டும் என்ற முடிவுடன் தனது மனைவியை அழைத்துக் கொண்டு வெளிநாடு ஒன்றுக்குச் சென்றுள்ளாராம்.

இதற்காக உயரமான நடிகர் ஒருவரை வைத்து இயக்க வந்த வாய்ப்பையும் உதறித் தள்ளிவிட்டாராம் நடிகரின் தந்தை.



வெங்கட்-சாந்தினி
படம்: காதலே சாட்சி



ரகுமான்-ரிஷிபாவா-நிர்மலாசுரேஷ்
படம்: உறவுக்கு மரியாதை

## எப்படி எப்படி?

பாண்டியராஜனுக்கு ஜோடியாக 'நல்ல மனசுக்காரன்' என்ற படத்தில் நடித்தவர் ஜெயராகினி. இவர் நடித்த ஒரேயொரு படமும் அதுதான். அந்தப்படம்கூட படு தோல்வியடைந்தது.

ஜெயராகினிக்கு அதன்பின் வேறு ஒரு படமும் வரவில்லை. ஆனால் ஜெயராகினி பணத்தில் புரள்கிறார். மூன்று மாடிகள் கொண்ட பெரிய பங்களா, நான்கைந்து கார்கள் என சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்.

'நல்ல மனசுக்காரன்' படத்திற்குப் பின் ஒரு படத்திலும் நடிக்கிராத இவருக்கு எப்படி இந்த வசதி வந்தது?

## ஐஸ் ஐஸ் பேபி

"நா டமில் ஃபில்மில் நிறிய நடிச்சாலும்... அப்பப்போ ஹிந்தி படங்களிலும் ஆக்ட் பண்றேன்... ஆக்டிங்கைப் பொர்த்தவரை டமில் ஃபில்மில் கெடிக்கிற ஹாப்பி ஹிந்தியில கெடிக்காது.

ஏன்னா.. டமில் டைரக்டர்ஸ் நிறிய பேர்க்கு இருக்கிற சின்சியாரிட்டியும சென்ஸ் ஆஃப் ஹியூமரும் உலகத்துலேயே வேற எந்த லாங்வேஜ் டைரக்டர்ஸ்க்கும் இருக்குமாங்கிறது டவுட்தான்.

ஸ்பேஸ் ஸ்டோரின், கம்பியூட்டர் கிராஃபிக்ஸனு மேஜிக் காமிக்ஸ் ஸ்டைலல நிறிய ஃபில்ம் வந்தாலும்... நம்ம டமில் படங்களோட பியூட்டிஃபுல் ஸ்டோரியும், எக்ஸலண்ட் ஆக்டிங்கும் எத்தினி டப் பார்த்தாலும் சலிக்காது..."

இந்தக் கொஞ்சு தமிழால் தமிழ்த் திரையுலகிற்கு ஐஸ் வைத்த பேபி ரம்பா.

## பக்திப் படம்

படுசூடான அரசியல் படங்களை இயக்கியவர் ஆர்.கே.செல்வமணி. இப்போது இந்திய அரசியலில் பல திருப்பங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் செல்வமணி அமைதியாக 'பொட்டு அம்மன்' என்ற பக்திப் பட வேலைகளில் மூழ்கியுள்ளார்.

நாட்டில் நடைபெற்று வரும் அரசியல் சம்பவங்களை அடிப்படையாக வைத்துப் படங்களை இயக்கிய செல்வமணி, பக்திப் படம் எடுப்பதன் காரணம் என்ன? அவரே கூறுகிறார்.

"ரோஜா, சுவலட்சுமி நடிக்கும் 'பொட்டு அம்மன்' படத்தை எனது தம்பி ராஜரத்தினம் இயக்கி வருகிறார். நான் மேற்பார்வை மட்டுமே. அடிக்கடி அரசியல் படமென்றால், சலிப்பு ஏற்படும் என்பதற்காக பக்திப்படத்தைத் தயாரிக்கிறோம்," என்கிறார்.

## விஜய்க்கு பைத்தியம்

பாசில் இயக்கத்தில் விஜய்-ஷாலினி நடிக்கும் 'கண்ணுக்குள் நிலவு' படத்தில் விஜய் மனநிலை சரியில்லாதவராக கிட்டத்தட்ட அரைப்பைத்தியமாக வருகிறாராம்.

விஜய்யின் கண்ணுக்குள் நிலவாக இருப்பது ஷாலினி அல்லவாம். புதுமுகம் காவேரியாம்.

விஜய்யின் காதலியாக காவேரி வந்து இறந்துபோக, மனநிலை பாதிக்கப்படுகிறார் விஜய். மனநிலை பாதித்த விஜய்யை சரி செய்ய வருபவர்தான் ஷாலினி.

## அடக்கு முறையை ஒடுக்கும் இளைஞர்கள்

கிராமத் தலைவரின் அடக்குமுறையைக் கண்டித்து நீதி, நியாயத்துக்காக போராடுகிறார்கள் கல்லூரி மாணவர்கள். இதை அடிப்படையாக வைத்து தெலுங்கில் தயாரான படமொன்று தமிழில் மொழிமாற்றப்பட்டு வருகிறது.

இளைஞர்களின் போராட்ட உணர்வுக்கு எதிராக அரசியல்வாதிகளும் காவல்துறையினரும் செயல்படுகின்றனர். இதனால் வெறுப்புற்ற இளைஞர்கள் தீவிரவாதிகளாகிறார்கள்.

பண்ணையாரின் அடக்கு முறையை தீவிரவாத நடவடிக்கை மூலம் ஒடுக்குகிறார்கள்.

இப்படத்திற்கு 'பாலைவன ராஜாக்கள்' என்று பெயரிட்டுள்ளனர். இதில் கதாநாயகனாக தீவிரவாதிகள் தலைவன் வேடத்தில் சுரேஷ் நடிக்கிறார். போலீஸ் அதிகாரியாக நக்மாவின் தங்கை ரோஷினி நடிக்கிறார்.

தீவிரவாதிகளுக்கு உதவும் மலைவாசிப் பெண்ணாக இந்திரஜா நடிக்கிறார். முக்கிய வேடத்தில் மன்சூர் அலிகான் நடிக்கிறார்.

மிகுந்த பொருட்செலவில் தயாராகியுள்ள இப்படத்திற்கு ராஜ்-கோட்டி இரட்டையர்களில் ஒருவரான கோட்டி இசையமைக்க, அறிவுமதி, கலைக்குமார் பாடல்களை எழுதுகிறார்கள்.

இ.ராமதாஸ் வசனம் எழுதும் இப்படத்தின் திரைக்கதை எழுதி இயக்கியுள்ளார் பரத் நந்தன்.






## மீண்டும் மோகன்

தோல்வி ஏற்பட்டால் துவண்டு விடக்கூடாது என்பதற்கு அண்மைய உதாரணம் மோகன். 'அன்புள்ள காதலுக்கு' படத்தை தயாரித்து இயக்கி நடித்ததால் மோகனுக்குப் பல இலட்சம் ரூபாய் நஷ்டம்.

அந்த நஷ்டத்தில் இருந்து விடுபட மீண்டும் படமொன்றை தயாரித்து இயக்கவுள்ளார். கதாநாயகனாக நடிப்பது மட்டும் வேறொரு முன்னணி நடிகர்.

## மினி சினி

- ராஜகாளி அம்மன்' படத்தில் ரம்யா கிருஷ்ணனும், 'பொட்டு அம்மன்' படத்தில் ரோஜாவும் அம்மன் வேடங்களில் நடித்து வருகிறார்கள்.
- மன்சூரலிகான் தனது மகன் துக்ளக் பெயரில் படமொன்றைத் தயாரிக்கிறார். இப்படத்திற்கு 'ஆவா அந்தமடம், ஆகாட்டி சந்தை மடம்' என்று பெயரிட்டுள்ளார்.
- கன்னடத்தில் முன்னணி நடிகையாக வலம் வந்து கொண்டிருப்பவர் விஜயலட்சுமி. இவர் தமிழில் 'பூந்தோட்டம்' படத்தில் தேவயானிக்கு தங்கையாக நடித்தவர்.
- நெப்போலியன் 'தி எம்பரர்' என்ற மலையாளப்படத்தில் பல கொலைகளைச் செய்த அலபன் என்ற வேடத்தில் நடித்து வருகிறார்.
- இதுவரை தனது சொந்தக் கதைகளை மட்டுமே படமாக்கிய விக்ரமன், முதன் முறையாக தெலுங்குப் படக் கதையொன்றை படமாக்கவுள்ளார்.
- நடிகை மந்த்ரா 'விஜி ஒடியோ' என்ற பெயரில் ஒடியோ கா்ஸட் கம்பனியொன்றை ஆரம்பித்திருக்கிறார்.
- சத்யராஜ் கதாநாயகனாக வைத்து எஸ்.ஏ.சந்திரசேகரன் இயக்குவதாக இருந்த படத்தில் இருந்து விலகிக் கொண்டுள்ளார் சந்திரசேகரன்.
- கஷ்மிதாசென், ரியா சென் வரிசையில் அடுத்து வரவிருப்பவர் ரீமா சென். இவர் பிரபுதேவாவுக்கு ஜோடியாக 'பெண்ணின் மனதைத் தொட்டு' படத்தில் அறிமுகமாகிறார்.



ரம்யா கிருஷ்ணன்
படம்: கதாநாயகி

# வேடிக்கையான புகைப்படம்

இந்தப் படத்தை சற்று உன்னிப்பாகப் பார்த்தால் புரியும் வேடிக்கை. வேடிக்கையான சம்பவங்களை கமரா மூலமும் பதிவு செய்யலாம் என்பதை நிரூபிக்கிறது இப்படம்.

வீட்டிற்குள் இருந்தபடியே ஜன்னல் வழியாக எதையோ பிரமிப்பாகப் பார்க்கிறார் ஒரு மாது. ஜன்னலுக்கு வெளியே துவைத்துக் காயப் போடப்பட்டிருக்கிறது ஒரு ஜீன்ஸ்.

கமராக் கண்கள் அந்த மாது, ஜீன்ஸ் போட்டுக் கொண்டிருப்பது போல 'க்ளிக்' செய்து விட்டது.



## என் கிண்ணம்

### ஒரு வருட தீர்வு

தை தை என அவள் ஆட
நான் கண்மூடா பித்தனானேன்.
மாசி மகமன்று மாமாங்கத்தில்
மனம் விட்டு பேசலானோம்.
பங்குனி பரிவாரங்களுடன்
சீர்வரிசை சீர்பெற்றது.
சித்திரை சீமைக்குப் போன
சின்னண்ணர் வரட்டுமென்றால்
வைகாசி வந்தது அவள்
அப்பனுக்கு அடங்கா அண்டவாய்வு.
ஆனி ஆயிழைக்க
சனி தோஷமென்றார்.
ஆடி ஆடித்திரிந்து அவள்
அப்பன் பாடை ஏறி போனார்.
ஆவணி "ஆ அதென்ன அவள்
அப்பன் செத்து ஒரு மாதம்"
என்றார்.
புரட்டாதி "புரட்டாதிச்சனி கழியட்டுமே"
என்றார்.
ஐப்பசி "அஞ்சு பவுண் நகை குறையுதே!"
என்றார்.
கார்த்திகை காடுமேடெல்லாம்
காவேரிபோல் வெள்ளமென்றனர்.
மார்கழி பிறந்தது, அவள்
மாற்றானுடன் ஓடிவிட்டாள்!

கல்குடா, வே.க.சாமி.

### அற்புத ஆத்மாவுக்கு அழிவில்லை!

வசந்தம், தனது
வாழ்வை முடித்து
விடைபெற்றுக் கொண்டிருந்த
வேளை யொன்றில்
உனது மரணம்
எனது செவிகளில்
வந்து விழுந்தது!
-o-
இழப்புகளால்
விறைத்துப் போயிருந்த நெஞ்சில்
உனது பேரிழப்பும்
வந்து விழுந்து துடிதுடித்தது!
-o-
அற்புதனே!
உனை "ஏன் கொன்றார்?
ஏன் கொன்றார்?" என
எழுகின்ற கேள்விகள்
உள்ளத்தில்
சதிராட்டம் நடத்துகின்றன.
-o-
கோணலாய்ப் போன
ஈழத் தமிழரின் தலைவிதியை
நேராக்க முடியாவிட்டாலும்,
அந்தக் கோணல்களைக் கண்டு
கூக்குரலிட்டவன் நீ!
உனது அஞ்சாத முழக்கத்தை
உலகமே
ஆவலோடு கேட்டிருந்தது!
-o-
சுடுகாடாகிப்போன
தேசத்தின் சேதிகளை
உனது எழுத்துகளில் ஏற்றி
உலகமெங்கும்
அனுப்பி வைத்தாய்;
உனது எழுத்தின்
வலிமையும் நேர்த்தியும்
வாசகர்களை
உன்வசம் ஈர்த்தது!
-o-
அற்புதனே!
உனைக் கொலை செய்ய
நீண்ட கரங்கள் எவை?
உனது அற்புத உயிரைப்
பாதி வழியிலேயே
பறித்தோடிய பாவிகள் யார்?
ஏற்றுக் கொள்ள முடியாத
உனது இழப்பை
எம் உள்ளங்களில்
திணித்தது யார்?
-o-
பார்க்கும் இடமெல்லாம்
ஆகாயம் போல
பரந்து வியாபித்த
சோகத்தின் எதிரில்
என் உள்ளம்
விக்கித்து நிற்கிறது!
-o-
உதிர்ந்த நட்சத்திரமே!
உன் புகழ் பாடி
ஆரவாரிப்பதாலோ,
உனது இழப்பைக் கூறி
ஒப்பாரி வைப்பதாலோ-மீண்டும்
இந்த வானிலே-நீ
வந்து ஜொலிப்பாயா?
-o-
நீ விட்டுச் செல்லும்
வெற்றிடத்தை நிரப்பிட
பலநூறு கரங்கள் எழுந்து
உனக்காகச்
சத்தியம் செய்கின்றன!
உனது ஆத்மாவின் ராகங்களுக்கு
அழிவில்லை அற்புதனே!

பஹீமா ஜஹான், மெல்சிரிபுர.

### நமக்கென்ன தைப்பொங்கல்?

எம்மினத்தின் மாந்தர்
எத்திக்கும் அகதிநிலை
இம்மியள வேனும்
இவர்க்கேதும் மகிழ்வில்லை!
அம்மியென அரைபட்டு
அடிபட்டு மத்தளமாய்
கம்பலைம்யு கண்ணீரும்
கடுஞ்சிறையும் வாழ்வாகி,.......

பாலில்லை மழலைக்கு
பசியாறச் சோறில்லை!
நூலில்லை பள்ளிசெல்ல
நேய்தீர மருந்தில்லை!
பாயில்லை துயில்கொள்ள;
பரிதாபம் இன்னல்நிலை!
கோயில், மனை இடிபாடு
குடியிருப்பு அகதிமுகாம்,!

கதிரறுக்கப் போனமகன்
கழனியிலே மாண்ட கதை!
புதிர்வீடு வரும் முன்னே
புவிவிட்டுப் போனதெலாம்!
சதிச் செயலா? இல்லையது
சாற்றும் ஒரு விதியா?
கதியற்று வாழ்தமிழர்
களிக்குமொரு நிலைவருமா?

துமேடை தான்போட்டு
புதுக்கலத்தை அதிலேற்றி,
புதுப்பழங்கள், புதுமலர்கள்
புதியதெல்லாம் நிவாக்கி,
புதுக்கொலம் நான்போட்டு
புத்தாடை வகைகூடி
புதுவுலகைத் தரிசிக்கும்
பூரிப்பை மனம்காண,......

புலரிதரும் ஒளிக்கதிர்போல்
புவனமெலாம் ஒளிபரவும்
நிலைமை வந்த பின்னாலே
நிச்சயமாய் ஒருபொங்கல்,
புலர்வின்பின் பொங்கிப்
புளகிப்போம்! அந்தவொரு-
நலம்சேரும் மட்டும்
"நமக்கென்ன தைப்பொங்கல்?"

கவிமணி: அ.கௌரிதாசன்-
ஆலங்கேணி கிழக்கு.

### மழலையாக வேண்டும்

என் சின்னக்குயிலே,
நீ பாடும் ராகங்கள் பூபாளமாக வேண்டும்
எனப் பிரார்த்தித்தேன்-ஆனால்
அவை என்னை அழவைக்கும் முகாரிகளாயினவே!
பார்வைக்கு அழகான நீ,
பசுமையற்ற பாலைவனத்தின் மேல்
பாசம் வைத்தது பட்டமரத்தில்
பன்னீர் தெளித்தது போலாகியது.
ஆனால் அணைகடந்த வெள்ளமான உன் அன்பு-என்னை
அணைத்தது மட்டுமல்ல
என்னை அழிக்கவும் துணிந்ததடி!
அன்பினால் அழிய நான் கொடுத்து வைத்திருக்க
வேண்டும்;
ஆனால் அது என்னோடு எனக்குள் இருக்கும்
உன்னையும் அழித்து விடத் துணிந்த போது
என்னால் பொறுத்துக் கொள்ள முடியாமல் போனது!
எனவே துணிந்து விட்டேன் என்னை மட்டும்
அழிப்பதற்கு
அன்பே நீ என்னை வெறுக்க வேண்டும்!
அங்கே நான் வெறுமையாகி வெந்து
சாம்பலாகி உன் அன்புக்கே விலையாக
மீண்டும் உனக்குள் மழலையாக ஜனிக்க வேண்டும்!

எம்.ஸ்ரீவதனன்-திருமலை.

## பேனா நண்பர்



பெயர்: எம்.ரும்சின்,
வயது: --
முகவரி:
23/18, மயூரா பிளேஸ்,
ஹ்வ்லொக் வீதி,
கொழும்பு-06.
பொழுது போக்கு:
வானொலி.



பெயர்: ஆர். சுமதி,
வயது: --
முகவரி:
P.O. BOX-10778
DAMMAM - 31443
K.S.A.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்:
கி. கிருஷ்ணராஜ்.
வயது: 17
முகவரி: 21/5,
தாமரைக் கேணி வீதி,
மட்டக்களப்பு.
பொழுது போக்கு:
பத்திரிகை.

## இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கானா'

16.01.2000 முதல் 22.01.2000வரை

**மேடம் :**
கிரக அமைப்பின்படி தொழில், பணவசதிகள் பெருகும். வாழ்வு முன்னேற்றத்தைக் கொடுக்க இருக்கிறது. மனதில் சில வெறுப்பான நிலை காணப்படும். புதிய விடயங்கள் திட்டமிடப்படும். நோய்துன்பங்கள் நிவர்த்திபெறும். அச்சுவினி நட்சத்திரக்காரர் நன்மையடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண்: 08.
அதிஷ்ட திகதிகள் : 17, 18

**இடபம் :**
கிரகசமபலநிலை மாற்றமான பல நிலைகளை செய்துகொள்ளக் கூடிய கால நேரமாக அமையும். கடன் பிரச்சனைகள் பைசலாகும். மனைவி வழி உறவினர்கள் வருகைக்கிடமுண்டு. நோய்நொடிகள் தீரப்பெறும். திருமணம் தாமதமாகும். ரோகிணி நட்சத்திரருக்கு நோய்துன்பங்கள் தீரப்பெறும்.
அதிஷ்ட நாட்கள் : சனி, வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 19, 21.

**மிதுனம் :**
வியாபாரம் செய்வோருக்கு நன்மைகள் அதிகம் கிடைக்கும். இவ்வாரம் முன்னேற்றங்கள் பல நடைபெறும். பிள்ளைகளால் பணவசதிகள் என்பன கிடைக்கும். விவசாயிகளுக்கு பயிர் விருத்தியும், வருமானமும் கிடைக்கும். திருவாதிரை நட்சத்திரருக்கு பல வசதிகள் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 16, 20.

**கடகம் :**
அச்ச உணர்வும், பறிபோன நிலையாகவும், உறவினர்களுடன் பிரச்சனைகள் என்பன ஏற்படப் பார்க்கும். பணத்தட்டுப்பாடும் கருமவிடயங்கள் என்பன பின்தள்ளிப் போகக் கூடிய நிலை காணப்படும். ஆயிலியக்காரர் வாகனவிடயத்தில் அவதானம் தேவை.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 04.
அதிஷ்ட திகதிகள் : 20, 22.

**சிம்மம் :**
மனமாற்றம் ஏற்படலாம். காதலில் வெற்றி கிட்டும். மாணவர்களுக்கு இன்பமான வாரமாகும். தூரதேச பயண நிலையும், புதிய அமைப்பில் இருப்பிட நகர்வும் காணப்படும், மகநட்சத்திரருக்கு புதிய இருப்பிடம் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 19, 22.

**கன்னி :**
புதிய இருப்பிட வசதிகிட்டும். பணச் செலவுகளும் பயம் மிகுந்த நிலையும் காணப்படும். சொந்த உறவினர்களுடன் பிரிவு, இடமாற வேண்டிய நிலை ஏற்படும். பெரியோர்களின் ஆசிர்வாதமும் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு; எண்:03.
அதிஷ்ட திகதிகள் : 18, 21.

**துலாம் :**
மனதில் மகிழ்வும், மற்றவர்களுடன் அன்பான நிலையும் காணப்படும். எதிர்ப்புக்கள் விலகும். பல நாட்கள் போட்ட திட்டம் நடைபெறும். நோய் துன்பங்கள் விலகும். பொருள் ஆடை, ஆபரணச்சேர்க்கைகள் அமையும். சிங்கராசிக்காரர்களால் நன்மைகள் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, திங்கள்.
அதிஷ்ட நிறம் : றோஸ்நிறம்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 19, 21.

**விருச்சிகம் :**
வெற்றிவாய்ப்புக்கள் மனதில் சந்தோஷமுடன் தொடர்வதுடன் பண, பொருளாதார வலு அதிகரிக்கும். எதிரி களின்பலம் அழிவுறும். முன்னேற்றங்கள் திருப்தி கரமாக அமையும். கேட்டை நட்சத்திரகாரருக்கு பற்பலயோகங்களைக் கொடுக்கும்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், சனி.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண் 09.
அதிஷ்ட திகதிகள் : 18, 19.

**தனுசு :**
கல்வி உயர்வுகள் காணப்படும். புதிய தொழில் அந்தஸ்துகள் என்பன ஏற்பட இடமுண்டு. தலயாத்திரையும் நண்பர்களின் வருகையும் காணப்படும். அதிலும் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். வார இறுதியில் மூல, உத்திராடகாரருக்கு பயணம் செய்ய வேண்டி நிலை ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : சாம்பல்வர்ணம்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 17, 21.

**மகரம் :**
தொழில் சீராக அமையும். பணச் செலவுகளைக் கொடுக்கும். பிள்ளைகளால் சிறுபிரச்சனைகள் தோன்றும். புதிய திட்டங்கள் தாமதமடையும். பணவரவு சுணக்கமும் ஏற்படும். கல்வி சீரற்ற நிலையும் தொடரும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம் : கபிலநிறம்; எண் 05.
அதிஷ்ட திகதிகள் : 16, 22.

**கும்பம் :**
தோல்விகளும் மன அச்சமும் பயப் பீதிகளைக் கொடுத்துக்கொண்டிருக் கும். கணவருடன் கைகலப்பும் வாக்கு வாதமும் காணப்படும். ஏதேனும் முக்கிய பொருட் கள் தொலையும். வெளியாட்களின் எதிர்ப்பும் அவமரியாதையும் ஏற்படும். அவிட்ட பெண்கள் கவனம்தேவை.
அதிஷ்ட நாட்கள் : சனி, ஞாயிறு.
அத்ஷ்ட நிறம் : வெள்ளை; எண் 02.
அதிஷ்ட திகதிகள் : 20, 22.

**மீனம் :**
வியாழன் நன்றாக உள்ளதால் மனதில் சந்தோஷம் காணப்படும். பணவசதி,கல்வி முயற்சிகள் நன்றாக அமையும். தொழில் விடயங்கள் கைகூடும். பணநிலை உயரவழி உறவினர்களால் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண் 06.
அதிஷ்ட திகதிகள் : 16, 21.

## நில்-கவனி-முன்னேறு

பணம் வேண்டுமா? இது என்ன கேள்வி என்று பலரும் வியக்கலாம். நம்மில் பலர் பணக்காரர்களாக இருக்க விரும்புகிறோம். ஆனால் எல்லோருக்கும் பணம் அதிகமாகக் கிடைப்பதில்லை. காரணம் நாம் கொண்டுள்ள அபிப்பிராயமே.

உண்மையில் தாங்கள் செல்வ வளத்துடன் இருப்பதாகக் கருதுகின்றவர்கள் தொடர்ந்து பணம் சம்பாதிக்கிறார்கள். தங்களுக்கு பணக்காரர் ஆவதற்கு வாய்ப்பே இல்லை என்று நினைக்கின்றவர்கள் ஏழைகளாகவே இருக்கின்றனர்.

பணமே எல்லாத் தீமைகளுக்கும் ஆணிவேர். பணக்காரர்களாகவும் அதே வேளையில் மனத் தூய்மையுடனும் இருப்பது சாத்தியமில்லை- பணக்காரர்கள் தீயவர்கள்- தேவைகளுக்கு மேல் பணம் இருந்தால் நல்லவனாக இருக்க முடியாது- பெரும் பணம் சம்பாதிக்க நினைப்பது சுயநலமானது- நேர்வழியில் பணம் சம்பாதித்து பணக்காரனாக முடியாது. இத்தகைய மன உணர்வுகள் உள்ளவர்கள் ஏழைகளாகத்தான் இருப்பார்கள்.!

"பணக்காரனாக இருப்பது என்பது ஒரு அற்புதமான விஷயம். எனக்கு செல்வந்தராக வாழக்கூடிய தகுதி இருக்கிறது. பணக்காரராக இருப்பதில் எந்தத் தவறும் இல்லை!" என்ற ஆழமான நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதில்தான் பணத்துக்கும் நமக்கும் உறவை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.!



நம்முடைய மனம் ஆற்றல் வாய்ந்த ஓர் இயந்திரம். நமக்கு எது வேண்டும் என்று நம்புகிறதோ, அதனை நமக்குத் தேடித்தர கடுமையாக உழைக்க ஆரம்பித்து விடும்.

பணத்தை எதிரியாக நினைக்காதீர்கள். பணத்தை நண்பனாகக் கருதுங்கள். பணத்தை வரவேற்கும் மன நிலையை வைத்துக் கொள்ளுங்கள்.

பணம் ஒரு மின் சக்தி. அழைக்கும் இடத்துக்குத்தான் அது வரும். விருந்தினரை கதவைத் திறந்து வரவேற்பது போல் பணத்துக்கு மனதைத் திறந்து வையுங்கள். பணக்காரர் ஆவீர்கள்.!

# அழகான கேசத்திற்கு அருமையான யோசனைகள்

கேசத்திற்கு அழகே கறுப்பு நிறமும், பளபளப்பும்தான். தற்போது பெருகி வரும் ஷாம்புகளின் தாக்கத்தால் பாதிப் பெண்களின் கேசம் பொலிவிழந்து அழகை கோரப் படுத்தி விடுகிறது. இதற்கு 'கேச நோய்' என்று பெயர்.

கேச ஆரோக்கியத்திற்கு உடல்-மன ஆரோக்கியம் முக்கியமானது. சத்துக் குறைவு, டென்ஷன், வேதிப் பொருட்கள் அதிகம் கலந்த சோப்பு, ஷாம்பு இவற்றைப் பயன்படுத்துவதால் கேசம் தன் பொலிவை இழக்கிறது.



வாரத்திற்கு ஒரு நாள் எண்ணெய் மசாஜ் செய்து வர வேண்டும்.

தரமான ஷாம்பு எது என்று தேர்ந்தெடுத்து அதையே தொடர்ந்து பயன்படுத்தினால், கேசத்திற்கு எந்தக் கெடுதலும் வராது.

சாதாரண கேசத்தை உடையவர்கள், ஷாம்புவைப் பயன்படுத்தும் போது, எச்சரிக்கையுடன் இருந்தால், இரசாயனச் செறிவு அதிகமுள்ள ஷாம்புவின் பாதிப்பிலிருந்து தப்பித்து விடலாம்.

வீரியமுள்ள ஷாம்புவை பயன்படுத்தும் போது, ஆரம்பத்தில், கேசம் பொலிவாக இருப்பது போல தெரிந்தாலும், சில மாதங்களில் இயற்கையான பளபளப்பு மங்கி விடும்.

எண்ணெய்த் தன்மையுள்ள கேசமுள்ளவர்கள் எலுமிச்சம் பழத்தை உபயோகப்படுத்தலாம் அல்லது எலுமிச்சை கலந்த ஷாம்புவைப் பயன்படுத்தலாம்.

அதேபோல உலர்ந்த கேசமாக இருந்தால் முட்டையை பயன்படுத்துங்கள். அல்லது முட்டை கலந்த ஷாம்புவைப் பயன்படுத்துங்கள்.

## கண்டிஷனர் முக்கியமானது

வீட்டிலேயே கண்டிஷனரைத் தயாரிக்கலாம். ஒலிவ் எண்ணெய், எலுமிச்சை, முட்டை கலந்த கலவையை கண்டிஷனராகப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதை வாரத்திற்கு ஒருமுறை கட்டாயம் செய்து வரவேண்டும். முட்டை பிடிக்காதவர்கள் அதற்கு பதிலாக தயிரை கலந்து கொள்ளலாம். கட்டாயம் இரண்டு மணி நேரம் கண்டிஷனர் ஊற வேண்டும்.

தினமும் இரண்டு தடவை தலை வாரினால் தான் தலையில் இரத்த ஓட்டம் சீராகி, கேசமும் ஆரோக்கியமாகும்.

தலைவாரும்போது மேலிருந்து கீழாக மெதுவாக வாரி விட வேண்டும். ஈரமுள்ள கேசத்தை வாரக் கூடாது.

மற்றவர்களுடைய சீப்பு, தலையணையை உபயோகிப்பதை தவிர்த்து விட வேண்டும்.

## உணவு

இரும்புச் சத்துள்ள உணவை அதிகமாகச் சாப்பிட வேண்டும். மீன், சோயா பீன்ஸ் போன்றவற்றை சாப்பிட்டால் கேசம் பளபளப்பாகும்.

## எச்சரிக்கை

தலைக்கு டை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். கேசத்தின் வாசனைக்காக லோசனைப் பயன்படுத்துவதை தவிர்த்து விடவேண்டும்.

## டென்ஷனாக இருந்தால்....

மனக்குழப்பம், டென்ஷன் வந்துவிட்டால் கேசம் நிறம்மாறுவது நிச்சயம். கவலைகளோ, பயமோ இருந்தால் கேசத்தின் ஆரோக்கியம் சீர் குலையும், எப்பொழுதும் சந்தோஷம், உற்சாகம் இருந்தால் கேசம் பளபளப்பாகி விடும்.

குளிருக்குப் பயந்து கொண்டு, சுடு தண்ணீரால் தலையை அலசக் கூடாது. அதனால் நீர்ப்பசை குறையும் வாய்ப்புள்ளது. எனவே, குளிர்ந்த தண்ணீரையே பயன்படுத்த வேண்டும்.

நீரோடையில் குளிப்பதால் கேசத்திற்கு நல்ல வளர்ச்சி உண்டாகும்.

நேரடியாக சூரிய ஒளி தலைமுடியை தாக்காமல் பாதுகாக்க வேண்டும். எங்கு போனாலும் குடை பிடித்துச் செல்லுங்கள்.

# மருந்துப் பாதுகாப்பு



மருந்துகளை எட்டாத வகையில் அலமாரியில் வைத்துப் பூட்டி விடுவது நல்லது. எந்த மருந்தையும் அவற்றின் உபயோகம் தீர்ந்தவுடன் உடனுக்குடன் தூர எறிந்து விடுவது நல்லது.

குறிப்பிட்ட நோய்க்காக மருத்துவர் ஒரு மருந்தைக் கொடுத்திருக்கலாம். அந்த மருந்தை மீண்டும் மற்றொருமுறை உபயோகிக்க நினைப்பது தவறு.

சமையல் அறையில் உணவு வகைகளை வைக்கும் அலமாரியில் மருந்துகளை வைக்காதீர்கள்.

மருந்துகளின் உபயோக காலம் காலாவதியான பின், எக்காரணத்தைக் கொண்டும் அதை உபயோகிக்கக்கூடாது.

கடையில் விற்கும் மருந்துகளை நீங்களாகவே வர்ங்கி உபயோகிக்காதீர்கள். மருத்துவரின் ஆலோசனைப்படிதான் நடக்க வேண்டும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** GX

பெயர்:.....................
முகவரி:.....................
.....................
தொழில்:.....................
கையொப்பம்:.....................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 22-01-2000**


அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது 21 புவனா

# மோனிக்கா என் மோனிக்கா

மோனிக்கா, தனது புதிய பதவியை 1995 நவம்பர் 15ம் திகதி புதன் கிழமையன்று காலை பொறுப்பேற்றாள். அமெரிக்க நாட்டின் தலைவிதியை மட்டுமல்லாமல், உலக அரசியல் அரங்கில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தவல்ல பெரும் தலைவர்களுடன் சரிநிகர் சமானமாக பணிபுரியும் வாய்ப்பினை மோனிக்கா பெற்றுவிட்டால்.

அமெரிக்க அரசாங்க ஊழியர்கள் தெரிவிலும் பணி வழங்கலிலும் ஒரு முறைமை நடைமுறையிலுள்ளது. நிரந்தர ஊழியர்கள் என்று, ஒரு தொகையினர் பதவியிலிருப்பர், இவர்களில் எவராவது, பதவியிலிருந்து ஒய்வுபெற்றால் அல்லது வேறு ஏதாவது காரணங்களால் பதவி விலகினால் அந்த நிரந்தர ஊழியர் ஒருவரின் இடத்துக்கு அதே தகுதி ஊழியர் ஒருவர் நியமிக்கப்பட மாட்டார். நிரந்தரபதவி அளிக்கப்படாமல், காத்திருக்கும் நபர்களில், சேவைகால முதுமையைக் கணக்கிட்டு தற்காலிகப்பணியிலிருப்பவர் ஒருவருக்குப் பதவி வழங்கப்படும். இந்த அடிப்படையில் மோனிக்காவுக்குப் புதிய பதவி தரப்பட்டாலும் நிரந்தர அந்தஸ்துக்காக காத்திருக்க வேண்டிய நிலையிலிருந்தாள்.



மோனிக்காவுக்குரிய அலுவலகம் ஜனாதிபதியின் அலுவலகமான ஒவல் அலுவலகம் அருகிலேயே இருந்தது. வெள்ளை மாளிகை அதிகாரிகள், பல்வேறுபட்ட ஊழியர்கள் மற்றும் பணியாளர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கும் சீ.ஃ. ஒ.ஃ.ப் ஸ்ரா.ஃ.ப் அலுவலகம் அது. அத்தனைபேருக்கும் வரும் தபால்களைப் பிரித்துப்பார்த்து அவற்றை உரியவர்களுக்கு அனுப்பி வைக்கும் பிரிவில் பணிபுரியும் 26 ஊழியர்களுக்குப் பணிப்புரை வழங்கும் பொறுப்பில் மோனிக்கா இருந்தார்.

பணியில் சேர்ந்த அன்றைய தினம் மதிய உணவின் பின்னர் கிளின்ரன் தனது அலுவலக கதவினைத் திறந்து கொண்டு சீ.ஃ. ஒ.ஃ.ப் ஸ்ரா.ஃ.ப் இருந்த இடத்துக்குப் போனார். அவருடைய பார்வை மோனிக்கா மீது வேண்டுமென்றோ தற்செயலாகவோ திரும்பியது. அவளுடைய மேசையிலிருந்து சுமார் மூன்று மீட்டர் தொலைவில் தான் கிளின்ரன் நடந்து சென்றார். அவரைக் கண்டதும் தன்னையும் அறியாமல் 'ஹீ' என்றோர் சிரிச்சிட்ட அந்தச் சத்தத்துக்கேற்றவாறு கிளின்ரனும் 'ஹீ' என்றோரோசையை வெளிப்படுத்துவிட்டு சென்றார். ஆனால் அவருடைய முகபாவனையிலிருந்து மோனிக்காவால் எத்தகைய சமிக்ஞையினையும் பெறமுடியில்லை.



## துணிகரமான தந்திரம்

கிளின்ரனுக்குத் தன் மீது ஈடுபாடு ஏதாவதுண்டா, இல்லையா என்பதை இன்று திட்டவட்டமாக அறிந்துவிட வேண்டும் என்று மோனிக்கா தன்னைத் திடப்படுத்திக் கொண்டாள். ஏதாவது ஒரு தந்திரம் செய்தாக வேண்டும் என்று துணிந்தாள். கிளின்ரன் தனது அலுவலகத்துக்குத் திரும்பும் தருணத்தைக் கணக்குப் பார்த்தால் உடனே பணிபுரிபவர்கள் அனைவரும் தமது பணிகளில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். ஏனெனில் அவர்களுடைய தலைமையதிகாரி எந்த நிமிடத்திலாவது அப்பக்கம் வருவார். அவ்வேளையில் தாங்கள் வேறு பராக்கில் இருப்பதாக அவர் கருதிவிடலாகாது என்பதனால் எல்லோரும் பணியில் கருத்துடன் ஈடுபட்டிருந்தனர்.

சக ஊழியர்களின் இந்நிலையினைச் சாதகமாக்கிக் கொண்டு தனது மேசையின் முன்புறமாக வந்து நின்று கொண்டாள். கிளின்ரன் சீ.ஃ.ப் ஒ.ஃ.ப் ஸ்ரா.ஃ.ப் அலுவலகக் கதவைத் திறந்து கொண்டுவரும்போது தனது பின்புறத்தை அவர் பார்க்க தக்கவாறு அவள் நின்று கொண்டாள். இள நீலக்குட்டைப் பாவாடையும் மேல் பிளவுசும் அணிந்திருந்தாள்.

தனது இரு கைகளையும் இடையில் கொடுத்து இரு பெருவிரல்களாலும் பிளவுசின் கீழ் விளிம்பினை உயர்த்தியபடி நின்றிருந்தாள். பின் புறத்திலிருந்து பார்க்கும்போது அவளுடைய இடையும் உள்ளங்கியின் மேல்பாகமும் நன்கு தெரியக் கூடியதாகவிருந்தது. ஜனாதிபதி கிளின்ரன் கதவைத் திறந்து கொண்டு வருவது மோனிக்காவுக்குத் தெரிந்தது. அவருடைய பாதணி ஒன்று அவளருகில் நெருங்கி வரும் வரை அதே நிலையில் நின்றவள் துணுக்குற்றவள் போல் தடுமாறி கைகளை கீழேவிட்டு விட்டு கிளின்ர னிடம் மன்னிப்புக் கோருவது போல் பரிதாபமாகப் பார்த்தாள்.



மோனிக்காவின் தந்திரம் பலித்தது விட்டதை அப்போதே அவள் உணர்ந்து கொண்டாள். ஒருவகையான காமப்பார்வையுடன் கூடிய குறும்புப் புன்னகையை உதிர்த்தபடி அவர் அகன்றார். தன்னுடைய அலுவலக அறையினுள் நுழைவதற்கு முன்னரும் அதே பார்வையால் மோனிக்காவின் எண்ணத்தை ஆமோதித்தார்.

எதையும் மறைக்காமல் வெளிப்படையாகத் தன் சினேகிதிகள்டம் அப்படியே கூறிவிடும் சுபாவமுடைய மோனிக்கா, அன்று தான் கையாண்ட தந்திரோபாயம் பலித்ததையிட்டு தனது சினேகிதியான நெய்சா டிமான் எர்பிலாண்டிடம் அன்று மாலையே கூறிவிட்டாள்.

## சினேகிதியின் கருத்து

டிமான் எர்பிலாண்ட், பின்னர் கூறிய கருத்து தான் கையாண்ட தந்திரோபாயம் பற்றி மோனிக்கா என்னிடம் கூறியதும் எனக்கு அதிர்ச்சியே ஏற்பட்டது பாலியல் ரீதியில் மோனிக்கா அதிக ஆவல் கொண்டவள் தான். சுபாவத்தில் விளையாட்டுப் பிள்ளையும் கூட. கிளின்ரன் மோனிக்காமீது ஒரு கண்வைத்துள்ளார் என்று திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளாமல் அவருடைய சமிக்ஞைகளை அவள் தவறுதலாகப் புரிந்து கொண்.,ருந்தால், மோனிக்காவின் வேலை அப்போதே பறிக்கப்பட்டு, வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பாள். ஆனால் கிளின்ரனுக்கும் அவள்மீது ஈடுபாடு இருந்துள்ளது. இதனால் மோனிக்கா கையாண்ட தந்திரம் பலித்துவிட்டது. அன்று மாலையாவதற்குள் கிளின்ரன் பல தடவைகள் மோனிக்கா இருந்த பகுதிக்குள் வந்து போய்க் கொண்டிருந்தார் இது வழமைக்கு மாறானது என்பதை மோனிக்கா தெரிந்து கொண்டாள். அவர் அப்பகுதியால் போகும்போதும் வரும் போதும் சிலசமயங்களில் அவள் கிளின்ரனைக் கவனிக்காதவள் போல் இருந்து விடுவாள்.

கிளின்ரன் தனது அலுவலகத்தைவிட்டு அடிக்கடி வெளியே வந்து பல அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்கு முக்கியமான காரணம் ஒன்றும் இருந்தது. வெள்ளை மாளிகை நிர்வாகத்துக்குத் தேவைப்படும் பணத்துக்கான ஏற்பாடுகளை காங்கிரஸ் மூலம் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருந்தது. இப் பணத்தை அங்கீகரிப்பதற்கு செனட்சபையில் முட்டுக்கட்டைகளை நீக்க வேண்டிய நிர்பந்தமும் கிளின்ரனுக்கு இருந்தது.

# தனிமையில் சந்திப்பு





கொள்கை வகுத்தல் மற்றும் நடைமுறைப் படுத்தலுக்குப் பொறுப்பான சிரேஷ்ட ஆலோசகர் ஜோர்ஜ் ஸ்ரீ.ஃ.பன் பௌலோஸ் அவர்களுடைய அலுவலகமும் மோனிக்காவின் செயலகத்தை ஒட்டியே இருந்தது. அந்த அதிகாரியின் சில முக்கியமான கோப்புகளை மோனிக்காவே அவ்வலுவலகத்துக்கு நேரடியாக் கொண்டுபோக வேண்டியிருந்தது. அங்கு சென்ற போது அவள் சற்றும் எதிர்பாராத அதிர்ச்சி அங்கு காத்திருந்தது. அந்த அலுவலகத்தில் ஜனாதிபதி கிளின்ரன் அமர்ந்திருந்ததா அங்கு ஸ்ரீ.ஃ.பன் பௌலோஸோ அல்லது வேறு யாருமோ இருக்கவில்லை. கிளின்ரன் மட்டும் தனித்து இருந்தார். ஜனாதிபதியின் ஒவல் அலுவலகத்திலிருந்து இந்த அலுவலகத்துக்குள் பிரவேசிக்கத் தனிக் கதவு இருந்தது. அதன் வழியே கிளின்ரன் அங்கு வந்திருந்தார்.

மோனிக்காவைக் கண்டதும், கிளின்ரன், "இங்கு ஒரு நொடி வரமுடியுமா?" என்று கேட்டார். ஜனர்திபதியையும் தன்னையும் தவிர அந்த விசாலமான அலுவலகத்தில் வேறு யாருமே இல்லை என்பதை அறிந்ததும் அவள் சற்று பதற்றமடைந்ததாள், ஏற்கனவே சிவப்பாகவிருந்த அவளுடைய முகம் மேலும் சிவப்பாக மாறியது.

(வருவாள்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## மொறட்டுவை வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | திருமதி A.W.S.சலீலா, 377 எகொட உயன, மோதறை-மொறட்டுவை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# தர்மம் பெற்ற தர்மராஜா

பாப்பா முரசு சிறுகதை

ஒரு வயோதிகப் பிச்சைக்காரன் புதிய ஊருக்குள் நுழைந்தான்.

தெருவின் ஆரம்பத்திலேயே மிகப் பெரிய இரண்டடுக்கு மாடி வீட்டைப் பார்த்தான்.

வீட்டு மதிலில் 'தர்மராஜன்' என்ற பெயர் பொறிக்கப்பட்டிருந்ததைப் படித்தான்.

உடனே அவன் மனம் ஓர் அல்லி மலர் போல் மலர்ந்தது.

'ஆஹா! தர்மராஜன் என்பவருடைய வீடு இது. வீட்டைப் பார்த்தாலே தெரிகிறது இவர் பெரிய இலட்சாதிபதி என்று. நான் பார்த்தவரையில் தர்மராஜன் என்ற பெயருடைய அனைவரும் இரக்க சிந்தையுள்ளவர்களாகத்தான் இருந்திருக்கின்றனர். இந்த தர்மராஜனும் அதற்கு விதிவிலக்காக இருக்க முடியாது. நம் ஏழ்மை நிலையைச் சொல்லி அமுது சாப்பாடு, பழைய துணிமணி ஆகியவற்றைப் பெற்றுச் செல்ல வேண்டும்' என்று நினைத்தான் பிச்சைக்காரன்.

உள்ளே எட்டிப் பார்த்தான்.

ஒரு பெரிய நாய் தூணில் கட்டிப் போடப்பட்டிருந்தது.

அது பிச்சைக்காரனைப் பார்த்ததும் குரைத்தது.

"ஐயா! ஐயா!" என்று குரல் கொடுத்தான். நாய் மேலும் குரைத்தது.

"ஐயா! தர்மப் பிரபுவே!" என்று மீண்டும் குரல் கொடுத்தான் பிச்சைக்காரன்.

நாயும் உச்ச ஸ்தாயியில் குரைத்தது.

நாயின் சத்தத்தைக் கேட்டு உள்ளே இருந்து ஆஜானுபாகுவான உயரத்தில், நன்றாக உடை அணிந்த ஒரு மனிதர் வெளிப்பட்டார். அவர் கையில் பத்திரிகை ஒன்று இருந்தது.

"ஐயா!" என்றான் பிச்சைக்காரன்.

"என்னப்பா? என்ன?" என்று சற்று கோபமாகவே கேட்டபடி அவர் முன்னே வந்து நின்றார்.

"ஐயா! ஒரே பசியாக இருக்கிறது. கொஞ்சம் சாப்பாடு போடுங்கய்யா!"

"சாப்பாடா? உனக்கு சாப்பாடு குடுக்கிறதுதான் என் வேலையா? போப்பா வேலையைக் கெடுக்காம?"

"ஐயா! பழைய சோறு இருந்தாப் போதுமய்யா!"

"இதப்பாருப்பா! பழசும் இல்லை. புதுசும் இல்லை. இப்ப நீ போகப் போறியா இல்லையா!"

"ஐயா! தர்மப் பிரபுவே! பசி உயிர் போகுதய்யா. பழைய சோறு இல்லாட்டிக் கூடப் பரவாயில்லை. வடிச்ச கஞ்சி இருக்குமே. அது இருந்தாக் குடுங்கய்யா. போதும்!"

"ச்சே! ச்சே! ச்சே! இந்தப் பிச்சைக்காரங்க தொல்லை தாங்க முடியலை. ஏம்பா... இவ்ளோ பெரிய வீட்ல வடிச்ச கஞ்சி இருக்குமா? இருக்காதுன்னு உனக்குத் தெரியாதா. ஏன் இல்லாததைக் கேட்டு உயிரை எடுக்கறே! போ! போ!



"கொஞ்சம் தண்ணியாவது குடுங்கய்யா. உங்களுக்குப் புண்ணியமாகப் போகும்!"

அந்த மனிதர் பெரிய எரிச்சலோடு அவனைப் பார்த்தார்.

"ஏம்பா! என்னதான் நினைச்சுக்கிட்டிருக்க உன் மனசுல. என்னைக் கொல்லனும்னே திட்டம் போட்டு வந்திருக்கியா? இந்த ஊர்ல உனக்குத் தண்ணியே கிடைக்காதா?"

"கொஞ்சம் அரிசி, சோளம் ஏதாவது இருந்தாக் கொஞ்சம் குடுங்கய்யா?"

"பச்! அதெல்லாம் இங்கு இல்லைப்பா. போய் வேறு வீட்ல கேளு. தருவாங்க."

"ஐயா! ஒரு பழைய சட்டை கிட்டை!"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை!...

"கிழிஞ்ச வேட்டி ஏதாவது...?"

"இல்லப்பா இல்லை. ஏன் இப்படி காலங்காத்தால வந்து உயிரை எடுக்கறே!"

"கோவிச்சுக்காதீங்கய்யா! ஒரு ஐந்தோ பத்தோ குடுத்தீங்கன்னா ஒரு கடையிலாவது சாப்பிட்டுக்குவேன்!"

"ஐந்தும், கிடையாது! பத்தும் கிடையாது. இங்கென்ன கொட்டியா கிடக்குது ஐந்தும் பத்தும்?"

பிச்சைக்காரனும் பொறுமை இழந்தான்.


"ஐயா! தர்மராஜன்ங்கிறது நீங்க தானே?"

"ஆமா!"


"உங்களைப் போல 'இல்லாத' தர்மராஜனை நான் இது வரைக்கும் பார்த்ததில்லை. ஓர் ஏழை மனுஷன்கிட்ட கூட ஏதாச்சும் ஒரு பொருள் இருக்கும். ஆனா உன்கிட்டதான் எதுவுமே இல்லை. பாவம் நீ என்னை விட மோசமான ஏழைங்கறது இப்பதான் தெரியுது. என் கிட்டே கொஞ்சம் பழைய சோறும் ரசமும் இருக்கு. அதையாவது சாப்பிடு!" என்று சொன்ன பிச்சைக்காரன்.

தோளில் தொங்கிக் கொண்டிருந்த மண் கலயத்திலிருந்து கொஞ்சம் பழைய சோற்றை எடுத்து, தன் கையிலிருந்த அலுமினியத் தட்டில் வைத்து, அதில் சிறிது பழைய ரசத்தை ஊற்றி "பாவம்! எதுவுமே இல்லேங்கிறே. சாப்பிட்டு எத்தனை நாளாச்சோ. இதையாவது சாப்பிடு!" என்று சொல்லி விட்டு, அந்தத் தட்டை கேட்டின் முன்னே வைத்து விட்டு, அந்த இடத்தை விட்டுச் சென்றான்.

தர்மராஜன் என்ற அந்த செல்வந்தன், அதிர்ந்து போய் அப்படியே சிலையாக நின்றான்.




# வழிகாட்டுங்கள்



இந்தியாவில் உள்ள சாஞ்சியில் உள்ளது இந்த ஸ்தூபி. இந்த வரலாற்றுப் புகழ்மிக்க இடத்திற்குச் செல்ல வழி தெரியாமல் திணறுகிறார்கள் சிறார்கள். நீங்கள் இவர்களுக்கு வழி காட்டுங்கள்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **22.01.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **327**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 325

பரிசுக்குரியவர்:
எம்.இளையராஜ்,
நு/கொட்டகலை த.ம.வி.,கொட்டகலை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| பாதிமா நிஷ்மா நஜீம்,<br>306/1, மிரிஸ்வத்தை, பலாங்கொடை. | எ.ஃப்.நில்மினி,<br>நல்லாயன் மகளிர் கல்லூரி, கண்டி. |
| நவேந்திரன் விஜயலெட்சுமி,<br>சந்தை வீதி, கோட்டைக்கல்லாறு-01. | செல்வி. ஷர்மினா கிரிதரன்,<br>கொ/சைவ மங்கையர் கழகம், வெள்ளவத்தை, கொழும்பு-06. |
| ஜனனி தேவதாஸ்,<br>ஸ்ரீமுத்து மாரியம்மன் த.ம.வி. கம்பளை. | வி.திலீபன்,<br>மெதடிஸ்த வித்தியாலயம், கொட்டாஞ்சேனை. |
| எஸ்.ரொஸ்மின்,<br>அல் அக்ஷா மத்திய கல்லூரி, கல்பிட்டி. | வரதராஜன் சுதர்சினி,<br>செங்கலடி மத்திய கல்லூரி, மட்டக்களப்பு. |
| து.பிரதீபன்,<br>தபாற் கந்தோர், நீர்கொழும்பு. | எல்.பாத்திமா நிலோபர்,<br>மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்முனை. |

# செய்து பாருங்கள்


தேவையான பொருட்கள்

கலர் பேப்பர், பென்சில்,
கத்தரிக்கோல்.

செய்முறை

பேப்பரை விசிறி செய்ய மடிப்பது போல மடித்துக் கொள்ளுங்கள். படத்தில் உள்ளது போல், பாதி குடையுடன் கூடிய பெண்ணின் படம் வரைந்து கொள்ளுங்கள்.

பின் அந்தப் படத்தைக் கத்தரிக்கோலால் வெட்டிக் கொள்ளுங்கள். பிறகு மடித்த தாளைப் பிரித்துப் பாருங்கள்.



# தண்ணீர்த் தவளை




படத்தில் இருப்பவர் அவுஸ்திரேலியாவில் வாழும் தண்ணீர்த் தவளை. பல நாட்களுக்கு இவரால் தண்ணீர் இல்லாமல் வாழ முடியும்.

மழை பெய்யும்போது பூமிக்குள் இருந்து வெளியே வருவார் இவர். அப்போது பறந்து திரியும் பூச்சிகளை பிடித்து உண்பார்.

அதன் பின் குளம், குட்டைகள் எல்லாம் வற்ற ஆரம்பிக்கும்போது, தன்னால் முடிந்தளவு தண்ணீரை உறிஞ்சி, தன்னுடைய உடம்பில் சேர்த்து வைத்துக் கொள்வார்.

இதற்குப் பிறகு, இவரின் உடம்பின் மீது ஒரு வித 'சலோபன் பேப்பர்' போல தோல் வளர்ந்து விடும். இது எவ்வளவு வெப்பத்தை இத்தவளையார் உறிஞ்சினாலும் பாதிக்கப்படாத அளவுக்குப் பாதுகாக்கும்.

அடுத்த மழை வரை இந்தத் தவளையார் இருக்கும் இடத்தை விட்டு அங்குமிங்கும் அசையமாட்டார்.




# அதிசய ஏரி

தென் அமெரிக்காவின் தென் பகுதியில் மிகப் பெரிய உப்பு நீர் ஏரி உள்ளது. இதன் நீர் கடல் நீரை விட உப்புக்கரிக்கும்.

இந்தத் தண்ணீரில் மீன்கள் உயிர் வாழ முடியாது. இங்கு உப்பு இறால்கள், பாசிகள் மற்றும் புரோட்டோசோவா ஆகிய உயிரினங்கள் மட்டுமே உயிர் வாழ்கின்றன.

இந்த ஏரியில் விழுந்து விட்டவர்கள் நீச்சல் தெரியாதே என்று அலற வேண்டிய அவசியமே இல்லை. இந்த ஏரியில் இருக்கும் உப்புத்தன்மையில் விழுந்தவர்கள் தானாகவே மேலே மிதக்க ஆரம்பித்து விடுவார்கள்.

இதில் முழ்கி எழுந்தவர்களின் உடல் முழுவதும் படிகம் போல் உப்புப் பூத்து விடும்.



ஏரியின் தண்ணீர் நீராவியாகி நிறைய உப்புப் பாளங்கள் உருவாகின்றன. ஒரு வருடத்தில் இந்த ஏரியில் இருந்து ஒரு இலட்சத்து 80 ஆயிரம் மெட்ரிக் தொன் எடையுள்ள உப்புக் கிடைக்கிறது.

## திக் திக் தொடர்

## 09

# 'சிகப்பு வணக்கம்'

**கிரைம் சக்கரவர்த்தி**
**ராஜேஷ்குமார்**

பேஜர் சர்வீஸ் இயங்கிக் கொண்டிருந்த அந்த அலுவலகக் கட்டடத்துக்குள் நுழைந்தார் இன்ஸ்பெக்டர் ராகவேந்திரன்.

கண்களை உறுத்தாத மேக்கப்பில் இருந்த ரிசப்ஷனிஸ்ட் தயக்கமாய் எழுந்து நின்று "ஸார்" என்று குரல் கொடுக்க, ராகவேந்திரன் கேட்டார்.

"கம்யூனிகெஷன் இன் சார்ஜ் இருக்காரா?"

"இருக்கார் ஸார்..."

"அவரைப் பர்க்கணும்..."

"வெயிட் ஏ மினிட் ஸார்.."

சொன்னவள் பக்கத்தில் இருந்த இண்டர்காமைத் தட்டிவிட்டுப் பேசினாள்.

"ஸார்... இன்ஸ்பெக்டர் ஒருவர் உங்களைப் பார்ப்பதற்காக வந்திருக்கார்.."

"........."

"எஸ்... ஸார்..." - இண்டர்காமை அணைத்துவிட்டு. ராகவேந்திரனை கூப்பிட்டார் ரிசப்ஷனிஸ்ட்.


"ஸார்... நீங்கள் சி.ஐ.யைப் பார்க்கப் போகலாம்..."

"அவர் பேர் என்ன?"

"ஜெயபாண்டியன்"

ராகவேந்திரன், அவருடைய அறைக்கான வழியைக் கேட்டுக் கொண்டு உள்ளே போனார்.

'கம்யூனிகேஷன் இன் சார்ஜ்' என்று பிளாஸ்டிக் எழுத்துக்கள் சொன்ன ஃப்ளஷ் டோரைத் தள்ளிக் கொண்டு நுழைந்தவரை, அந்த நாற்பது வயது ஜெயபாண்டியன் எழுந்து நின்று கை குலுக்கி வரவேற்றார்.



"வெல்கம் ஸார் .. ப்ளீஸ் பீ ஸீட்டட்..." -நாற்காலியைக் காட்டி, ராகவேந்திரன் உட்கார்ந்ததும் கேட்டார்,

"எனி என்கொய்ரி...?"

"எஸ்..."

"ரிக்கார்டிங் வித்..?"

"இரண்டு மணி நேரத்திற்கு முன்னால் ஏர்போர்ட்டில் வெடி குண்டுச் சம்பவம் ஒன்று நடந்துவிட்டது. அது நடந்த சில நிமிஷங்களிலேயே டி.ஜி.பி. ஜோஷி ஸ்பாட்டுக்கு வந்து பார்வையிட்டுக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் அவருக்கு பேஜர் வந்தது. பேஜர் நியூஸ் இதுதான். 'போலிஸ் துறைக்கு என் முதல் சிவப்பு வணக்கம்' இந்த பேஜர் நியூஸைக் கொடுத்தது யார்ன்னு உங்களால கண்டு பிடித்துச் சொல்ல முடியும்ன்னு நினைக்கின்றேன்....."

ஜெயபாண்டியன் தோள்களைக் குலுக்கினார்.

"ஷ்யூர்...! டி.ஜி.பி.ஜோஷியோட பேஜர் நம்பர் என்னான்னு சொல்ல முடியுமா...?

ராகவேந்திரன் ஒரு சிறிய காகிதத்தில் குறித்து வைத்திருந்த ஜோஷியின் பேஜர் நம்பரைக் கொடுக்க, அதை வாங்கிக் கொண்ட ஜெயபாண்டியன் இண்டர்காமில் தொடர்பு கொண்டு யாரிடமோ பேசி விபரத்தைச் சொல்லி விட்டு ரிஸீவரை அமர்த்தியபடியே ராகவேந்திரனை ஏறிட்டார்.

"இரண்டே நிமிஷத்தில் தகவல் கிடைத்துவிடும் ..." என்று சொன்ன ஜெயபாண்டியன் சற்றே கவலையான குரலில் கேட்டார்.

"ஏர்போட்டில் நடந்த வெடி விபத்தில் யாராவது இறந்து விட்டார்களா இன்ஸ்பெக்டர்?"

"எஸ்...! கிரிக்கெட் போர்டு சேர்மன் மிஸ்டர் ஆச்சர்யா பலியாகி விட்டார். போலீஸ் கமிஷனர் லட்சுமிபதி சொற்ப காயங்களோடு தப்பிவிட்டார்.."

"பேஜர் நியூஸ் எந்த டெலிஃபோன் எண்ணிலிருந்து கொடுக்கப்பட்டது என்று தெரிந்தால், உங்களுடைய இன்வெஸ்டிகேஷனுக்கு அது மிகவும் உதவியாய் இருக்கும் இல்லையா?"

"எஸ்.... அதற்காகத்தான் உடனடியாய் இங்கே வந்தேன்..."

ராகவேந்திரன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அறைக்கதவு தட்டப்பட்டு, அந்தப்பெண் உள்ளே வந்தாள்.

"ஸார்.. அந்த ரேட்சல்யூட் மேட்டர்..."

"ஃபோன் நெம்பர் கிடைச்சுதா...?"

"கிடைச்சுது ஸார்"

"சொல்லு..."

"ஃபோர் த்ரி ஃபோர் ஜீரோ டு நாட் ஃபைவ்..."

"அட்ரஸ்"

"எக்சேஞ்ச்ல கேட்டு அதையும் நோட் பண்ணிகிட்டு வந்துருக்கேன் சார்..."

"சொல்லு...."

"மிஸ்டர் கணேஷ்குமார், நெம்பர் ஃபிப்டி நைன், ரமணன் ஸ்ட்ரீட்.... தி.நகர், சென்னை பதினேழு...."

ராகேவந்திரன் டெலிஃபோன் நம்பரையும், அட்ரஸையும் குறித்துக் கொண்டு அந்தப் பெண்ணிடம் நிமிர்ந்தார்.

"சிகப்பு வணக்கம் மெஸேஜை ரிஸீவ் பண்ணியது யாரு...?"

"நான் தான் ஸார்..."

"பேசினது ஆண்தானே?"

"ஆமா ஸார்..."

"குரலை மறுபடியும் கேட்டா ஐடென்டிஃபை பண்ணிக்க முடிமா...?"

"முடியும்ன்னு நினைக்கிறேன் சார்... ஏன்னா கொஞ்சம் ஹஸ்கியா இருந்தது..."

"போலீஸ் துறைக்கு என் முதல் சிகப்பு வணக்கம் என்ற இந்த வாசகம் உங்க மனசுக்கு வித்தியாசமா படலையா?"

"பட்டது ஸார்...! ஆனா இதுல இவ்வளவு பெரிய கொடூரம் இருக்கும்ன்னு நான் நினைச்சுப் பார்க்கலை! யாரோ போலீஸ் துறையோட சேவையைப் பாராட்டி, வித்தியாசமான முறையில் பாராட்டு தெரிவிக்கிறாங்கன்னு நினைச்சுட்டேன்..."

இன்ஸ்பெக்டர் ராகவேந்திரன் எழுந்தார்.

"இட்ஸ் ஓ... கே... தேங்க்யூ வெரிமச் ஃபார் யுவர் கைண்ட் இன்ஃபர்மேஷன்ஸ். இனி நான் இன்வெஸ்டிகேஷனை கண்டினியூ பண்ணிக்கிறேன்..."

ஜெயபாண்டியனின் கையைப் பற்றிக் குலுக்கிவிட்டு ராகவேந்திரன் வெளியே வந்தார்.

பைக்கை விரட்டி, தியாகராய நகரில் அலைந்து ஒரு மணி நேரத்திற்கு பிறகு ரமணன் தெருவைக் கண்டு பிடித்து, 59 எண்ணிட்ட அந்த சிறிய பங்களாவுக்கு முன்பு பைக்கை நிறுத்தினார்.

அசோகா ம்ரங்களுக்குப் பின்னால், ரோஸ் நிற டிஸ்டெம்பர் பூச்சில் பாதி முகம் காட்டியது பங்களா.

காம்பௌண்ட் கேட் சார்த்தியிருந்தது.

ராகவேந்திரன் பைக்கை ஸ்டாண்டிற்கு நிறுத்திவிட்டு, காம்பௌண்ட் கேட்டை மெதுவாய்த் தள்ள, போர்டிகோ வராந்தாவில் படுத்திருந்த ஒரு நபர் எழுந்து உட்கார்ந்து குரல் கொடுத்தான்.

"யாரு...?"

ராகவேந்திரனின் போலீஸ் யூனிஃபார்மைப் பார்த்ததும், தலையில் கட்டியிருந்த துண்டு தோளுக்கு வந்து, பின் மெல்ல கைக்கு வந்தது.

எழுந்து ஓடி வந்தான்.

"அய்யா..."

"இது கணேஷ்குமார் வீடுதானே?"

"ஆமாங்கய்யா..."

"அவர் இருக்காரா...?"

"இல்லீங்களே...! அவர் குடும்பத்தோடு சிங்கப்பூர் போயிருக்காரே..."

"எப்ப போனார்...?"

அவன் அண்ணாந்து ஆகாயத்தைப் பார்த்து, இரண்டு விநாடி யோசித்துவிட்டுச் சொன்னான்.

"இன்னியோட சரியா பதினஞ்சு நாளாச்சுங்க..."

"நீ இந்த வீட்டுக்கு வாட்ச் மேனா...?"

"ஆமாங்க..."

"இப்ப வீடு பூட்டியிருக்கா திறந்திருக்கா?"

"பூட்டிதாங்க இருக்கு. சாவியையெல்லாம் அவங்களே கொண்டு போயிட்டாங்க..."

"இந்த வீட்டுக்கு டெலிஃபோன் எங்கேயிருக்கு?"

"ஹாலுக்கு வலதுபக்க ஒரத்துல..."

"ஒரு ஃபோன் பண்ணிக்கலாமா?"

"ஃபோன் பண்ண முடியாதுங்களே? ஹாலுக் குள்ளே போனாதான் ஃபோன் பண்ண முடியும், வாசல் கதவ் பூட்டியிருக்கே...!

"கணேஷ்குமார் வெளிநாடு போயிருக்கிற இந்த நேரத்துல, அவரைப் பார்கிறதுக்காக யாராவது வந்தாங்களா?"

"அப்படி யாரும் வரலீங்களே?"

"உம் பேர் என்ன...?"

"வேலுச்சாமிங்க..."

"இதோ பார் வேலுச்சாமி... ரெண்டு மணி நேரத்துக்கு முன்னாடி இந்த வீட்டு டெலிஃபோனை உபயோகப்படுத்தி யாரோ பேசியிருக்காங்க... அவங்க யார்ன்னு சொல்லிடறியா?"

வேலுச்சாமி மிரண்டான்.

"அய்யா... கடந்த பதினஞ்சு நாளா இந்த வீட்டு வாசலிலேயே நாய் மாதிரி படுத்துக் காவல் காத்துக்கிட்டு இருக்கேன். சாப்பாட்டுக்கும், டீ குடிக்கவும் வெளியே போறப்ப வெளி கேட்டைப் பூட்டிகிட்டு போயிடுவேன்..."

"பொய் சொல்லாதே! இங்கேயிருந்து யாரோ ஃபோன் பேசியிருக்காங்க... அந்த உண்மையைக் கண்டு பிடிக்க எனக்கு ரோம்ப நேரமாகிடாது. நீயாகவே உண்மையைச் சொல்லிட்டா பிரச்சனையில்லை. இல்லேன்னா ஸ்டேஷனுக்குக் கொண்டு போக வேண்டியிருக்கும்..."

வேலுச்சாமி பதறிப்போய் கையெடுத்துக் கும்பிட்டான்.

"அய்யா... நீங்கள் சொல்றது ஒண்ணுமே புரியலைங்கய்யா... டெலிஃபோன் இருக்கிற இடத்தை நீங்களே வந்து பாருங்கய்யா... என்னை மீறி இந்த வீட்டுக்குள்ளே யாரும் போக முடியாதுங்கய்யா.... வாங்கய்யா.... வந்து பாருங்கய்யா...

அலறிய வேலுச்சாமியைக் கையமர்த்தி இன்ஸ்பெக்டர் ராகவேந்திரன் மெல்ல போர்டிகோ படிகளில் ஏறிப்போய் கதவில் தொங்கிக் கொண்டிருந்த பித்தளைப் பூட்டை உற்றுப் பார்த்தார். பின் மெல்ல தொட்டுப் பார்த்தார்.

பூட்டின் மேல் லேசாய் தூசிப் படலம் படிந்திருந்தது.

வேலுச்சாமி பொய் பேசவில்லை.

'அவனுக்குத் தெரியாமல்தான் யாரோ பின் பக்க வழியாக உள்ளே நுழைந்திருக்க வேண்டும்.

ராகவேந்திரன் அவன் மேல் பார்வையை நிறுத்தினார்.

"வேலுச்சாமி..."

"அய்யா..."

"ஃபோன் எங்க இருக்குன்னு வந்து காட்டு..."

வேலுச்சாமி, பங்களாவின் பக்க வாட்டுப் பக்கம் கூட்டிக் கொண்டு போய், பாதி திறந்திருந்த ஜன்னல் வழியே ராகவேந்திரனைப் பார்க்கும் படி சொல்ல, அவர் எட்டிப்பார்த்தார்.

டெலிஃபோன் ஹாலின் வலது பக்கக் கோடியில் ஒரு டீபாயில் மேல் உட்கார்ந்திருந்தது.

அதனையொட்டி மாடிப்படிகள் வளைந்து வளைந்து மேலே போயிற்று.

முதல் மாடிப்படியில் எதுவோ மின்னியது.


(தொடர்ந்து வரும்)

---

**'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.**

# தர்ம யுத்தம்

## 19



நான் உதவி இயக்குநராகப் பணிபுரிந்தபோது, ரங்கராஜ புரத்தில் கொஞ்ச நாள் குடியிருந்தேன். நான் அந்த வழியாக நடந்து செல்லும் போதெல்லாம் அங்குள்ள காப்பரேஷன் பள்ளியின் வாசலில் அந்த மூதாட்டியை அடிக்கடி பார்ப்பதுண்டு.

அவர் ஒரு நடைபாதை வியாபாரி. வியாபாரி என்றதும் பெரிதாக எதுவும் எண்ண வேண்டாம். ஒரு கோணிப்பையை விரித்து, வேர்க்கடலையை கூறுகட்டி வைத்திருப்பார். சில வகை மிட்டாய்கள் இருக்கும். கொடுக்காப்புளி பழமும் உண்டு.

ஒரளவு சிவந்த உடம்பும், பாதி நரைத்த தலையும், சுருங்கிய தோலும், கோடுகள் நிறைந்த முகமும், வாழ்வில் எந்த நேரமும், எதையும் நோக்கும் தீட்சண்யமான பார்வையும் கொண்ட அந்த மூதாட்டியைப் பார்க்கும் போதெல்லாம் எனக்குள் சிறு சந்தோஷம் பிறக்கும்.

நன்றாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு சில பேர்கூட வாழ்வில் கஷ்டங்கள் ஏற்படும் போது, ஏதேனும் பிரச்சனைகளை எதிர் நோக்குகின்ற நேரத்தில், விரக்தியின் விளிம்பிற்கே சென்று, "என்ன வாழ்க்கை சார் இது! வாழவே பிடிக்கல்ல. பேசாம தற்கொலை பண்ணிக்கலாமான்னு தோணுது" என்று புலம்புவதை நான் பார்த்திருக்கிறேன்.

ஆனால் இந்த மூதாட்டி இந்த வயதிலும், நம்பிக்கை இழக்காமல், நாலைந்து சிறுவர்களுடைய பாக்கெட்டில் இருக்கும் சில்லறைக் காசுகளை நம்பி, எவ்வளவு நம்பிக்கையோடு இந்த வாழ்க்கையை எதிர்கொண்டிருக்கிறார்.

அந்த கோணிப்பையில் இருக்கும் மொத்தப் பொருள்களின் அடக்கமே 30 ரூபாயைத் தாண்டாது. இதில் என்ன வியாபாரம் செய்து, எவ்வளவு லாபம் பார்த்து, இந்த வாழ்க்கையை அவர் ஓட்டிக் கொண்டிருக்கிறார்?

நினைத்தால் எனக்குத் திகைப்பாக இருக்கும். என்றாலும், அவரைப் பார்க்கும்போது என் நெஞ்சத்தில் நம்பிக்கை பிறக்கும். அந்த மூதாட்டியைக் கடந்து போகும்போது அங்கு நடக்கும் நிகழ்ச்சிகளை என் மனதில் பதிவு செய்து கொள்வதற்காக அந்த இடத்தைக் கடக்கும்வரை நான் மெதுவாக நடப்பேன்.

ஒருநாள், அந்த மூதாட்டியை நான் கடந்து சென்றபோது, என்னிடம் "மணி என்ன?" என்று கேட்டார். என் மனதிற்குள் சிரிப்பு வந்தது. மணியைத் தெரிந்துகொண்டு இவர் என்ன வேலைக்கா போகப் போகிறார் என்று.

நான் சிரித்தபடியே கேட்டேன். "என்ன பாட்டி, எங்கேயாவது அவசரமா போகணுமா?" என்று. "இல்லப்பா, மணி மூணு ஆச்சுன்னா கடையை எடுத்துக்கிட்டு, வீட்டுக்குப் போகலாமுன்னுதான். பள்ளிக்கூடம் முடியுறப்ப பசங்க கையில காசு இருக்காது. அதனால எனக்கு வியாபாரம் இருக்காது."

அவரைப் பொறுத்தவரையில், அவர் விரித்திருந்த கோணிப்பையும் ஒரு கடை அதற்கென்று ஒரு வியாபார நேரம். முடிந்த வரை அந்தப் பகுதியை நான் கடக்கும்போது அவர் மீது என் பார்வை செல்லுவது வாடிக்கையாகிவிட்டது.

### சண்டை

ஒருநாள் உச்சிவேளையில், என் ரூமிற்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது, அந்தப் பள்ளியின் வாசலில் நின்றிருந்த ஒரு சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநருடன் அவர் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்.

"கொஞ்சம்கூட வெட்கமில்லாம, ரிக்ஷா ஓட்ன பணத்தையெல்லாம் குடிச்சிட்டு வந்து, ஏங்கிட்ட வேற, செலவுக்கு காசு கேக்குறியா? போயும் போய் உனக்கு என் பொண்ண கட்டிக் கொடுத்தேன் பாரு, என் புத்திய செருப்பால அடிக்கணும்."

உடனே அந்த ரிக்ஷா ஓட்டி, "ஆங்! உம் பொண்ணு பெரிய மகாராணி. அவளை எனக்கு கட்டிக் குடுத்து, உங்க ராஜ்ஜியத்தையே எங்களுக்கு எழுதி வச்சிட்டீங்க. சரிதான் போம்மே! இப்ப ரெண்டு ரூபா குடுக்கப் போறியா, இல்லையா?"

எனக்குப் புரிந்துவிட்டது. அந்த சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர், அவரது மருமகன். மகளின் கணவன். இந்த தள்ளாத வயதில் தன்னம்பிக்கையோடு வாழ்கிற அந்தப் பெண்ணிடம் வந்து, தன் கைச்செலவுக்கு காசு கேட்டுக் கொண்டிருந்தான். இல்லை, கைச் செலவுக்கு அல்ல; போதைச் செலவுக்கு!

இன்னொரு நாள், அன்று நான் வேலை செய்த படத்தின் ரீரெக்கார்டிங் இருந்தது. கம்பெனி கார் ரிப்பேர் என்பதால் என்னுடன் பணியாற்றிய நண்பர் ஐயப்பன், ஆட்டோ ரிக்ஷாவில் என்னை அழைத்துப்போக வந்திருந்தார். நான் அவருடன் புறப்பட்டேன்.

ஆட்டோ எங்கள் தெருமுனையில் திரும்பியதும், அந்தக் காட்சி தென்பட்டது. எனக்குப் பரிச்சயமான அந்த மூதாட்டியும், நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்த ஒரு இளம் பெண்ணும் ஒரு சைக்கிள் ரிக்ஷா ஓட்டியுடன் போராடிக் கொண்டிருந்தனர். அவனோ இரவு குடித்த சாராயத்தின் போதை இன்னும் இறங்காமல், மயங்கிய நிலையில் சாய்ந்திருந்தான்.

அந்த சைக்கிள் ரிக்ஷா ஓட்டி வேறு யாருமல்ல; அன்றொரு நாள் சண்டை போட்டானே அதே மருமகன்தான்.

அவனை எழுப்புவதற்காக மூதாட்டி போராடிக் கொண்டிருந்தார். இடையிடையே அந்த இளம் நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்ணும் நிற்க முடியாமல் தவித்த நிலையில், அவ்வப்போது அவன் தலையில் தட்டி, "த எழுந்திரு" என்று குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்.

இவற்றையெல்லாம் ஒரு கூட்டம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. எதையுமே வேடிக்கை பார்ப்பதில் நம்மவர்களை மிஞ்ச உலகில் யாருமே கிடையாதே!

### ரிக்ஷா வராது

என்ன எழுப்பியும் அவன் எழுவதாக இல்லை. கிழவியோ திட்டத் தொடங்கினாள். "கட்டையில் போறவனே! உனக்கெல்லாம் கல்யாணம் ஒரு கேடாடா? பொண்டாட்டி, இடுப்பு வலியால தவிச்சுக்கிட்டு இருக்கா! அவளை ஆஸ்பத்திரிக்குக்கூட கூட்டிக்கிட்டு போக முடியாம, இப்படிக் குடுச்சிட்டுப் படுத்திருக்கிறியே?"

நான் அந்த இளம் பெண்ணைப் பார்த்தேன். ஒல்லியான உருவம், காய்ந்த தலை வயிறு பெருத்த நிலையில் நிற்க முடியாமல் சைக்கிள் ரிக்ஷாவின் ஒரு பகுதியைப் பிடித்து, வலிதாங்காமல் அசைந்தபடியே முனகிக்கொண்டிருந்தாள்.

அந்தப் பெண்ணின் வயிற்றில் இருந்த எதிர்கால இந்தியப் பிரஜையோ, 'எந்த நேரமும் வந்துவிடுவேன்' என்று பயமுறுத்திக் கொண்டிருந்தான். அந்தப் பிரஜையை உருவாக்கிய படைப்பாளியோ மது மயக்கத்தில், "ரிக்ஷால்லாம் வராதுன்னா வராது தான், போ!" என்று வேறு யாரோ சவாரிக்குக் கூப்பிடுவது போல் பதில் சொல்லி, உளறிக் கொண்டிருந்தான்.

பக்கத்துக் குழாயில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்த சில பெண்கள், "ஏம்மா, அவன்தான் எந்திரிக்கமாட்டேன்கிறான்ல? அவனை எதிர்பார்த்தா முடியுமா? அந்தப் பொண்ணு பாரு, இடுப்புவலி தாங்காம கஷ்டப்பட்டுக்கிட்டிருக்கா, சீக்கிரம் கூட்டிக்கிட்டு போம்மா" என்றனர்.

"வேறு வண்டி வச்சா, அதுக்கு வேற காசு குடுக்கணுமே. நான் எங்க போவேன்?"

நான் எனது நண்பர் ஐயப்பனிடம் மெதுவாகக் கேட்டேன். "நம்ம கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டு, இவங்கள அந்த ஆஸ்பிடலில இறக்கிவிட்டுடலாமா?"

நண்பர் ஐயப்பனும் சம்மதித்தார். நான் இறங்கிச் சென்று, பாட்டியிடம் விஷயத்தைக்கூறி, அந்தப் பெண்ணை ஆட்டோவில் ஏறச் சொன்னேன். நான் டிரைவருக்குப் பக்கத்தில் அமர்ந்துகொள்ள, நண்பர் ஐயப்பன் அந்த இரண்டு பெண்களுடன் பின்னால் ஒட்டிக்கொள்ள, எல்லோரும் பார்த்திருக்க ஆட்டோ புறப்பட்டது.


(அனுபவங்கள் தொடரும்)

மானம் கற்றான்

ஐரிஷ் விடுதலைப் போராட்டம்
750 வருடங்களுக்கு மேற்பட்ட
நீண்ட நெடிய வரலாறு கொண்டது!
1900ம் ஆண்டு ஆரம்பம் வரை
ஐரிஷ் மிதவாதத் தலைவர்கள்
பிரித்தாளும் பிரித்தானியரால்
ஏமாற்றப்பட்டனர்.
இந்நிலையில் 1913ம் ஆண்டு
ஆயுதம் தாங்கிய ஐரிஷ் தொண்டர் படை
உருவானது. இதுவே பிற்காலத்தில்—
1919 ல் ஐரிஷ் குடியரசு இராணுவமானது.
ஐரிஷ் தொண்டர் படையின் வீரன்
தான் பிரீன். மனதை உலுக்கும்
எழச்சிமிகு உண்மை வரலாறு இது.

# வீரன் தான் பிரீன் 16

ஹோகன் உடனே வெளியேறி, பொலிஸார் வடபக்கத்திலிருந்து வருவதாக எண்ணிக்கொண்டு தென்புறம் திரும்பி வயல்களில் குதித்து ஓடலானான். வீதி மேட்டிலிருந்ததால், அங்கிருந்து பார்த்தால் வயல்களில் நடப்பது நன்றாகத் தெரியும். வீதியில் ஆறு பொலிஸ்காரர் நின்று கொண்டு ஹோகன் ஓடிவருவதைக் கவனித்தனர். அவன் அதிவேகமாய் வயல்களைத் தாண்டி அவர்கள் நின்ற இடத்திற்கே போய் மேட்டில் ஏறி விட்டான்! பொலிஸ்காரர்கள் உடனே



அவனைப் பிடித்துக் கொண்டனர். ஹோகன் தனக்கு மேற்கொண்டு அபாயமில்லை என்று கருதியிருந்ததால் றிவோல்வரை இடுப்பில் மாட்டியிருந்தான். ஆதலால் அதை உடனே எடுக்க முடியவில்லை.

உடனே அவனுக்கு விலங்கிடப்பட்டது; அவனுடைய றிவோல்வர் பறிக்கப்பட்டது. பொலிஸார் அவனை மீகருடைய வீட்டுக்கு அழைத்துக்கொண்டு சென்றனர். அங்கே அதற்கு முன்னால் சென்று வீட்டைச் சோதனை போட்டுக்கொண்டிருந்த பல பொலிஸார் வீட்டை விட்டு வெளியே வந்தனர். அங்கு கூடியிருந்த பொலிஸார் அனைவருக்கும் தங்களிடம் கைதியாக அகப்பட்டிருந்த பேர்வழி பொலிஸ்காரன் ஹோகனைப் பார்த்தவுடன், அவன் ஸோலோ ஹெட்பக் கொலைகள் சம்பந்தமாகப் பிடிபட வேண்டியவர்களில் ஒருவன் என்பதைக் கண்டுபிடித்துவிட்டான்!

பீலர்கள் ஹோகனைப் பலவிதமாகத் துன்புறுத்தினார்கள். கைகளாலும் தடிகளாலும் அடித்தார்கள். அடிமேல் அடிவிழுந்தும், அவன் வாய் திறந்து ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. ஒரு பொலிஸ்காரன் தான் பிரீனும், டிரீஸியும் கைதுசெய்யப்பட்டிருப்பதாயும் அவர்கள் உள்ளதையெல்லாம் ஒளியாமல் சொல்லிவிட்டதாயும் தெரிவித்தான். அவனும் உள்ளதைச்சொன்னால் தூக்கிலிடப்படாமல் இலண்டனுக்குத் தப்பிப் போக வழி உண்டு என்பதையும் அவன் குறிப்பாக எடுத்துக்காட்டினான். ஸீன் யார் என்பதே தெரியவில்லை. அவன் பெயர் என்ன என்று கேட்டார்கள். ஹோகன் பீலர்களை மதித்துப் பதில் சொல்வது வழக்கமில்லை. பீலர்கள் அவனை வெளியே கொண்டு செல்லும்போது அவனுடைய தோழி பிரிஜிட் அவ்விடத்திற்கு ஓடிவந்து, "ஸீன்! போய்வா! வந்தனம்!" என்று கூறினாள். அப்பொழுதுதான் பொலிஸாருக்கு அவனுடைய பாதிப் பெயர் தெரியவந்தது!

அந்தப் பொலிஸ் கூட்டத்திற்கு சார்ஜென்டு வாலஸ்தான் தலைமை வகித்திருந்தான். கொன்ஸ்டபிள் றெய்லியும் அவனுடன் இருந்தான். கடைசியில் பொலிஸார் ஹோகனை தர்லஸ் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்த்தனர். அங்கு ஒரு ஹோகன் பொலிஸ்காரர்களின் வார்த்தைகளை நம்புவானா? அவனுடைய நண்பர்கள் உயிரை இழப்பினும் மானத்தையும், கொள்கைகளையும் இழக்க மாட்டார்கள் என்பது அவனுக்கு வெகு நன்றாகத் தெரியும். ஆதலால் அவன் முற்றிலும் மௌனமாக இருந்து விட்டான். பொலிஸார் மேலும் பயமுறுத்தினார்கள், அடித்தார்கள், ஏசினார்கள், ஏமாற்றிப் பார்த்தார்கள். ஒன்றும் பயன்படவில்லை. பின்னால் 13 ஆம் திகதி அவனைக் கார்க் ஜெயிலுக்குக் கொண்டுபோகையில்தான் ரயிலில் தோழர்கள் வந்து அவனை விடுதலை செய்தனர்.

வழியில் சார்ஜென்ட் வாலஸ் அடிக்கடி, "தான் பிரீன் எங்கே எங்கே?" என்று கேட்டு, ஒவ்வொரு கேள்வி கேட்கும் போதும் அவனைக் கத்தி முனையால் குத்தி வந்தானாம்.

ஹோகனுடைய உடம்பிலிருந்த புண்களே பொலிஸாரின் திருவிளையாடல்களை எடுத்துக்காட்டின. ஆனால் சார்ஜென்ட் வாலஸ் மேற்கொண்டு உயர்ந்த உத்தியோகத்தைப் பெறமுடியாதபடி இவ்வுலகத்தை விட்டே புறப்பட நேர்ந்துவிட்டது.

இனி, தான் பிரீன் முதலானவர்களைக் கவனிப்போம். கடைசியாக கொன்ஸ்டபிள் றெய்லி ஓடிய பிறகு, தான்பிரீனும் நண்பர்களும் ஸ்டேஷனை விட்டு வெளியேறினார்கள். அவர்களுடைய உடம்புகளிலும் உடைகளிலும் இரத்தம் கொட்டுவதைக் கண்டு மக்கள் திடுக்கிட்டுப் பல இடங்களிலும் சிதறி ஓடி மறைந்தனர். அந்த ஸ்டேஷனில் இம்மாதிரியான சம்பவத்தை அவர்கள் முன்னர் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. ஒருவரும் புரட்சிக்காரரை நெருங்கவேயில்லை புரட்சி வீரர்கள் கைதியைச் சேர்த்து மொத்தம் ஒன்பது பேர்களிருந்தனர்.

தான் பிரீனால் நடக்கவே முடியவில்லை. அத்துடன் அவனுடைய றிவோல்வரில் குண்டுகளும் காலியாகிவிட்டன. அவன் பக்கத்தில் யாராவது வருகிறார்களா என்று பார்த்தான். வெளியிலிருந்து ஸ்டேஷனைப் பார்த்து ஒரு மோட்டார் கார் வந்து கொண்டிருந்தது. உடனே அவன் வெற்று றிவோல்வரை நீட்டி அதை வழிமறித்து நிறுத்தினான். அந்த நிலையில் அவனைக் கண்ணுற்ற யாரும் இரக்கப்படாமலிருக்க முடியாது. அவனுடைய தலை 'கிர்...கிர்' என்று சுழன்று கொண்டிருந்தது; உடம்பெல்லாம் இரத்தம் வழிந்தது; வழியில் ஒரு சுவரில் முட்டித் தலையிலிருந்து கண்ணை மறைத்து இரத்தம் பொழிந்து கொண்டிருந்தது. அவனுடைய கால்கள் தள்ளாடி வீழ்ந்ததால் அவன் ஒரு கையால் பூமியைத் தடவிக் கொண்டே உருளலானான். அவனைப் பார்த்த சில மக்கள் அலறிக் கொண்டு ஓடினார்கள். கடைசியாக ஒரு புண்ணியவான் ஓடி வந்து உதவி செய்யலானான். அவன் காக்கியுடை தரித்திருந்த அரசாங்கப் பட்டாளச் சிப்பாய்! தான் பிரீன் அவன் கைமீது சாய்ந்து கொண்டே வீதியில் நடக்கலானான். அவனுடைய மூளையும் கலங்கியிருந்தது. முடிவில் றிவோல்வரைக் காட்டி நிறுத்திய காரை உபயோகிக்க அவனுக்கு ஞாபகமில்லை. வழியில் மற்ற நண்பர்கள் வீதியோரமாகக் காத்திருந்தனர். அவர்கள் ஒரு கசாப்புக்கடைக்காரனுடைய கத்தியை வாங்கி ஹோகனுடைய கைவிலங்குகளை உடைத்தெறிந்தனர். நான்கு தொண்டர்கள் அவனை மிகவும் பந்தோபஸ்தான இடத்திற்கு அழைத்துக் கொண்டு சென்றனர்.

தான் பிரீன், டிரீஸி, இமன் ஒபிரியன், ஸ்கான்லன் ஆகிய நால்வரும் ஷனாகனுடைய வீட்டை நோக்கிப் புறப்பட்டனர். சுற்றிலும் மையிருட்டாக இருந்ததால் பாதை சரியாய்த் தெரியவில்லை.

இடையில் சில வாலிபர்கள் அவர்களுக்கு வழி காட்டி உதவி செய்தனர்.

வீடு சேர்ந்ததும் தான் பிரீன் ஒரு படுக்கையில் படுக்கவைக்கப்பட்டான். அவனுக்கு ஆறுதல் சொல்ல ஒரு பாதிரியாரும் வைத்தியம் செய்யப் புகழ் பெற்ற ஒரு வைத்தியரும் அழைத்து வரப்பட்டார்கள். வைத்தியருடைய பெயர் டாக்டர் ஹென்னெஸ்ஸி, அவ்விருவரும் நோயாளி 24 மணி நேரத்திற்குமேல் ஜீவித்திருக்கமாட்டார் என்று அபிப்பிராயப்பட்டனர். ஏனென்றால் தான் பிரீனுடைய சுவாசப்பையில் குண்டு பாய்ந்து மறுபுறத்தால் வெளியே போயிருந்தது. அத்துடன் உடலிலிருந்து ஏராளமான இரத்தம் வெளியாகியிருந்தது. தான் பிரீன் தான் உயிரோடிருக்கக்கூடிய 24 மணி நேரத்திலுமாவது அமைதியாய் இருப்பதற்கு வழியில்லையே என்று வருந்தினான்.

அவன் படுத்திருந்த ஷனாகனுடைய வீட்டைச் சுற்றிலும் கிளான்ஸி என்பவனுடைய தலைமையின் கீழ் ஒரு தொண்டர் படை காவலுக்காக வைக்கப்பட்டிருந்தது. வேறு பல தொண்டர்கள் ஊரைச் சுற்றியுள்ள வீதிகளில் நிறுத்தப்பட்டிருந்தனர். பொலிஸாருடைய தலை எங்காவது காணப்பட்டால் உடனே தகவல் கொடுப்பதற்கும், அவர்கள் வீட்டுப் பக்கம் நெருங்கினால் எதிர்த்துப் போராடுவதற்குமே தொண்டர்கள் நிறுத்தப்பட்டிருந்தனர். தான் பிரீன் உயிரோடிருக்கும் வரை பகைவர்கள் அவனைத்தொட்டுவிடாமல் இருப்பதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் தொண்டர்கள் செய்து வைத்திருந்தனர்.

இங்கே இந்நிலையிருக்க, நாக் லாங்கிலும் அதன் சுற்றுப்புறத்திலும் டூன், ஊலர், கால்பல்லி முதலான பல கிராமங் களிலும் நகரங்களிலும் ஏராளமான பட்டாளத்தார்களும் பொலிஸ்காரர்களும் கொண்டுவரப்பட்டனர்.

தென் திப்பெரரியிலும், கிழக்கு லிமெரிக்கிலும் வீடு வீடாய்ச் சோதனை போடப்பட்டது. புதிதாய் மண் போடப்பட்டிருந்த சவக்குழிகள் எல்லாம் தோண்டிப் பார்க்கப்பட்டன. ஏனென்றால் இரண்டு புரட்சிக்காரர்கள் படுகாயமடைந்ததாயும் அவர்கள் இறந்து போய்ப் புதைக்கப்பட்டிருப்பார்கள் என்றும் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்ததாம்.

தான்பிரீன் அதிக நேரம் ஓய்வெடுத்துக்கொள்ள வழியில்லை. சில மணி நேரம் கழியும் முன்பே தொண்டர்கள் பொலிஸார் அங்கு வருவதாகத் தெரிந்து கொண்டார்கள். உடனே அவர்கள் ஒரு மோட்டார் காரைக் கொண்டுவந்து அதில் தான் பிரீனை ஏற்றி வைத்து கில்மல்லக் நகரத்தின் வழியாக ஓட்டிச் சென்றனர். வழியில் பொலிஸாருடைய வீடுகளிருந்தன. அவற்றின் வழியாகவே கார் சென்றது. எப்படியாவது அவ்விடத்தை விட்டு வெளியேற வேண்டியது அவசியமாயிருந்தது.

கடைசியாக அவர்கள் மேற்கு லிமெரிக்கில் ஸீன்பின்னுடைய வீட்டையடைந்து அங்கு தான் பிரீனைச் சௌகரியமாய்ப் படுக்கவைத்தனர். ஸீன்பின் அவனுடைய பழைய நண்பன். ஆதலால் அவனையும் அவன் தோழர்களையும் மிக்க அன்புடன் உபசரித்து வந்தான். பக்கத்திலிருந்த மற்றக் குடும்பத்தார்களும் அவர்களை அடிக்கடி வந்து பார்த்து வேண்டும் உதவிகள் செய்து வந்தார்கள்.

அங்கு தான் பிரீன் வெகுநாள் அமைதியாயிருக்க முடியவில்லை. பகைவர்கள் அவனைப் பற்றித் துப்பறிந்து நாலுபக்கத்திலும் நெருங்கி வந்து கொண்டிருந்தனர். தொண்டர்களில் பலர் தாங்களும் பல இடங்களிலிருந்து எதிரிகளைப் பற்றிய இரகசியங்களை அறிந்து வந்தனர்.. தான் பிரீன் அங்கிருந்து கொர்ரிக்குக் கொண்டுசெல்லப்பட்டான். அங்கு போன பின்பு வெகுவிரைவாகக் குணமடைந்து வந்தான். அவன் அடைந்த காயங்களால் இறந்தே தீரவேண்டும் என்பது இயற்கை வழியாகக் காணப்பட்டபோதிலும், அவன் பிடிவாதமாக இறக்க மறுத்து உயிர் வாழ்ந்து வந்தான். கொர்ரியிலிருக்கும் பொழுது அவன் சிறிதுதூரம் நடக்கவும் முடிந்தது.

துன்பங்களின் நடுவே தான் பிரீனுக்கும் மற்றத் தோழர்களுக்கும் ஒரு பெரிய இன்பம் மட்டும் எப்பொழுதும் இருந்து வந்தது. எத்தனையோ துயரங்களின் நடுவிலும் அவர்களுடைய ஆருயிர் நண்பன் ஸீன் டிரீஸி வேடிக்கையாகப் பேசி அவர்களுடைய கவலைகளை மாற்றிச் சந்தோசப்படுத்தி வந்தான்.

நாக்லாங்கில் டிரீஸியின் வாயில் குண்டு பட்டதால், அவன் வெகுநாள் துன்பப்பட நேர்ந்தது. தான் பிரீனோ சுவாசப்பையிலும் உடம்பிலும் குண்டு பட்டுக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். டிரீஸி ஒருநாள் அவனைப் பார்த்து, "நண்பா! உன்னுடைய தலையை எனக்குக் கொஞ்ச நாள் இரவல் கொடுத்து வாங்குவாயா? என்வாய் புண்ணாயிருப்பதால் சாப்பிட முடியவில்லை. உன்வாய் புண்ணாயில்லாவிட்டாலும் நீ சாப்பிட மறுக்கிறாய். நாம் வாய்களை மாற்றிக் கொள்வது நலம்!" என்று கூறினான். யாவரும் கொல்லென்று சிரித்தனர். மற்றொரு நாள் இரவில் அவர்கள் கல்வென் வழியாகத் திப்பெரரிக்குச் சைக்கிள்களிற் சென்று கொண்டிருந்தனர். அந்தப் பிரதேசம் முழுவதும் இராணுவச் சட்டம் அமுலில் இருந்தால் பட்டாளத்தார் எங்கும் திரிந்துகொண்டிருந்தனர். ஆதலால் அனைவரும் அதிக வேகமாய் சைக்கிள்களை ஓட்டிக்கொண்டு சென்றனர்.

**தமிழில் ப.ராமஸ்வாமி**

(பயணம் ...தொடரும்)

---

தமிழகத்தின் பிரபல நடிகர்
ஒருவர் உட்பட சில முக்கிய
பிரமுகர்கள் பற்றி
கவியரசு கண்ணதாசன்
எழுதி பெரும் சர்ச்சை
கிளப்பிய தொடர். 41

# அரங்கம் அந்தரங்கம்

"கற்பகம் விஷயம் உங்களுக்குத் தெரியும் அல்லவா...?" என்று கேட்டேன்.

"கைது செய்யும்போது நான்தானே கூட இருந்தேன்!" என்றார்.

"ஐயையோ! நம்மால் முடியாது!" என்று டெலி:போனை வைத்து விட்டார்.

ஆட்சியில் இருப்பவன் கீழே இறக்கப்பட்டு அவன் மேல் விசாரணை ஆரம்பமாகி விட்டால், அவனது குடும்ப வைத்தியரே, வைத்தியம் பார்க்க மாட்டாரே!

கடைசியில் ஒரு வக்கீலைப் பிடித்தேன்.

அதுவரை கிரிமினல் வக்கீல்களிடம் போக வேண்டிய அவசியமே நாராயணசாமிக்கு இல்லாததால், அவருக்கு யாரையுமே தெரியாது.

நான் பிடித்த வக்கீலின் பெயர் வெங்கட்ராமன். மிகத் திறமையுள்ள வக்கீல் என்று பெயர். அவரிடம் இருக்கும் ஒரே நல்ல குணம் கேஸ் நடக்கும்போது கோர்ட்டுக்கு வரமாட்டார். இருபத்திநாலு மணி நேரமும் சுதியிலேயே இருப்பார்.

தமிழ் நாட்டில் மதுவிலக்கைத்தீவிரப் படுத்துவது பற்றித் தமிழக அரசுக்கு யோசனை சொன்னவரே அவர்தான்.

பெரும்பணம் கொடுப்பதாகச் சொன்ன உடனேயே அவர் ஒப்புக் கொண்டு விட்டார். கோர்ட்டுக்கு வருவதாகச் சத்தியம் செய்தார்.



"வரும்போது மறக்காமல் கருப்புக் கோட்டை எடுத்து வாருங்கள்!" என்றேன்.

பெரிய பெரிய ஆட்களைப் பிடித்துப் பெரிய பெரிய வேலைகள் எல்லாம் செய்து முடித்துப் பழக்கப்பட்ட நாராயணசாமி, இந்த விஷயத்தில் நான் செய்த உதவியை வெகுவாகப் பாராட்டினார்.

அவர் காத்துக் கொண்டிருக்கும் போதே நான் குளித்துவிட்டு அவரோடு புறப்பட்டேன்.

நேரே இருவரும் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனோம்.

எங்களைக் கண்ட உடனேயே கற்பகம் கதறி அழுதுவிட்டாள்.

கௌரவமான ஒரு சபையின் உறுப்பினர் என்ற முறையில் போலீசார் நாராயணசாமியைக் கவுரவித்தார்கள்.

அன்றைக்கே எப்.ஐ.ஆர்.தயார் செய்து கற்பகத்தைக் கோர்ட்டிலே ஆஜர் செய்ய அவர்கள் ஒப்புக்கொண்டார்கள்.

காலை பதினொரு மணிக்கெல்லாம் நானும் நாராயணசாமியும் நேரே கோர்ட்டுக்குப் போனோம்.

வக்கீல் வெங்கட்ராமன் வழக்கம்போல் சத்தமிட்டபடியே உள்ளே நுழைந்தார்.

"நான் ஓர் அற்புதமான பாயிண்டைக் கண்டு பிடித்திருக்கிறேன்! என்றார்.

"நானும் கண்டுபிடித்து விட்டேன்!" என்றேன் நான்.

"என்ன...?" என்றார் அவர்.

"நீங்கள் சாப்பிட்டிருப்பது மாக்டவல் விஸ்கி!" என்றேன்.

"கொஞ்சம் சாப்பிடுகிறீர்களா, காரில் தான் வைத்திருக்கிறேன்!" என்றார்.

"நீங்கள் கேஸை ஜெயித்தவுடன் காரிலேயே சாப்பிட்டுக் கொண்டு போவோம்!" என்றேன்.

"இல்லை, மவுண்ட் ரோட்டில் காரை நிறுத்தி, அங்கேயே கீழே இறங்கிச் சாப்பிட வேண்டும்" என்றார்.

"சென்னையில் மதுவிலக்கு இருக்கிறது!" என்றேன்.

"மதுவிலக்கு, மண்ணாங்கட்டி, நான் சென்ஸ், காந்திக்குப் பிடித்த பைத்தியம்...!" என்றார் அவர்.

அப்போது கற்பகம் உள்ளே கொண்டு வரப்பட்டாள்.

அவளைப்பார்த்தபோது எனக்கே கூடக் கலக்கமாகத்தான் இருந்தது.

குற்றம் செய்திருக்கிறார்களோ இல்லையோ, கூண்டிலே நிறுத்தப்பட்டு விட்டால் கௌரவமான குடிமக்கள் கூட தங்கள் நீண்ட காலச் சேமிப்பான மானம், மரியாதையை இழந்து விடுகிறார்கள்.

இரண்டு போலீசாருக்கு நடுவே கற்பகம் நின்று கொண்டிருந்த நிலை, என்னையே கலக்கிவிட்டது.

நீதிமன்றம் துவங்கியதும் அதிக நேரம் எங்களைக் காக்கவைக்காமல் வழக்கை எடுத்துக்கொண்டார் நீதிபதி.

ஆபத்தில்லாத குற்றவாளி என்ற முடிவில் போலீசாரும் எதிர்க்காததால் உடனடியாகக் கற்பகத்துக்கு ஜாமீன் கிடைத்தது.

வக்கீல் வெங்கட்ராமனை ஆம்புலன்ஸில் வீட்டுக்கு அனுப்பிவிட்டு நானும், நாராயணசாமியும், கற்பகமும் எங்கள் கார் அருகில் வந்தபோது என் காலைத் தொட்டுக் கும்பிட்ட கற்பகம், விக்கி விக்கி அழுதாள்.

"சீச்சீ, பைத்தியம்; காரில் ஏறு!" என்றேன் நான்.

கார் புறப்பட்டது.

"மற்றவர்கள் முகத்தில் எப்படி விழிப்பேன்?" என்று கற்பகம் அழுதாள்.

"இந்தச் சமுதாயம் அப்படியொன்றும் உத்தமர்களையே வைத்திருக்கும் சமுதாயமல்ல! ஒவ்வொரு வீட்டிலுமே ஒவ்வொரு பேய்த்தனங்கள் இருக்கின்றன. நீ ஏன் கவலைப்படுகிறாய்?" என்று அவளுக்கு ஆறுதல் கூறினேன்.

**கவியரசு கண்ணதாசன்**

நாராயணசாமி வீட்டுக்கு நான் அதிகம் போனதில்லை.

காரணம், கண் மண் தெரியாமல் விடிய விடியக் குடிப்பதில் எனக்குப் பழக்கமில்லை.

குடிப்பதிலும் எனக்கொரு கணக்குண்டு.

உடம்பு கெடக்கூடாது, உளறக் கூடாது, போதையும் இருக்க வேண்டும் சாப்பாடு செல்ல வேண்டும்; தூக்கமும் வரவேண்டும்-இது ஒரு கொள்கை.


அதனால் நாராயணசாமியும் என்னை வற்புறுத்துவதில்லை.

(அந்தரங்கம் வரும்)

> இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!
>
> அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.
>
> இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!
>
> நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.
>
> இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.
>
> ~கண்ணதாசன்~

# காதலுக்கு விசா...

**நெடுந்தீவு குகன்-கனடா**



கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு படுக்கையிலிருந்த கண்ணன் கஷ்டப்பட்டு கண்விழித்து போர்வையை விலக்கி மணிக் கூட்டைப் பார்க்கிறான். நேரம் 12 ஆகிவிட்டிருந்தது. கீழே குமாரின் படுக்கையும் வெறுமையாக இருந்தது. 'இண்டைக்கு ரெஸ்ரூரன்ற் வேலை லீவெண்டதால எவ்வளவு நேரமா நித்திரை கொண்டுட்டன்... உமாவும் சூலைக்கு (ஸ்கூல்) போய்ட்டு வந்திருப்பா..! கதவு தட்டினது உமாவாத்தானிருக்கும்..' படுக்கையை விட்டிறங்கிய கண்ணன், அருகில் கிடந்த சேர்ட்டை அவசரமாகப் போட்டுக்கொண்டு கதவைத் திறக்கிறான்.

அங்கே உமா வாடிய முகத்துடன் சோகமாக நின்றிருந்தாள். "என்ன உமா ஒருமாதிரியிருக்கிறீர்... என்ன நடந்தது...? முதல்ல உள்ள வாருமன்...!" உள்ளே வந்த உமா "கண்ணன் கேஸ் வந்திருக்கு.. றிஜக்ற் தானாம், கவுஸ்மைஸ்ரர் பாத்துச் சொன்னவர்... இந்த நேரம் பாத்து மாமாவும் பேர்லின் போய்ட்டார்!" உமா கவலையோடு சொன்ன போதுதான் கண்ணன் உமாவின் கையிலிருந்த கடிதத்தைக் கவனிக்கிறான். அவளிடமிருந்து அந்தக் கடிதத்தை வாங்கிப் பார்க்கிறான்.

கண்ணன் ஜேர்மனிக்கு வந்து, இந்த முகாமுக்கு வந்த பின் அருகிலுள்ள ஜேர்மனிய குடும்பங்களுடன் பழகியும்,தனது விடா முயற்சியினாலும் ஜேர்மன் மொழியை கொஞ்சம் பேசவும், வாசித்து விளங்கிக் கொள்ளவும் கற்றுக் கொண்டதால் அந்தக் கடிதத்திலுள்ள விபரத்தை விளங்கிக் கொண்டான்.

"என்ன உமா.. இதுக்குப் போய் யோசிக்கிறீர்... இது வழமையா எல்லாருக்கும் வாறது தானே.. எனக்கு மூண்டு மாசத்தில வந்திட்டுது... உமக்கு ஒருவருசத்தால வந்திருக்கு..." கண்ணன் சாதாரணமாகச் சொன்னபோது, "இல்லை கண்ணன்... எனக்குப்பயமா இருக்கு.. இப்பிடித்தானே எங்கிட பக்கத்து ரூம் தவம் அண்ணை ஆக்களுக்கும் வந்தது. வந்து ஒருகிழமையால பொலிஸ் தேடி வந்தது.. பிறகு ஆக்களையே காணயில்லை..!" உமா பயத்தோடு சொன்னாள். "ஆரு தவம் அண்ணை ஆக்களே... அவையள் முதல்ல எங்கயோ பதிஞ்சு இடம் சரியில்லை எண்டு இங்கு பதிஞ்சவையளாம்.. அது பிடிபட்டுட்டுது.. அதுதான் பொலிஸ் தேடி வந்தது... அவையள் கேஸ் றிஜக்ற் எண்டதும் சுவிசுக்கு போய்ட்டினம்.. இஞ்சே நீர் சும்மா பயப் பிடாதையும்.. லோயருட்டக் குடுத்து அப்பில் எடுத்தா, பிறகு என்ன பயம்...? எதுக்கும் நான் லோயருக்கு ஃபோன்பண்ணி ரேர்மின் எடுக்கிறன்..." என்றவன் அவளின் பதிலுக்கு காத்திராமல் ஃபோனை எடுக்கிறான்.

அவன் ஜேர்மன் மொழியில் கதைப்பது உமாவுக்கு கொஞ்சம் விளங்கியும், விளங்காததுமாக இருந்தது. ஃபோனை வைத்துவிட்டு "2 மணிக்கு ரேர்மின் தந்திருக்கிறார்... கொண்டு போய் குடுப்பம்.. இஞ்சே நீர் சும்மா யோசிக்காதையும்...!" என்றவன் உமாவை பக்கத்தில் இழுத்து ஆதரவாக அவள் தலையை வருடினான். "சரி... சரி... முதல்ல போய் குளிச்சிட்டு வாங்க.. நான் ரீ வைக்கிறன்...!" என்றவள் அவனை பொய் கோபத்தோடு வெளியே தள்ளுகிறாள்.

"அது சரி கண்ணன் லோயர் காசு ஏதோ கொண்டு வரச்சொன்னதுமாதிரி இருந்துது!" வெளியே போகப்போன கண்ணனைக் கேட்கிறாள் உமா. "ஓமோம்... அது 200 மார்க்தான்.. நான் வைச்சிருக்கிறன்...!" என்று சாதாரணமாகச்சொன்ன கண்ணனை பார்த்து "அப்ப அம்மாவுக்கு காசு அனுப்ப வேணும் எண்டு சொன்னீங்க..?" கேட்கிறாள். "அது அடுத்த மாசம் அனுப்பலாம்.. இப்ப ஒண்டும் அவசரமில்லை...!" என்றபடியே குளியலறையை நோக்கிச் செல்கிறான் கண்ணன். குளியலறைக்குள் வந்தவன் உமாவைச் சந்தித்த அந்த நாட்களை நினைத்துப் பார்க்கிறான்.

கண்ணன் ஜேர்மனியில் அந்த தற்காலிக முகாமில் தங்கியிருந்தபோதுதான், அங்குவந்த உமாவை முதன் முதலில் சந்திக்கிறான். சொந்தங்களைப் பிரிந்து எங்கோ ஒருமூலையில் அகதியாய் நின்றவனுக்கு, உமாவுடன் ஏற்பட்ட நட்பு ஆறுதலாக இருந்தது. அந்த நட்பு நாளடைவில் காதலாக மலர்ந்துவிட அவர்களுக்கு அந்த அன்னிய வாழ்க்கையும் சந்தோசமாக மாறியிருந்தது.

கண்ணனின் அகதிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட கடிதம் வந்தபோதுதான் உமா ஆடிப்போனாள். "இப்ப என்ன கண்ணன் செய்யிறது..? நீங்க வேற ஏதாவது நாட்டுக்குப் போக வேணுமே..?.." உமா கவலையோடு கேட்டபோது "சீ... இதுக்குப் போய்... ஏன் யோசிக்கிறீர்...?.. இப்ப அப்பீல் எடுத்தா முடிவு வர ரெண்டு, மூண்டு வருசமாகும்..." கண்ணன் சாதாரணமாகச் சொன்னான். "எனக்கும் இன்னும் ஒருமுடிவையும் காணயில்லை.. எனக்கும் இப்பிடியே றிஜக்ற் வந்திட்டா ரெண்டுபேருமா ஃபிரான்சுக்கோ, சுவிசுக்கோ போயிடலாம்..." அவனது பதிலில் ஆறுதலடையாதவளாக உமா சொல்லிக் கொண்டாள். "இஞ்சேரும்.. உமா சும்மா கண்டதையும் யோசிக்காதையும்... நான் எப்பிடியும் கனடா போறதெண்ட முடிவோட தான் இருக்கிறன்... நான் போன உடன உம்மை களவாவோ, இல்லை ஸ்பொன்சர் பண்ணியோ கூப்பிடுவன்.. நீர் ஒண்டுக்கும் யோசிக்காதையும்..." கண்ணன் நம்பிக்கையோடு சொன்னான். "இப்ப... இப்படித்தான் சொல்லுவீங்க... பிறகு கனடா போனதும் என்னை மறந்திட்டு நல்ல சீதனத்தோட அக்கா பாக்கிற யாரையும் செய்யிறீங்களோ... என்னவோ..?.." உமா பகிடியாய் சொன்னபோது "சீ... இவ்வளவு நாளா என்னோட பழகின நீரே என்னை இவ்வளவுதான் புரிஞ்சுகொண்டிருக்கிறீர்..." கண்கள் கலங்க கண்ணன் எங்கோ பார்த்தபடி சொல்கிறான். "ஐயோ... என்ன கண்ணன் இது..? நான் பகிடிக்குத்தானே அப்பிடி கேட்டனான்... இதுக்குப் போய்....!" கண்ணனிடம் அந்த மாற்றத்தை எதிர்பாராத உமா அவனருகில் சென்று ஆதரவோடு அவன் கண்களைத் துடைக்கிறாள்.

"கண்ணன்.. எவ்வளவு நேரமா குளிக்கிறீங்க...? ரீயும் ஆறப்போகுது.. கெதியா வாங்கோ..!..." உமாவின் குரல்கேட்டு கண்ணன் சுயநினைவுக்கு வருகிறான்.

★★★

"என்ன... உமா ஏதோ அவசரமா கதைக்கவேணும் எண்டு வரச்சொல்லிப் போட்டு... இப்பிடி பேசாம இருக்கிறீர்...?" தூரத்தில் விளையாடிக்கொண்டிருந்த ஜேர்மன் சிறுவர்களையே பார்த்துக்கொண்டு மௌனமாக இருந்த உமா கண்ணனின் குரல் கேட்டு திரும்பினாள். "அது வந்து கண்ணன் உங்களோட ஒரு முக்கியமான விஷயம் கதைக்க வேணும். ரூமில கதைக்க ஏலாது.. அதுதான் இங்க வரச்சொன்னன்..." அவனது முகத்தைப் பார்க்காமல் எங்கோ பார்த்தபடி உமா சொன்னபோது கண்ணனுக்கு வியப்பாக இருந்தது.

"என்ன.. உமா.. ஏதாவது பிரச்சனையா...? மாமா வந்தவராம்..ஏதும் சொன்னவரா...? இல்லை கேசைப்பற்றி யோசிக்கிறீரா...?-அதுதான் நேற்றே கொண்டுபோய் லோயரிட்ட குடுத்தாச்சுதானே...!" கண்ணன் அவசரமாய் கேட்கிறான். "அதெல்லாம் ஒண்டுமில்லை கண்ணன்... நான் இப்ப சொல்லப்போற விசயத்த நீங்க ஆறுதலா கேக்கவேணும்... மாமாவோட வேலை செய்யிற ஒரு போய்க்கு என்னில விருப்பமாம்... அதுவிசயமா கதைக்கத்தான் மாமா வந்தவர்...!" உமா தலையைக் குனிந்தபடி மெதுவாகச் சொன்னாள். "என்ன.. உமா, நீர் என்ன சொன்னீர்..?..." தன்னையறியாமல் கண்ணன் சத்தமாய் கேட்டபோது தூரத்தில் ஒரு சிறுவனுடன் நின்றிருந்த வயதான ஜேர்மனிய பெண் ஒருத்தி அவர்களைத் திரும்பிப் பார்க்கிறாள். "அது... வந்து கண்ணன்... நான் இரவு முழுக்க நல்லா யோசிச்சுப் பார்த்துத்தான் நல்ல முடிவுக்கு வந்திருக்கிறன்.. அந்த போய்க்கு இங்க காட் இருக்குது... அவர மரிபண்ணினா எனக்கும் விசா கிடைக்கும்... யதார்த்தமா யோசிச்சுப் பார்த்தா உங்களுக்கும் நிலமை விளங்கும்...!" அவனை நிமிர்ந்து பார்க்காமல் உமா சொன்னபோது கண்ணனுக்கு நெஞ்சு கனத்தது. வார்த்தைகள் வெளியே வர மறுத்தன. மௌனமாக அவளையே பார்த்துக் கொண்டிருக்கிறான்.

"கண்ணன்... நான் எடுத்திருக்கிற முடிவுக்காக நீங்கள் என்னை மன்னிக்க வேணும்... இண்டைக்கு எங்களுக்குள்ள நிலமை இதுதான்... இண்டைக்கு எங்களுக்கு இங்க விசாதான் முக்கிய பிரச்சனை... இவ்வளவு காசச் செலவளிச்சு இங்க வந்திட்டு.. விசா இல்லாம ஒண்டும் செய்ய ஏலாது...!" உமா அவனிடமிருந்து ஏதாவது பதில் வரும் என நினைத்து மௌனமாக நிற்கிறாள். "என்ன... உமா சொல்லி முடிச்சிட்டீரா...? இல்லை இன்னும் இருக்கா..?.." அது வரை அவள் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்த கண்ணன் சோகமாய் கேட்டான்.

"கண்ணன் நீங்க எனக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கிறீங்க... அதையெல்லாம் நான் மறக்கயில்லை... ஆனா வாழ்க்கை எண்டுவாறபோது பிறக்ரிக்கலா யோசிக்க வேணும்... நீங்களும் ஒரு காட் வைச்சிருக்கிற பிள்ளையப்பார்த்து செய்தீங்க எண்டா பிரச்சனையே இல்லை... தயவுசெய்து இவ்வளவு நாளும் பழகினதை மறந்திடுங்க... இதில நேற்று நீங்க லோயருக்கு குடுத்த 200 மார்க் இருக்கு.. நான் போய்ட்டு வாறன்...!" என்றபடி, 200 மார்க்கை அவனருகில் வைத்துவிட்டு வேகமாக அங்கிருந்து போகிறாள். அவள் வைத்துவிட்டுப்போன காசு அங்கு வீசியகாற்றோடு அடிபட்டுப்போக கண்ணன் எங்கோ பார்த்தபடி மௌனமாக இருக்கிறான்.

# காணாமல் போனவன்

**அ.கோகுலதீபன்-நற்பிட்டிமுனை**



மேசைக் கடிகார மணி அலறிக் கொண்டிருந்தது. குமரன் மெல்லக் கையால் தடவி மணிக்கூட்டை அழுத்தி சத்தத்தை நிறுத்தினான். நிறுத்திய கையோடு தலையணைக்குக்கீழிருந்த தீப்பெட்டியை எடுத்து தீக்குச்சி ஒன்றைப் பற்றவைத்தபடி, மூலையில் கிடந்த போத்தல் விளக்கை எடுத்துக் கொளுத்தி மேசையின் மேல் வைத்தான்.

கடிகாரம் அப்பொழுது நான்கு மணியைக் காட்டிக் கொண்டிருந்தது. விடியற்பொழுதின் குளிர்காற்று உடலைச் சில்லென்று தாக்கியதால், போர்வை ஒன்றை எடுத்துப் போர்த்தபடி விலங்கியற் கொப்பியை எடுத்து உயர்தரப் பரீட்சைக்காகப் படிக்க ஆரம்பித்தான்.

தனது தந்தையைப் போல அவனும் ஒரு டாக்டராக வர வேண்டும் என்ற எண்ணமும், ஆவலும் குமரனிடம் நிறைந்திருந்தன.

படித்துக் கொண்டிருந்தவன் விடியற் காலையில் மெதுவாகக் கண்ணயர்ந்து புத்தகத்தின் மேல் சரிந்து விட்டான்.

"தம்பி..குமரா... இந்தா எழும்புப்பா... தேத்தண்ணியக்குடி!" மறுபுறம் தேனீர்க் கோப்பையுடன் நின்றிருந்தாள் அவனுடைய அம்மம்மா பொன்னாச்சி. தேனீரை எடுத்துக் கொண்டு பக்கத்திலிருந்த போத்தலைத் திறந்து சீனியைக் கையில் கொட்டியபடி அதனை நக்கிக் கொண்டு தேனீர் குடித்தான்.

"பாட்டி... இன்னைக்கு சோதின இருக்கிறதால நேரத்தோடயே சாப்பாட்ட ரெடியாக்கணும்!" சொல்லிக் கொண்டே பற்பொடியைக் கையில் கொட்டியபடி பல் துலக்க ஆரம்பித்தான்.

"நான் சீக்கிரம் சாப்பாட்ட முடிச்சிருவன். தம்பி... நீ முதல்ல காலையிலயே கோயிலுக்குப் போய் சாமிட்ட சோதின நல்லபடியா எழுதணுமெண்டு வேண்டிக்கிட்டு வாப்பா!" பொன்னாச்சி மலர்ந்த முகத்துடன் பேரனிடம் சொல்லிக் கொண்டு அடுப்படிக்குப் போய் விறகையடுக்கி தீ மூட்ட ஆரம்பித்தாள்.

தாயையும், தகப்பனையும் வன்னி மண்ணில் நடந்த கொடூர யுத்தத்தினால் இழந்துவிட்ட தன் பேரனின் நிலையை எண்ணி பொன்னாச்சியின் கண்களிலிருந்து வழமைபோல இன்றும் கண்ணீர்த் துளிகள் அரும்பின.

வன்னி மண்ணில் அல்லலுறும் எத்தனையோ குடும்பங்களைப் போல; எத்தனையோ மனிதர்களைப் போல; பொன்னாச்சியும் வாழ்ந்து கொண்டிருப்பது தன் பேரன் என்னும் உறவுக்காகவே.

நேரம் ஒன்பது மணியாகியும் கோவிலுக்குப் போனவன் இன்னும் வரவில்லை. பொன்னாச்சியின் உள்ளம் பதறியது. கோயில் பக்கம் நடக்க ஆரம்பித்தாள். வழியில் பக்கத்து வீட்டுக்காரி தென்பட்டாள். "பொன்னாச்சியக்கா... உங்க பேரன ராணுவம் புடிச்சிட்டுப் போகுதுக்கா!" ஓர் இடியைத் தூக்கி பொன்னாச்சியின் தலையில் போட்டாள்.

"ஐயோ... என் பேரன் என்ன செஞ்சான்? அவனொண்டும் அறியாத அப்பாவி.. பச்ச மண்ணு. இத யாருட்டச் சொல்லுவன்!" என்று பதறியடித்துக் கொண்டு இராணுவ முகாமுக்குள் போய்ச் சேர்ந்தாள்.

தன் பேரனுக்கு இன்று சோதனை இருப்பதாகவும் அவன் ஒன்றும் அறியாத அப்பாவியென்றும் அங்கு நின்ற ஒவ்வொரு வீரர்களிடமும் எப்படியெல்லாமோ காலில் விழுந்து அழுது மன்றாடிக் கேட்டாள். தலையிலடித்துப் பதறினாள்.

ஆனால் அவர்களோ அவளை ஏசி விரட்டினார்கள். "ஆச்சி... நாங்க அப்படி யாரையும் பிடிக்கல... ஏய் கஸ்டப்படுத்தாமே போ.. கருணாக்கரலா யன்ன ஆச்சியே.." இப்படியே அவர்கள் சொல்லிச் சொல்லி இதுவரை ஒரு வருடமாகிவிட்டது.

இப்பொழுது அவனுடைய பெயர் காணாமல் போனவர்களின் பட்டியலில் சேர்ந்துவிட்டது. எந்த பேரனுக்காக வாழ நினைத்தாளோ, இன்னும் என்றோ ஒரு நாள் அவன் வருவானென்ற நம்பிக்கையில் பொன்னாச்சி வாசலையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

# இன்டர் நெட்

**ஜெ.சூரியன்**



அசந்து தூங்கிக் கொண்டிருந்த நான் ஏதோவொரு உந்துதலினால் விழிகளை சட்டென்று திறந்து பார்த்தேன்.

ரூம் இருளில் 'கச்' சென்று கௌவிக் கிடந்தது. முதலில் எதுவும் தெளிவாகத் தெரியவில்லை. விழிகளை கசக்கி விட்டுக் கொண்டேன். நவீன் இருந்த மேஜையருகில் ரி.வி. திரைமட்டும் வெளுப்பாக தெரிந்தது. அவனைக் காணவில்லை. எழுந்து மேஜையருகே சென்றேன். "நவீன் டேய் நவீன்!" பதிலில்லை. மேஜைக்கு அந்தண்டையிருந்த சுவிச்சையமுத்தி வெளிச்சத்தைப் பரப்பிவிட்டு, நாற்காலியை கூர்ந்து பார்த்த என்னிதயம் துடிப்பை வேகப்படுத்துவதையுணர்ந்து கொண்டேன்.

கண்கள் பாதி மூடிய நிலையில் வலிப்பு வந்தடங்கியவன் போல அலங்கோலமாக கிடந்தான். கை கால்களைப் பரப்பி தலையை பின்புறம் அண்ணாந்து கிடந்த நவீனைப் பார்த்ததும் ஒரு கணம் நானாடிப்போனேன்.

இந்த இரண்டு வருடத்தில் ஒரு நாள்கூட தலைவலியென்று முகம் வாடிப்பார்த்ததில்லை. இப்படிக்கிடக்கிறானே, பதறிப்போய் அவனை உலுக்கினேன் பதிலில்லை. உடல் நெருப்பை கக்கிக்கொண்டிருந்தது. தூக்கி படுக்கையில் கிடத்திவிட்டு, கீற்றரைப் பொருத்தி தண்ணீர் சுடவைத்து இரண்டு பனடோல் மாத்திரையை உடைத்து அவனை உசுப்பி பருக வைத்து, மீளவும் படுக்கவைப்பதற்குள் என்பாடு உன்பாடென்று போச்சு.

மறுபடி பேச்சின்றி படுத்தவன் நெற்றியில் துணியை ஒடிக்கோலோனில் நனைத்து பற்றாகப் போட்டுவிட்டு, டேபிள்ஃபானை திருப்பிவைத்து பட்டனை தட்டிவிட்டேன். சிறிது நேரத்தில் ஆசுவாசமான மூச்சு பிறந்தது. விழிகளைத் திறந்தவன் பார்வையில் நிறையப் பயம் ஊடுருவி நின்றதை நானுணர்ந்தேன்.

"என்ன? என்னடா நவீன் பேயறைஞ்சவன் மாதிரி முழிக்கிறாய், ஏதுமென்றால் என்னை கூப்பிடத் தெரியாதா என்ன?" என்றேன் உரிமையுடன்.

"கூப்பிடத்தாண்டா நினைச்சேன், ஆனா, அதை... அதைப்பார்த்ததும் எனக்கு எதுவுமே ஓடலை. சத்தம் தொண்டைக்கு வெளியே வரலை" என்றான் மெதுவான நலிந்த குரலில்.

ஓர் இராத்திரி ஒரு சில மணி நேரங்களில் ஒரு சுகதேகி இப்படி மாறிப்போகவும் முடியுமா புரியாத நான் "எதை அப்பிடிப் பார்த்தாய்? போய், பிசாசு இவைகளில்தான் உனக்கு நம்பிக்கையில்லையே!" என்றேன் குழப்பமாக. "பேய் பிசாசென்றால் நானே பதிலடி கொடுத்திருப்பேன். ஆனா. இது. இது எப்படிச் சொல்றது?" என்ற நவீனின் விழிகளில் பயம் முகாமிட்டது. முகத்தில் வியர்வை மொட்டுக்களாக அரும்பு கட்டியது. மின் வெளிச்சத்தில் பளபளத்தது. இரவின் நிசப்தத்தை அதிரவைத்தவண்ணம் மெயின் ரோடில் கனரக வாகனம் போய்க் கொண்டிருந்தது என்னவோ போலிருந்தது. காற்றின் சூழற்சிக்கு ஜன்னல் கதவு மூடித்திறந்த வேகத்தில் ஒரு விநாடி துணுக்குற்றவனாக என்கைகளைப் பற்றிய நவீனின் கரங்களின் நடுக்கம் என்னை குழப்பியது. அசாத்திய துணிச்சலான இவன் இந்தளவுக்கு பாதிக்கப் படுவதென்றால்..?

"என்ன.. என்னடா நவீன் உன்பார்வை, பேச்சு, பயம் எனக்கு எதுவுமே புரியலை. ஏதாவது கெட்ட கனவு கண்டியா..?"

"விழித்துக் கொண்டிருந்தாலும் கனவு வருமாடா?" குழந்தை போல கேட்டான். அந்த கெம்யூட்டரில் பல சாதனைகள் படைக்க எண்ணி அயராது முயன்று கொண்டிருந்த புத்திசாலி.

அதிகம் படிப்பதனால் சிலரைத் தாக்கும் மனோவியாதி இவனையும் பீடித்து விட்டதா? திக்கென்றது மனசு. "இதோ பார் நவீன்! விழித்துக் கொண்டே கனவு காணமுடியுமா என்ன? கற்பனையில்தான் சஞ்சரிக்க முடியும்!" என்றேன் அழுத்தமாக. "அப்போ அது கற்பனையென்கிறாயா? நான் விழித்துக் கொண்டுதானே இருந்தேன்!"

"இல்லை. நான் தூக்கிவந்து படுக்கையில் போடும்போது நெருப்பாக காந்தியது உடம்பு. நான் பயந்தே போனேன்.."

"அது.. அதுக்கப்புறம்...?"

"எதுக்கப்புறம்...?"

"நான் கொம்யூட்டர் செற்பண்ணிக் கொண்டிருந்தேனல்லவா...?"

"ஆமா நானும் எப்போதும் போல அதைப்பார்த்தவண்ணம் தூங்கிப் போனேன்!"

"நான் வழக்கம்போல, இன்டநெட்டில் தொடர்புகளைப் போட்டு அதன் நுட்பங்களை அறிய முயன்று கொண்டிருந்தேன். அந்நேரம்...!" மேலே பேசமுடியாமல் மூச்சு திணற நிறுத்தினான்.

"மேலே சொல்லுடா. இதுக்குப் போய் திணறுகிறாய்..?"

"இப்பிடித்தான் சொல்லுவாய். அந்தக் காட்சிகளைப் பார்த்திருந்தால். நானாவது உயிருடனிருக்கிறேன்!" என்றவன் தொடர்ந்தான்.

"டேய் என்னைப் பயித்தியமென்று நினைக்காதே. புதிதாக ஏதாவது கண்டு பிடிக்கும் ஆவலில் துடிப்புடன் விரல்களை பரவவிட்டுக் கொண்டிருந்தபோது, ஓர் அலையடித்ததுபோல திரை மடிந்தடங்கியது. அதன் பின்னர் திரையில் தெரிந்த வர்ணம் என் விழிகளை, விரல்களை அசைக்க விடவில்லை. உற்றுப் பார்த்தேன். எத்தனை காட்சிகள். நிகழ்வுகளின் நிழல்களாக. பல நூற்றாண்டுக்கு முற்பட்டவைபோல சில அழிவுகள். மனித உடல்களின் அழிவுகள், அவலங்கள். அந்தரவெளியில் ஆவிவடிவில் காற்றில் மிதந்து மிதந்து மறைந்து கொண்டிருந்தன. அந்தப் புதிய உலகில் சமீபத்தில் சூரத்தில் நடந்த பூகம்பத்தின் பாரிய பிளவுகள், ஏன் வெனிசுலாவில் சில தினங்களுக்கு முன்னேற்பட்ட வெள்ளப் பெருக்கிலிறந்து விட்டதாக கணிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மனித உயிர்களின் விவரணங்கள் நிரை, நிரையாக, கூட்டமாக, அந்தந்த வாக்கில் என்னால் நம்பமுடியவில்லை. அதை நான் பார்த்து மலைத்து நின்றபோதுதான், நமது நாடு, மக்கள் போல ஒரு காட்சி விரிந்தது. அதில்.. அதில்..." மேலே பேசமுடியாமல் கேவிக், கேவி, அழுதான் நவீன்.

"ஏண்டா என்ன சொல்கிறாய்?" என்றேன் குழப்பமாக,

"ஆமாடா, எங்கள் மனிதரிடையே என் அம்மா, தங்கச்சி, பக்கத்துவீட்டுப் பாலு மாமா, இன்னும் யார், யாரோ அம்மாவை, தங்கையை அந்த ஆவியுலக மனிதரிடையே பார்த்ததும் மேலே என்னால் எதையும் அநுமானிக்க முடியவில்லை. அவ்வளவுதான். நீ வந்து என்னை எழுப்பும்வரை எதுவும் தெரியவில்லை!" என்றவனை, நான் சந்தேகமாகப் பார்த்தேன். சந்தேகமில்லை மூளை குழம்பித்தான் விட்டது என்ற எனது சிந்தனையைக் கலைத்தது சடுதியாக அலறிய டெலிஃபோன் மணி. எடுத்தேன். என் நாடி நரம்பெல்லாம் சுண்டியது போல வலித்தது. நவீனைப் பார்த்தேன். அவனது தவிப்பு, பயம், பார்த்ததாக சொன்னவை அந்தச் செய்தியுடன் சேர்த்து மிகவும் குழப்பியது.

நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் நவீனின் அம்மா, தங்கை, ஷெல்வீச்சினால் சிதறுகாயாக உடைந்து போன தகவலை தாங்கி நின்றவன் கேட்டேன். "பக்கத்து வீட்டு பாலு...?"

அவரும்தானென்றபோது எனக்குள் பல முடிச்சுக்கள் விழுந்து உணர்ச்சிகளை முறுக்க மூச்சு வாங்கியது. அப்படியென்றால், நவீனின் கண்டு பிடிப்பு, ஓ! சாத்தியமா! யுகம் மாறும் போது இப்படியொரு நிகழ்வை மனிதனுக்கு தருமா. விஞ்ஞானம் ஒப்புக் கொள்ளுமா. மெய்ஞானம் சரி என்னுமா. இல்லை அதிசய கற்பனாவாதியென சொல்லி சாக்கிரட்டீஸ், டாவின்ஸி, அரிஸ்டாட்டில் வரிசையில் நவீனும் சேர்க்கப்பட்டு விடுவானா? மனக்குழப்பம் போல செவிகளும் ஏதோவொரு இரைச்சலில் துவள திரும்பினேன். இரவு நவீன் ஆப் பண்ணாத ரி.வி. இரைந்து கொண்டிருந்தது ஏதோவொரு உண்மையை உணர்த்தத் துடிப்பது போல்.

சூரியன் சூடாறியிருந்தான்.

தென்றலுக்குச் சேதிபோய்விட்டது. வெயிலிலே வியர்த்து வேதனையுற்றிருந்த மலர்களின் மேனியில் வந்து ஊர்ந்தது.

மேனி புளகமுற்ற மலர்கள் வானை நோக்கி மெல்ல தலையசைத்து சிலிர்த்துக் கொண்டன. தென்றலுக்கு நன்றி சொல்லின.

மலர்களைத் தழுவிய பரவசத்தில் தென்றலுக்கும் மயக்கம். உற்சாக மிதப்பில் ஊரெல்லாம் சுற்றிவந்தது.

மார்க்கமின்றி மெய்சோர அமர்ந்திருந்தாள் நந்தினி.

காதல் நினைவு எரிக்க ஆரம்பித்துவிட்டால், உயர்ந்த சிந்தனைகளுக்கோ, உலகம் பழிக்குமே என்ற வெட்க உணர்வுகளுக்கோ, ஏது இடம்?

காமம் அவளுடலில் பசலையாகப் பகிரங்கப்பட்டிருக்க, அலையடித்து இரைச்சலிடும் கடல் போலப் பரந்த காமம் அலைக்கழிக்க நொந்திருந்தாள் நந்தினி.

# அவனிருந்தால்...!

பூக்களிடம் தென்றல் வாங்கி வந்த வாசனைச் சேதி, நந்தினியின் நாசிக்கும் எட்டியது.

வானை நோக்கி விரிந்திருந்த மலர்கள் மகிழ்ச்சியில் கூத்தாடுவதையும் பார்த்தாள்.

உஷ்ணத்தை இழந்திருந்த ஒளி, மலர்களிலும் மரங்களிலும் குளங்களிலும் கோபுரங்களிலும் தன் மாலை நேரக்கவிதையை எழுதியது.

தேன் குடித்திருந்தது பொழுது

கப்பல் நடுவே நின்றிருந்தாலும் கப்பலினுள்ளே தீப்பிடித்துக் கொண்டது போல அனல் மூச்சுக்களைக் காற்றில் கலந்தபடி அமர்ந்திருந்தாள் நந்தினி.

தண்மைப் பொழுது சிருஷ்டித்த தணலாக அவள் இருந்தாள்.

தொடுகையில் குளிரவைக்கும் மந்திர விரல்களுக்குரியவன் வெளியூர் போயிருந்தான்.

பாங்கோடிச் சிலை வளைத்துப் படை அநங்கன் விடுபாணம் தடுத்தாட

வெளியே யாருக்கும் சொல்லி ஆற்ற முடியாத... அகத்தே சுட்டு உருக்கும் வெந்தீ, புறச் சூழலின் குளுமையால் மேலும் பொங்கியெரிய.... இந்நோய், மாற்றுதலுக்கு உள்ள ஒரெயோரு மருந்தை நினைத்தாள்.

அவனோ வெளியூர் போயிருந்தான்....

அவனிருந்தால்...

அவள் சூட்டைத் தன் அங்கங்களால் ஒற்றி எடுப்பான். மேனியெங்கும் விளையாடும் விரல்களினால் அவள் வெம்மையை உறிஞ்சிக் கொள்வான். உதடுகளால் அவள் உடல் நனைப்பான். உயிருக்குள் தேன் ஊற்றும் அந்த ஒத்தடங்களால்.... தணல் குளிர்ந்து தண்ணீராகும்.

கள்வன்!

தன் கண்களாலேயே என்னைக் கதற அடித்துவிடுவான். உப்பங்கழியிலுள்ள மீன்களை மீன்கொத்திப் பறவைகள் கொத்தி உண்பதுபோல, என் உடலில் மேயும் அவன் கண்கள், உயிரையுமல்லவா துளையிடும்!



இருந்தாலும் அவன் அங்கங்ளினுள்ளே கரைந்துவிடுதல் தான் எனக்கு இன்பம் தரும். கீழுதட்டைக் கடித்தாள் நந்தினி.

# இலக்கிய நயம்

இந்த உதட்டினை மட்டும் அவன் சுட்டு விரலுக்கும் கட்டைவிரலுக்குமிடையே அழுத்தியபடி சொல்வான்.

"இந்தச் சிவப்பு முழுவதையும் நான் எடுத்துக் கொண்டு உன் இதழ்களை வெளுப்பாக்குவேன்..."

கன்னங்கள் மட்டுமல்லாது, அவள் உடலெல்லாம் அந்திவானமாகிவிடும்.

பொங்கும் பேரழகை அவன் அள்ளிப் பருகுவான்.

அளவுக்கதிகமாய்த் தேனைக் குடித்த வண்டு, மலருக்குள்ளேயே மயங்கி வீழ்ந்துவிடுதல் போல அவனுக்குள் புதைந்துகொள்வாள் அவள்.

கண்ணில்லாதவன் ஒரு சிலையின் அழகை தன் ஸ்பரிசத்தாலேயே அறிந்துகொள்ள முயல்வது போல, இந்த மூச்சுவிடும் சிலையை அவன் முழுவதுமாய்ப் பரிசோதிப்பான்.

இவள் உடற் கலங்கள் அத்தனையும் அவனது பரிவான மீட்டலில் பசியாறும்.

நந்தினி தன் உடலை மூடி கைகளால் இறுக்கிக் கட்டிக் கொண்டாள். கைகளுக்குள் அவள் உடல் நடுங்கியது.

வாய்விட்டுக் கத்திவிடுவோமோ என்று பயந்தாள்.

அண்ணாந்து மேலே பார்த்தாள்.

அகன்ற வானத்தில் வளைந்த சிறகையுடைய பறவைகள் விரைந்து பறந்து கொண்டிருக்கின்றன. கருவிருள் வரப்போகின்றது.

இரைதேடப் போன பறவைகள் இருப்பிடம் திரும்புகின்றன. தங்கள் வசிப்பிடமான கடம்ப மரத்தை நோக்கி விரைகின்றன. பசியோடு தம்மை எதிர்பார்த்துக் காத்திருக்கும் பிள்ளைகளின் வாயிலே திணிப்பதற்கு இரையைக்கவ்விக் கொண்டு பறந்து கொண்டிருக்கின்றன.

இரையுடன் உயரே பறக்கும் இந்தப் பறவைகளை அவரும் காணத்தானே செய்வார். பிள்ளைகளிடத்தே உள்ள அன்பால், அவர்களின் பசிதீர்க்க விரைந்து பறக்கும் இந்தப் பறவைகள் அவரது உள்ளத்திலும் பரபரப்பை உண்டாக்காமலா இருக்கும்?

உண்டாக்கினால் அவரும் இப்பறவைகளைப் போல் என்னிடம் விரைந்து ஓடி வரமாட்டாரா?

எழுதுவது

## முழடிலவ்யன்

**ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து**
**அளிய தாமே கொடும்சிறைப் பறவை;**
**சிறைஉற ஓங்கிய நெறிஅயல்**
**மராஅத்த**
**பிள்ளை உள்வாய்ச் செரீஇய**
**இரை கொண்டமையின் விரையுமால்**
**செலவே.**

*(குறுந்தொகை : 92)*

# சிந்தியா பதில்கள்

✪ சிந்தியா, பெண்ணின் வாள் அவளுடைய நாக்குத்தான். உனது கருத்து?

ந.கனகலிங்கம், பொகவந்தலாவ.

*பெண்ணின் ஆயுதம் நாக்குத்தான் என்றால், ஆணுக்கும் ஏதாவது ஆயுதம் இருக்க வேண்டுமே என்று யோசித்த போது, இந்தக் கதை ஞாபகம் வந்தது.*

*வெளியூரில் கூலியாளாய் வேலைபார்த்துக் கொண்டிருந்த ஒருவனுக்கு, வீட்டிலிருந்து தந்தி வந்தது. தந்தியில் அவனது மனைவி நான்கு குழந்தைகள் பெற்றுள்ளதாக எழுதப்பட்டிருந்தது.*

*எனவே, கூலி வேலையை விட இன்னும் அதிக, வருமானமுள்ள வேறு வேலை ஒன்றைத் தேட வேண்டும் என்று அவன் தீர்மானித்தான்.*

*பல இடங்களுக்கு விண்ணப்பித்தான். ஒரு நிறுவனத்திலிருந்து அவனுக்கு அழைப்பு வந்தது.*

*நேர்முகத் தேர்வில் நிறுவன அதிகாரி கேட்டார்:*

*"உனக்கு பொருள்களை விற்பனை செய்யும் தகுதி உள்ளதா? தட்டச்சு தெரியுமா? கொம்ப்யூட்டரை இயக்கத் தெரியுமா?...."*

*அவன் மிகவும் வருத்தத்துடன் ஒவ்வொரு கேள்விக்கும் "தெரியாது!" "தெரியாது!" என்றே கூறினான்.*

*"அப்படியானால் உன்னால் என்னதான் செய்ய முடியும்?" என்று சலித்துப்போய் அதிகாரி கேட்டார்.*

*உடனே அவன் தன் பையில் வைத்திருந்த, வீட்டிலிருந்து வந்திருந்த அந்தத் தந்தியை எடுத்துக் காட்டி, "இதில் தெளிவாக உள்ளது; படித்துப் பாருங்கள்!" என்றான்.*

◎⊙

✪ காதலித்து கவலைப்படுபவர்களுக்கு ஓர் அறிவுரை கூறமுடியுமா?

இராமன் விஜி, வாழைச்சேனை.

*அடுத்த கேள்விக்கு வாருங்கள்.*

◎⊙

✪ வைரமுத்து பாடல்களிலிருந்து பிடித்த வரி ஏதேனும்...?

அ.கோகுலதீபன், நற்பிட்டிமுனை.

*மொட்டுகள் உடைந்தால் கொடி துடிக்காது! காதலின் வழியில் வலி கிடையாது.*

◎⊙



‘வெற்றிக் கொடி கட்டு’ படத்தில் பார்த்திபன்–மீனா

✪ ரூபவாஹினியில் புதிய செய்தி அறிவிப்பாளர் ஒருவர் தமிழ்ச் சொற்களை விழுங்குகிறாரே, கவனித்தீர்களா?

த.சபேஷ், மட்டக்களப்பு.

*விழுங்குவதை நாம் ‘கருணைக் கொலை’யாக எடுத்துக்கொள்ள வேண்டும். இன்னும் சிலர் கடித்துத் துப்புகிறார்கள். தனியார் வானொலிகளில் பலர் முறுக்கிப் பிழிந்து சித்திரவதை செய்கிறார்கள்... பாவம் தமிழ்! கடல் கொண்டபோதுகூட இவ்வளவு கவலைப்பட்டிருக்காது.*

◎⊙

✪ ப்ளீஸ் சிந்தியா! குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கக் கூடிய ஜோக் ஒன்று சொல்ல மாட்டீர்களா?

சிவபாலன் அகல்யா, மண்டூர்-02.

*ம்... மண்டூருக்கு வந்து ட்றக்ரர் பெட்டியில் அல்லது மினி வேனில் பயணம் செய்தபடிதான் அதைச் சொல்ல வேண்டும்.*

◎⊙

✪ மனதில் ஒன்றை வைத்துக் கொண்டு வெளியில் ஒன்றைப் பேசுபவர்கள் பற்றி...?

ரூமியா, பன்கொள்ளாமட.

*உறவு கலவாமை நன்று.*

◎⊙

✪ சிம்ரன், மீனா, தேவயாணி மூவரில் குடும்பப் பாங்கான வேடங்களில் ஜொலிப்பவர் யார்?

வி.ஜெகநாதன், வவுனியா.

*அடடா! இதுவல்லவோ கேள்வி!*

*முதலில் ‘குடும்பப் பாங்கான’ என்ற வார்த்தையை வாபஸ் பெறுங்கள். ‘அதென்னது குடும்பப்பாங்கு என்று பெண்ணியவாதிகள் கோபித்துக் கொள்வார்கள். ரேவதி-ரம்பாவின் அதிசய இணைப்பு சிம்ரன். குழந்தைத்தனமான முகபாவனைகளும் துருதுருப்பும் தேவயாணியின் பலம்.*

*ஆனால் நீங்கள் சொல்லும் ‘குடும்பப் பாங்கை’ அறிந்துகொள்ள அவர் முதலில் நடித்த ‘தொட்டாச் சிணுங்கி’யை அல்லது அவர் அறிமுகமான ஹிந்திப் படங்களைப் பார்க்க வேண்டும். அதிலெல்லாம் சில்க்ஸ்மிதா ரேஞ்சுக்கு நடித்திருப்பார் தேவயாணி.*

*மிஞ்சியிருப்பவர் மீனா. ஹா... அந்தக் கண்கள்! சமீபத்தில் வெளியாகியிருக்கும் ‘உன்னருகில் நானிருந்தால்’ படத்தில் ஒரு காட்சி. மீனா வீட்டில் குடியிருக்க நேர்ந்துவிட்ட பார்த்திபன், கொலுசு வாங்கி வந்து நீட்டுவார். எதுக்கு என்று கோபப்படுவார் மீனா. ‘இது காலில் இருந்தால் சத்தம் போடும். நேத்து நடந்ததுபோல் எக்குத் தப்பா பாத்ரூமில் உங்களை நான் அப்படிப் பார்த்திருக்க வேண்டி வந்திருக்காது’ என்பார் பார்த்திபன். கோபம், நாணம், பதை பதைப்போடு உள்ளே அந்தச் சிலிர்ப்பும் நினைவில் வந்தது தெரிய... "சீச்சீ...!" என்று முகத்தைத் திருப்பிக் கொள்வார். கவிழ்ந்தோம், போங்கள்!*

◎⊙

✪ தனியார் வானொலிகளைப் பற்றி எல்லோரும் தலையடி விமர்சனம் செய்கிறார்களே. சிந்தியா என்ன நினைக்கிறீர்கள்?

வீ.கதிர்வேலாயுதன், வெள்ளவத்தை.

*அவர்கள் கேட்கும் வானொலிகள் பற்றித்தானே அபிப்பிராயத்தையும் சொல்ல முடியும்.*

◎⊙

✪ அவுஸ்திரேலியாவில் முதலாவது போட்டியிலேயே பாகிஸ்தானின் வெற்றி எப்படி?

கு.பிரியம்வதா, கொழும்பு-13.

*நம்ம முரளிதரன் பிரச்சனை என்று மட்டுமில்லாமல், பொதுவாகவே அவுஸ்திரேலிய நடுவர்களின் போக்கு சரியானதாக இல்லை. ஆனால், அக்தர் மீண்டும் பந்து வீச வந்த முதலாவது ஓவரின் போது, அவுஸ்திரேலிய பார்வையாளர்கள் அளித்த கரகோஷ வரவேற்பும், பரிசளிப்பின்போது பாகிஸ்தான் வீரர்களின் விளையாட்டைப் பாராட்டிப் பேசிய அவுஸ்திரேலிய கப்டன் ‘ஸ்டீவ் வோ’ வின் பேச்சும் என்னைக் கவர்ந்தது. நம்மவர்கள் இந்தப் பண்புகளைக் கவனித்துக்கொள்ள வேண்டும்.* ■

## தென்னாபிரிக்கா விஜயம்

டெஸ்ட் மற்றும் ஒரு தினப் போட்டிகளில் பங்கேற்பதற்காக தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி வருகின்ற பெப்ரவரி 16ம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளது.

தென்னாபிரிக்க அணி இந்தியாவுடன் 2 டெஸ்ட் மற்றும் 5 ஒரு தினப் போட்டிகளில் விளையாடவுள்ளது.

தென்னாபிரிக்கா இந்திய அணிகள் மோதும் போட்டிகள் பற்றிய விபரங்கள் வருமாறு:

**டெஸ்ட் போட்டி**

1வது டெஸ்ட் பெப்ரவரி 24–28 மும்பை
2வது டெஸ்ட் மார்ச் 01–05 பெங்களூர்

**ஒரு தினப் போட்டிகள்**

1வது ஒருதினப் போட்டி மார்ச் 9 பரோடா
2வது ஒரு தினப் போட்டி மார்ச் 11 நாக்பூர்
3வது ஒரு தினப் போட்டி மார்ச் 14 ஜம்ஷெட்பூர்
4வது ஒரு தினப்போட்டி மார்ச் 17 பரிதாபாத்
5வது ஒரு தினப் போட்டி மார்ச் 20 கோவா அல்லது கொச்சி.

## "மீண்டும் இடம் பிடிப்பேன்!"

"இந்திய கிரிக்கெட் அணியில் மீண்டும் இடம்பிடிப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது" என இந்திய அணியின் முன்னாள் கப்டன் முகமட் அஸாருதீன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்;

"அவுஸ்திரேலியாவில் நடைபெறும் 3 நாடுகள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியில் இடம் பெறுவேன் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் ஏனோ தேர்வு செய்யப்படவில்லை. இது எனக்கு மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது.

அறுவைச் சிகிச்சைக்குப் பின் உள்ளூர்ப் போட்டிகளில் சிறப்பாகவே விளையாடி வருகிறேன். தேர்வாளர்கள் ஏன் என்னைப் புறக்கணித்து வருகிறார்கள் என்று தெரியவில்லை.

என்னுடைய சாதனைகளைப் பாருங்கள். ஏன் நான் அணியில் இடம் பெறக்கூடாது என்று காரணம் கேட்டால், இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்கிறோம் என்று கூறுகிறார்கள்.

எனது வயதுடைய ரொபின் சிங்கும் அணியில் இருக்கிறார். என்னை ஏன் புறக்கணிக்கிறார்கள் என்பதற்கு உரிய காரணம் தெரிய வேண்டும்.

இந்தியாவுக்கு வரும் தென்னாபிரிக்க அணிக்கெதிரான போட்டிகளுக்காவது தேர்வு செய்யப்படுவேன் என எதிர்பார்க்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

அஸாரூதீன் 323 ஒரு நாள் சர்வதேச போட்டிகளில் விளையாடி அதிக போட்டியில் கலந்து கொண்ட வீரர் என்ற உலகசாதனையைப் புரிந்துள்ளார். 9 ஆயிரத்திற்கும் மேலாக ஓட்டங்களைக் குவித்து உலக சாதனை செய்துள்ளார்.

கடந்த வருடம் நடைபெற்ற உலகக் கோப்பைப் போட்டிக்குப் பின் காயம் காரணமாக நீகப்பட்டவர் மறுபடி அணியில் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ●

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 31

ஆண்டவருடைய விருப்பப்படி தமது அருளுரைகளை, தமது பூலோக வாழ்வின் இறுதி நாட்களில், தமது சீடர்களிடம் இயேசுபிரான் கூறிவந்தார். இதனால் சீடர்களின் மனநிலையில் பெரும் குழப்பமே தலையெடுத்தது. அவருடைய கூற்றைப் புரிந்து கொள்ளாத நிலையில் சிலர் இருந்தனர். இன்னும் சிலர் அச்சம் கொண்டவர்களாகவும் காணப்பட்டனர்.

இயேசுபிரான் கூறியவற்றை உரிய காலத்தில் சீடர்கள் உணர்ந்து கொள்ளும் காலம் வெகு தூரத்திலில்லை என்றும் அவர் கூறினார். இறைவனாகிய தனது தந்தைக்கும் உள்ள நெருக்கமான உறவை எண்ணிப் பார்க்காமல் இருப்பவர்களே தீங்கு விளைவிப்பதற்கு முயலுகின்றனர் என்று கூறிய இயேசுபிரான், தான் ஏற்கனவே கூறிய கருத்துக்களை மீண்டும் சிந்தித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொண்டார்.

சீடர்களின் குழப்பத்தையும் துயரத்தையும் கண்ணுற்ற இயேசுபிரான் இவ்வாறு கூறினார்:

### தூயஆவியின் செயல்

"தொடக்கத்திலேயே நான் இவற்றை உங்களிடம் சொல்லவில்லை; ஏனெனில் நான் உங்களோடு இருந்தேன்.

காலத்தில் என்னைக் காண்பீர்கள்." அவருடைய சீடருள் சிலர்,

இவ்வாறு இயேசுபிரான் கூறியவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த அவருடைய சீடர்கள் சிலர், "இன்னும் சிறிது காலம் மட்டும் என்னைக் காண்பீர்கள்" என்றும் பின்னர் காண மாட்டீர்கள் என்றும் கூறுகிறாரே! 'நான் தந்தையிடம் செல்கிறேன்' என்றும் சொல்கிறாரே!' சிறிது காலம் என்று எதனைக் குறிப்பிடுகிறார்?' இவ்வார்த்தைகள் எதனையும் புரிந்து கொள்ள முடியவில்லையே!" என்று தமக்குள் பேசிக் கொண்டனர்.

இத்தகைய குழப்பநிலை மீண்டும் தமது சீடர்களிடம் ஏற்பட்டிருப்பதை உணர்ந்த இயேசுபிரான்,

அவர்கள் தம்மிடம் கேள்வி கேட்க விரும்புவதை அறிந்து அவர்களிடம் கூறியது: "இன்னும்சிறிது காலத்தில் நீங்கள் என்னைக் காணமாட்டீர்கள்; மீண்டும் சிறிது காலத்தில் என்னைக் காண்பீர்கள்" என்று நான் சொன்னதைப் பற்றி உங்களிடையே சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள். உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்: நீங்கள் அழுவீர்கள்,

டுத் தந்தையிடம் செல்கிறேன்.."

இயேசுபிரான் இவ்வாறு அளித்த விளக்கத்தைத் தொடர்ந்து, "இப்போதுதான் உருவகம் எதுவுமின்றி வெளிப்படையாகப் பேசுகிறீர். உமக்கு அனைத்தும் தெரியும். யாரும் உம்மிடம் கேள்வி கேட்கத் தேவையில்லை. என்பது எங்களுக்கு இப்போது புரிந்துவிட்டது. இதிலிருந்து நீர் கடவுளிடமிருந்துதான் வந்தவர் என்பதை நம்புகிறோம்!" என்றனர் சில சீடர்கள்.

### காலம் வந்துவிட்டது

இயேசு அவர்களிடம் மேலும் விளக்கமளித்தார். இயேசு அவர்களைப் பார்த்து, "இப் போது நம்புகிறீர்களா! இதோ! காலம் வரு கிறது; ஏன், வந்தேவிட்டது. அப்போது நீங்கள் சிதறடிக்கப்பட்டு ஒவ்வொருவரும் அவரவர் வீட்டுக்கு ஓடிப்போவீர்கள்; என்னைத் தனியே விட்டு விடுவீர்கள். ஆயினும் நான் தனியாய் இருப்பதில்லை. தந்தை என்னோடு இருக்கிறார். என் வழியாய் நீங்கள் அமைதி காணும் பொருட்டே நான் இவற்றை உங்களிடம் சொன்னேன். உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு, எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின் மீது வெற்றி கொண்டுவிட்டேன்" என்றார்.

இவ்வாறு சீடர்களிடம் கூறியபின்னர்

## நம்பிக்கை பிறந்தது



இப்போது என்னை அனுப்பியவரிடம் போகிறேன்; ஆனால் உங்களுள் எவரும் "நீர் எங்கே போகிறீர்?" என்று என்னிடம் கேட்காமலேயே நான் சொன்னவற்றைக் குறித்து துயரத்தில் மூழ்கியுள்ளீர்கள். நான் உங்களிடம் சொல்வது உண்மையே. நான் போவதால் நீங்கள் பயனடைவீர்கள். நான் போகாவிட்டால் துணையாளர் உங்களிடம் வரமாட்டார். நான் போனால் அவரை உங்களிடம் அனுப்புவேன். அவர் வந்து பாவம், நீதி, தீர்ப்பு ஆகியவை பற்றி உலகினர் கொண்டுள்ள கருத்துக்கள் தவறானவை என எடுத்துக் காட்டுவார்.

### தவறான கருத்துக்கள்

பாவம் பற்றிய அவர்கள் கருத்து தவறானது; ஏனெனில் நான் தந்தையிடம் செல்கிறேன்; நீங்களும் இனி என்னைக் காண மாட்டீர்கள். தீர்ப்பு பற்றிய அவர்கள் கருத்து தவறானது; ஏனெனில் இவ்வுலகின் தலைவன் தண்டனை பெற்றுவிட்டான்.

நான் உங்களிடம் சொல்ல வேண்டியவை இன்னும் பல உள்ளன. ஆனால் அவற்றை இப்போது உங்களால் தாங்க இயலாது. உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார். அவர் தாமாக எதையும் பேசமாட்டார்; தாம் கேட்பதையே பேசுவார்; வரப்போகிறவற்றை உங்களுக்கு அறிவிப்பார்.

அவர் என்னிடமிருந்து கேட்டு உங்களுக்கு அறிவிப்பார். இவ்வாறு அவர் என்னை மாட்சிப்படுத்துவார். தந்தையுடையவை யாவும் என்னுடையவையே. எனவே தான் 'அவர் என்னிடமிருந்து பெற்று உங்களுக்கு அறிவிப்பார்' என்றேன்.

"இன்னும் சிறிது காலத்தில் நீங்கள் என்னைக் காணமாட்டீர்கள்; மீண்டும் சிறிது

புலம்புவீர்கள்; அப்போது உலகம் மகிழும். நீங்கள் துயருறுவீர்கள்; ஆனால் உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும்.

### ஒரு தாயின் மகிழ்ச்சி

பிள்ளையைப் பெற்றெடுக்கும் போது தாய் தனக்குப் பேறுகாலம் வந்துவிட்டதால் வேதனை அடைகிறார். ஆனால் பிள்ளையைப் பெற்றெடுத்த பின்பு உலகில் ஒரு மனித உயிர் தோன்றியுள்ளது என்னும் மகிழ்ச்சியால் தம் வேதனையை அவர் மறந்துவிடுகிறார்.

இப்போது நீங்களும் துயருறுகிறீர்கள். ஆனால் நான் உங்களை மீண்டும் காணும் போது உங்கள் உள்ளம் மகிழ்ச்சி அடையும். உங்கள் மகிழ்ச்சியை யாரும் உங்களிடமிருந்து நீக்கிவிட முடியாது. அந்நாளில் நீங்கள் என்னிடம் எதையும் கேட்கமாட்டீர்கள். நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதை எல்லாம் அவர் உங்களுக்குத் தருவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இதுவரை நீங்கள் என் பெயரால் எதையும் கேட்டதில்லை.

கேளுங்கள்; பெற்றுக் கொள்வீர்கள். அப்போது உங்கள் மகிழ்ச்சியும் நிறைவடையும்.

நான் உங்களிடம் உருவகமாகவே பேசி வந்துள்ளேன். ஆனால் காலம் வருகிறது. அப்போது உருவகங்கள் வாயிலாய்ப் பேசாமல், தந்தையைப் பற்றி வெளிப்படையாய் எடுத்துரைப்பேன். அந்நாளில் நீங்கள் என் பெயரால் வேண்டுவீர்கள். அப்போது 'உங்களுக்காகத் தந்தையிடம் கேட்கிறேன்' என நான் சொல்லமாட்டேன். ஏனெனில் தந்தையே உங்கள்மீது அன்பு கொண்டுள்ளார். நீங்கள் என்மீது அன்பு கொண்டு, நான் கடவுளிடமிருந்து வந்தேன் என்று நம்புவதால்தான் தந்தையும் உங்கள் மீது அன்பு கொண்டுள்ளார். நான் தந்தையிடமிருந்து உலகிற்கு வந்தேன். இப்போது உலகைவிட்

இயேசுபிரான் வானத்தை அண்ணாந்து பார்த்தவாறு பேசலானார்.

"தந்தையே, நேரம் வந்து விட்டது. உம் மகன் உம்மை மாட்சிப் படுத்துமாறு நீர் மகனை மாட்சிப்படுத்தும். ஏனெனில், நீர் அவரிடம் ஒப்படைத்தவர்கள் அனைவருக்கும் அவர் நிலைவாழ்வை அருளுமாறு மனிதர் அனைவர்மீதும் அவருக்கு அதிகாரம் அளித்துள்ளீர்.

உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும் நீர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நிலைவாழ்வு. நான் செய்யுமாறு நீர் என்னிடம் ஒப்படைத்திருந்த வேலையைச் செய்து முடித்த நான் உம்மை உலகில் மாட்சிப்படுத்தினேன்.

தந்தையே, உலகம் தோன்றும் முன்பே நீர் என்னை மாட்சிப்படுத்தியுள்ளீர். இப்போது உம் திருமுன் அதே மாட்சியை எனக்குத் தந்தருளும். நீர் இவ்வுலகிலிருந்து தேர்ந்தெடுத்து என்னிடம் ஒப்படைத்த மக்களுக்கு நான் உமது பெயரை வெளிப்படுத்தினேன். உமக்கு உரியவர்களாய் இருந்த அவர்களை நீர் என்னிடம் ஒப்படைத்தீர். அவர்களும் உம் வார்த்தைகளைக் கடைப்பிடித்தார்கள்.

## இராஜகுமாரன்

நீர் எனக்குத் தந்தவை அனைத்தும் உம்மிடமிருந்தே வந்தவை என்பது இப்போது அவர்களுக்குத் தெரியும். ஏனெனில் நீர் என்னிடம் சொன்னவற்றையே நான் அவர்களிடமும் சொன்னேன். அவர்களும் அதை ஏற்றுக் கொண்டு நான் உம்மிடமிருந்து வந்தேன் என்பதை உண்மையில் அறிந்துகொண்டார்கள். நீரே என்னை அனுப்பினீர் என்பதையும் நம்பினார்கள். அவர்களுக்காக நான் வேண்டுகிறேன். உலகிற்காக அல்ல, மாறாக நீர் என்னிடம் ஒப்படைத்தவர்களுக்காகவே வேண்டுகிறேன். அவர்கள் உமக்கு உரியவர்கள்.

"என்னுடையதெல்லாம் உம்முடையதே; உம்முடையதும் என்னுடையதே. அவர்கள் வழியாய், நான் மாட்சி பெற்றிருக்கிறேன். இனி நான் உலகில் இருக்கப்போவதில்லை. அவர்கள் உலகில் இருப்பார்கள். நான் உம்மிடம் வருகிறேன். தூய தந்தையே! நாம் ஒன்றாய் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி நீர் எனக்கு அளித்த உம் பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்தருளும்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை [பு.ஆ] 28 விடை:** ☛ பரிசேயர் மீது இருந்த பயம்

**பரிசு பெறுவோர்:**

1. **தேவசுந்தரி ஆறுமுகம்,** உப்புவெளி, திருகோணமலை.
2. **எஸ். றூபி,** தாழ்வுபாடு வீதி, மன்னார்.
3. **எஸ். துஷான்,** ரோயல் கல்லூரி, கொழும்பு-07.
4. **லெ. தவமணி,** பாண்டிருப்பு-02, கல்முனை.
5. **டி.எஸ். கிளின்டன்,** இல.01, சமகிகம, பவ்வாகம, நாவலப்பிட்டி.

**திருமறை [பு.ஆ] 31** வினா :- இயேசு உலகை விட்டு எங்கே செல்லப்போவதாகக் கூறினார்?

ஜனவரி 22 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:

**திருமறை – பு.ஆ.31 – தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# கனடாவில் கந்தசாமியார்

**(காதிலை பூ கந்தசாமியார் கனடாவில் உள்ள தனது உறவினரைப் பார்ப்பதற்காகச் செல்கிறார்.**
**கட்டுநாயக்கா விமானத்தில் ஏறி கனடா ரொரண்ரோ விமான நிலையத்தில் வந்து இறங்குகிறார். விமான நிலையத்தை விட்டு வெளியேறுகிறார். கந்தசாமியின் மருமகன் வரவேற்பதற்காக நிற்கிறார். இலங்கையில் இருந்து கனடாவில் குடியேற வரும் உறவினர்களை வரவேற்பதற்காக எம்மவர்கள் ரொரண்டோ விமான நிலைய மண்டபத்தில் கையில் பூச்செண்டுகளுடன் நிற்பதைக் காண்கிறார்.)**



**கா.பூ.க:-** ஃபோன் மணி அடிக்கேக்கையிலேயே கிறீஸ் அண்ணை எடுக்கிறார் எண்டாய். என்னண்டு கண்டு பிடிச்சனி.

**மருமகன்:-** அது மாமா இங்கு ஃபோனிலை எங்களுக்கு அடிக்கிறவரின்ட பெயரும் அவரின்ட ஃபோன் நம்பரும் அல்லோ விழும். அதை வைத்துக் கொண்டுதான் சொன்னனான்.

**கா.பூ.க:-** அது சரி கிறீஸ் அண்ணையண்டு நீ சொல்ல, நான் நினைச்சன் யாரோ வெள்ளைக்காரனல்லோ எனக்கு எடுக்கிறான் போல கிடக்கு என்று.

**கா.பூ.க:-** எட தம்பி! என்னடா இவ்வளவு எங்கட சனம் கூட்டமாக நிற்குதுகள்?

**மருமகன்:-** அது மாமா இலங்கையில் இருந்து ஸ்பொன்சரிலை வருகிற தங்கட உறவினர்களை வரவேற்க கூட்டமாக வந்திருக்கினம். ஒரு நாளைக்கு எவ்வளவு சனம் வந்து இறங்குதுகள் தெரியுமோ மாமா?

**கா.பூ.க:-** அது சரி என்ன கையிலை பூச்செண்டு வெச்சிருக்கினம்?

**மருமகன்:-** உறவினர்களை வருவேற்க கையிலை பூச்செண்டை வைச்சிருக்கினம். இது எல்லாம் இங்கு சிம்பிள் மாமா. போகப் போக விளங்கும் கனடாவைப்பற்றி.

**கா.பூ.க:-** ஒரு காலத்திலை கட்டுநாயக்கா விமான நிலையத்திலை எங்கட ஆட்கள் கூட்டமாய் போய் வழி அனுப்பி வைச்சினம். இப்ப காலம்மாறி கனடா விமான நிலையத்திலை பூக்களுடன் நிக்கினம். யாரு நினைச்சிருப்பம், இப்படியொரு நிலை எங்களுக்கு வரும் என்று?

(பின்பு காரில் ஏறி மருமகன் வீட்டை நோக்கி போகிறார்) போகும் வழியில் எங்கட ஆக்களை வீதியில் காண்கிறார். தமிழ் எழுத்துக்களில் பல கடைகள் கந்தசாமியாரின் கண்களுக்கு படுகின்றன.

**கா.பூ.க:-** எங்கட ஆட்களின் கடைகள் இஞ்ச எக்கச்சக்கமாய் இருக்குது போல கிடக்கு. எங்கட சனங்களும் ஏராளமாய்த்தான் வந்து இறங்கிட்டுதுகள் எண்டு நினைக்கிறன்.

**மருமகன்:-** ஓம் மாமா ஆமிக்காரண்ட சென்றிப் பொயின்ட் போல சந்திக்குச் சந்தி எங்கட கடைகளும் எங்கட சனங்களும் பெருகிக் கொண்டுதான் வருகினம்.

(கந்தசாமியார் மருமகன் வீட்டை சென்று அடைகிறார். அங்குபோய் உட்கார்ந்ததும் டெலிஃபோன் மணி அடிக்கிறது. எல்லா டெலிஃபோன் கோலும் கந்தசாமியாருக்குத்தான்)

உறவினர்கள்-ஊரவர்கள்-ஊர்நிலைமைகளை அறிகிறார்கள்.

**கா.பூ.க:-** என்ன வந்த நேரத்தில் இருந்து பார்க்கிறன், ஒரே ஃபோன் கோலாய் இருக்குது. ஏதாவது ஓசி ஃபோன் கதைக்கினமா?

**மருமகன்:-** இல்லை மாமா ரொரண்டோவிற்குள்ளே கதைக்கிறது என்றால் ஓசிதான். எங்கட ஆக்களும் இங்கேயும் ஊரிலை இருந்த மாதிரியே இருக்கினம். அதுதான் ஃபிறி ஃபோனிலை அறம்புறமாய் அடிக்கினம். வீட்டிலை என்ன கறி சமைச்சம் எண்டதிலை இருந்து நாட்டிலை சண்டை நிலவரம் வரை சுடச்சுட எங்களுக்கு கிடைக்கும்.

**கா.பூ.க:-** ஊரிலை என்டா சந்திலையும் தேத்தண்ணி கடையிலையும் தான் புதினங்களையும் அறியலாம். இஞ்ச எண்டால் சும்மா கண்ட செய்திகள் முதல் வருகுது போல கிடக்குது. நல்ல ஒரு நாடு போலத்தான் கிடக்குது.

(ஒரு ஃபோன் கோல் வருகிறது. மருமகன் ஃபோனைப் பார்த்தவுடன் சொல்கிறார் "மாமா கிறீஸ் அண்ணை எடுக்கிறார்!" என்கிறார். ரிசீவரை தூக்கியவுடன், "தம்பி கந்தசாமி வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்டன்." "ஓம் அண்ணை லைனில நில்லுங்கோ!" என்று சொல்லியபடி, "மாமா உங்களுக்கு கிறீஸ் ஃபோன்!" என்கிறார் மருமகன். கந்தசாமியாரால் குரலை கண்டு பிடிக்கமுடியவில்லை. "யார் கதைக்கிறியள்?" என்று திருப்பிக் கேட்டார். பின்பு "நான்தாண்டா கிருஸ்ணபிள்ளை!" என்றதும் கந்தசாமியாருக்கு யார் என்று தெரிய வந்தது. (இருவரும் ஊரில் பழைய நண்பர்கள்) அரைமணி நேரமாக இருவரும் கதைத்துவிட்டு ஃபோனை வைக்கிறார் கந்தசாமியார்)

**மருமகன்:-** இங்கு இப்படித்தான் பெயரைச் சுருக்கித்தான் கூப்பிடுகிறாங்க...! கிருஸ்ணபிள்ளையை கிறீஸ் எண்டும், கிறீஸ் அண்ணையின்ட அவவை ஆன் அக்கா எண்டும் கூப்பிடுகிறனாங்கள்.

**கா.பூ.க:-** என்னடா மனிசிக்கு பெயர் அன்னலட்சுமி என்ட அருமையான பெயரல்லோ? கிருஸ்ணபிள்ளையை கிறீஸ் என்றியள். அன்னலட்சுமியை ஆன் என்றியள். இது என்னடா கருமம் பிடிச்ச நாடாக இருக்குது?

**மருமகன்:-** அது ஏன் அப்படி பெயர் வந்தது எண்டா, ஊரிலை இருந்து வந்த நாளிலிருந்து வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடக்குதுகள் என்று மகன்காரன் படிச்ச இங்கிலீஸ் வகுப்புக்கு அல்லோ இரண்டு பேரையும் பிடிச்சு அனுப்பினவராம். பொழுதும் போகும் பேரப்பிள்ளைகளுக்கும் பதில் சொல்லலாம் எண்டுதான் அனுப்பினவராம். அங்கு போனா இங்கிலீஸ் வாத்தியார் இரண்டு பேரையும் அறிமுகம் செய்து போட்டு, பெயரைச் சொல்லேக்கை வாத்தியாரின்ட பல்லு கொழுவிப் போட்டுதாம். வெள்ளைக்கார வாத்தியல்லோ அவர்தான் பெயரைச் சுருக்கி வைத்தவராம். எண்டு ஆன் அக்கா சொன்னா. சும்மா சொல்லக்கூடாது. அப்படி கூப்பிடுகிறது அவையளுக்கு உள்ளுக்கு ஒரு சந்தோஷமாம்.

**கா.பூ.க:-** அது சரி வார சனிக்கிழமை கிருஸ்ணபிள்ளை மத்தியானம் சாப்பாட்டுக்கு வரச்சொல்லி இருக்கிறான். அப்பதானாம் மகனுக்கும் மருமகளுக்கும் ஓய்வு நாளாம். வீட்டிலை நிற்பினமாம். என்னை கூட்டிக் கொண்டுபோய் விட்டிடு ராசா என்றார் கந்தசாமியார். (கந்தசாமியார் கிருஸ்ணபிள்ளை வீட்டை போய் இறங்குகிறார். பழைய நண்பரைக் கண்டதும் கட்டித் தழுவுகிறார் கந்தசாமியார்.)

**கா.பூ.க:-** என்ன எல்லோரும் நல்ல வாட்டசாட்டமாய் இருக்கிறியள். கனடாச் சாப்பாடு ஒத்துப்போகுது போல கிடக்குது.

**கிறீஸ்:-** இப்ப மெலிஞ்சல்லோ இருக்கிறன். முந்திப் பார்க்கமாட்டாய். இஞ்ச எல்லோருக்கும் ஏதோ கொலஸ்ரோலாம். அதுதான் கொழுப்புச் சத்துக்கூடி எங்கட சனங்கள் மண்டையைப் போடுதுகள். அதுதான் இப்ப எல்லாம் குறைச்சிட்டன். வாய்க்கு உருசியாக சாப்பிடுவம் என்றால், மகன் விடுகிறான் இல்லை. கறிக்கு தேங்காய்ப்பால் விட ஏலாது.

ஆட்டிறைச்சி சாப்பிட ஏலாது. ஒரே கட்டுப்பாடு. எதுக்கு எடுத்தாலும் கண்டறியாத கொலஸ்ரோலாம். நீ கொடுத்து வைச்சனீ கந்தசாமி. ஊரிலை இருக்கேக்கை கட்டுப்பாடு இருந்ததா?

வெளியிலை போய் நடப்பம் என்டால் இந்தக் குளிருக்குள்ளால எங்க வெளியில போறது?. ஒரு மூன்று மாசம்தான் வெய்யில் இருக்கும். பிறகு பழையபடி போர்த்து மூடிக்கொண்டு வீட்டுக்குள்ளே கிடக்க வேண்டியதுதான்

**க.பூ.க:-** ஊரிலை சனம் சாப்பிட வழியில்லாமல் சாகுதுகள். இஞ்ச என்னண்டா சாப்பாடு கூடிச் சாகுதுகள். என்ன செய்வம்? அது கொலஸ்ரோல் இல்லை கிறீஸ். கொல்+US+ALL விளங்கினால். அதுசரி நல்ல வீடாய் இருக்குது. வாங்கினியளோ இல்லை வாடகை வீடா?

**கிறீஸ்:-** நாங்கள் கனடா வரமுதல் மகன் ஆக்கள் வாடகை வீட்டிலைதான் இருந்தவை. நாங்கள் வருகிறோம் என்றதும், அப்பா அம்மாவுக்கு சொகுசாக இருக்கிறதுக்காக வீடு வாங்கி இருக்குதுகள். வீடு வாங்கினதும் சரி, படுறபாடும் சரி. மூன்று லட்சம் டொலராம்!

**(கிறீசும் கந்தசாமியாரும் அடுத்த வாரமும் தொடருகிறார்கள்)**


அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை
எங்களது வண்ண நகைகள் பின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
436331




## சின்னத்திரை பேபி

➡ இலத்தீன் அமெரிக்க நாடுகளின் தொலைக் காட்சித்தாரகை பிரேஸில் நாட்டைச் சேர்ந்த மரியா ட கிரேசா மெனேகல் என்பவர். போர்த்துக்கேய மொழியில் தயாரிக்கப்பட்டு ஸ்பானிய மொழியில் மொழிமாற்றம் செய்யப்பட்ட 4 1/2 மணிநேர நிகழ்ச்சி 'க்சவக்சா'- 16 நாடுகளில் காட்டப்படுகிறது.

ட கிரேசா மெனேகலுக்கு 36 வயதாகிறது. 1982ல் சிறுவர் நிகழ்ச்சிகளைத் தயாரித்தளிக்க தொலைக் காட்சியில் காலடி எடுத்து வைத்தார். இவருக்கு சிறுவர்கள் மீது ஏற்பட்ட ஈடுபாட்டின் பயனாக, 1989ல் ஒக்டோபரில் 'க்சவக்சா மெனேகல்' நிறுவனத்தை ஆரம்பித்தார். இந் நிறுவனம் பிரேஸில் நாட்டில் உள்ள வசதியற்ற சிறுவர்களுக்கு உணவு, உறைவிடம், கல்வி ஆகிய வசதிகளைச் செய்வதில் முன்னோடியாக விளங்குகிறது. எய்ட்ஸ் நோயால் துன்புறும் சிறுவர்கள், போதைப் பொருள் பாவிப்பதால் பாதிக்கப்பட்டோர், போலியோ நோயால் அங்கவீனமுற்றோர் ஆகியோருக்கு உதவி புரிவதிலும் ட கிரேசா மெனேகல் ஈடுபாடு உடையவராக விளங்குகிறார். தானே தயாரித்துப் பங்குபற்றும் தொலைக் காட்சியில் ட கிரேசா மெனேகல் இவ்வாறு தோற்றமளிக்கிறார். ■



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
323657


## சூரியக் காதல்



➡ சூரியகாந்திப் பூ காலை, மாலை வேளைகளில் சூரியனின் பக்கம் திரும்புவதை அவதானித்திருப்பீர்கள். இப்படித் திரும்புவதற்கு என்ன காரணம்?

தாவரங்கள் எல்லாம் சூரிய ஒளியை நோக்கி வளர்ந்து செல்கின்றன. அப்படித்தான் சூரியகாந்திப் பூவும் சூரிய ஒளியை நோக்கித் திசை திரும்புகிறது. இந்த இயக்கத்திற்கு 'போட்டோ ரோபிசம்' என்று பெயர்.

இந்த ஒளி உணர்வு மூலம்தான் சூரியகாந்திப் பூ திசை திரும்புகிறது. ■

## உயரமான சிலை



⬆ இந்தப் படத்தில் காணப்படும் பச்சையம்மன் காவல் தெய்வம் சிலை இந்தியாவில் உள்ள வேலூர், பரமத்தி-ஜேடர்பாளையம் என்ற கிராமத்தில் அமைந்துள்ளது.

ஆசியாக் கண்டத்திலேயே மிக உயரமான இந்தச் சிலையின் உயரம் 64 அடி ஆகும். இதன் கையில் உள்ள வாளின் நீளம் 24 அடி. இந்த வாளின் நிறை ஆயிரம் கிலோ கிராம்.

இதில் காணப்படும் கத்தியின் நீளம் 24 அடியாகவும் அதன் நிறை 500 கிலோ கிராமாகவும் உள்ளது. இந்தப் பிரமாண்டமான சிலையின் மீசையின் நீளம் மட்டும் 12 அடி ஆகும்.

இதன் நிர்மாண வேலைகள் திரு.தியாகராஜன்-திருமதி. அங்கையற்கண்ணி ஆகியோரால் 1987ல் ஆரம்பிக்கப்பட்டு 1999 ஆண்டே கட்டி முடிக்கப்பட்டது. (தகவல்+படம்:- எம்.எஸ்.மாதவன்)

## எலிசபெத் டெய்லர் ஆடை

↘ உலகப் பிரசித்திபெற்ற ஒஸ்கார் விருதுவழங்கும் வைபவம் அமெரிக்காவில் ஆண்டுதோறும் நடைபெறுவதுண்டு. ஒவ்வோராண்டும் திரையிடப்படும் திரைப்படங்களின் நடிகர்கள், தொழில்நுட்ப விற்பன்னர்கள் ஆகியோருக்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

திரைப்படங்களுடன் தொடர்புடைய விழா என்பதனால், விருது பெறுபவர்கள் மிகவும் ஆடம்பரமான ஆடை அணிகளுடன்தான் இவ்விழாவில் கலந்து கொள்வார்கள்.

ஜூலியா ரொபேட்ஸ், ஷரோன் ஸ்ரோன், உமா தர்மன் போன்ற ஹொலிவூட் நடிகைகள் ஒஸ்கார் விருது வழங்கும் வைபவங்களுக்காக அணிந்து வந்த மொத்தம் 56 ஆடைகள் மற்றும் உள்ளாடைகளை கடந்த 1999 மார்ச் 18ம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க் பட்டணத்தில் ஏலத்தில் விற்பனை செய்தனர். தர்ம கைங்கரியங்களுக்கான நிதி திரட்டும் நோக்குடன் நடந்த இந்த ஏலத்தில் பெறப்பட்ட தொகை ஏழு இலட்சத்து 86 ஆயிரத்து 120 டொலராகும். இத் தொகையினை எய்ட்ஸ் நோய் ஆய்வு நிறுவனத்துக்காக வழங்கியுள்ளனர்.

ஏலம் விடப்பட்ட ஆடைகளில் மிகக்கூடுதலான விலையான ஒரு இலட்சத்து 67 ஆயிரத்து 50 டொலருக்கு விற்கப்பட்ட நீலம் மற்றும் நாவல் வர்ண ஆடை முன்னாள் பிரசித்தி பெற்ற நடிகை எலிஸபெத் டெய்லருக்குச் சொந்தமானது. 1969ம் ஆண்டு அக்கடமி விருது பெறுவதற்காக இவ்வாடையை டெய்லர் அணிந்திருந்தார்.






எலிஸபெத் டெய்லர் ஆடை

## பிறந்தநாள் வாழ்த்து

செல்வி மஞ்சரி ரவீந்திரன்



15.01.2000

Swiss Zuchwil என்ற இடத்தில் வசிக்கும் ரவீந்திரன் சுசிமலர் தம்பதியினரின் செல்வப்புதல்வி மஞ்சரி தனது முதலாவது பிறந்த நாளை 15.01.2000 அன்று தமதில்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

வண்ண மயில் ஆட வானங்கள் பொழிந்தாட பூங்காற்று அசைந்தாட வரும் இரண்டாயிரம் ஆண்டிலே தனது முதலாவது பிறந்த நாளை கொண்டாடும் மஞ்சரிக் குட்டியை பூமழை தூவி வாழ்த்தும் அன்பு அப்பா, ஆசை அம்மா, அப்பம்மா, (கொழும்பு) அம்மம்மா, (இந்தியா) மாமா, அத்தைமார், மச்சான்மார், அண்ணாமார், மச்சாள்மார், (இலங்கை) அத்தை, மச்சான்மார் மச்சாள், அக்கா, (ஜேர்மனி) மச்சான், (லண்டன்) பெரியம்மா, (சிங்கப்பூர்) ஆசையப்பா, ஆசையம்மா, அண்ணன்மார், அக்காமார், மாமா, அத்தை, மச்சாள்மார், (இந்தியா), மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள், அனைவரும், ஆசைக்குட்டி மஞ்சரியை, இறைவன் அருளால் பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: இலங்கையின் பிரபல தமிழ் பத்திரிகைகளின் (வீரகேசரி உட்பட) சுவிஸ் விளம்பர முகவர் A..Raveendran

Brunnackerweg - 29 -4528-Zuchwil - Switzerland Tel: & Fax: 032-6853742-Natel: 079-6071443